

கோவி.மணிசேகரன்
மாண்புமிகு முதலமைச்சர்
அடுத்த இதழில் ஆரம்பம்
KALKI
6.4.86
ரூ 1.50
கல்கி


அப்பா ஜீ?
பார்லே-G!
ஏன் 'பார்லே-G'?
நீங்கள் விரும்பும் ஒரு பிஸ்கட்டிற்கு
இது சுருக்கமான, இனிய செல்லப் பெயர்.
அது பார்லே க்ளுகோ என்பதில் சந்தேகம் இல்லை.
உண்மையில் 'பார்லே-G' என கூறும்பொழுது
நேச உணர்வு மிகுதியாகிறது. தவிர இப்பெயரில் அடங்கி உள்ள
ஜீவனுள்ள அம்சங்கள்—ஜீவனுள்ள சத்து—சுவையான பால்,
கோதுமை மற்றும் சர்க்கரையிலிருந்து கிடைக்கிறது.
ஜீவனுள்ள வளர்ச்சி—ஊட்டச் சத்து நிரம்பிய
க்ளுகோ இதனை வழங்குகிறது.
ஜீவனுள்ள ருசி—இது நீங்கள் அறிந்ததே!
PARLE
Gluco
BISCUITS
PARLE
Gluco
இதன் செல்லப்பெயர் 'பார்லே-G'
இந்தியாவில் அதிக விற்பனையாகும் பிஸ்கட்.
சுவை மிக்க சத்துணவு.

• சாலைதான் இங்குள்ள பஸ் நிலையம்





• தண்ணீர்க் குழாய்க்குப் பின்புறம் பள்ளம் தோண்டி தண்ணீர் பிடிக்கிறார்கள்.....

"சாகக் கிடக்கிறான்னு சொன்னா செத்த பதினாறுக்கு வருவாங்க!"

— மனம் நொந்த ராதாபுரம் மக்கள்

இராதாபுரம் —

சுமார் ஐயாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட இவ்வூர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு தாலுகா மையம்.

பள்ளிக் கல்வித் துணை ஆய்வாளர் அலுவலகம், நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மையம், வருவாய்த் துறை அலுவலகம், சார்புப் பதிவாளர் (**Sub-Registrar**) அலுவலகம், கருவூலம் போன்ற முக்கிய அலுவலகங்கள் இங்கே அமைந்துள்ளதாலும் இது ஒரு வியாபார ஸ்தலமாதலாலும் இங்கு தினசரி ஏராளமான மக்கள் வந்து போகின்றார்கள்!

இராதாபுரத்திற்கு நாம் சென்றதும், நம் கண்களில் முதலில் தெரிந்தது, ஊரின் நடுவே கம்பீரமாகக் காட்சி தரும் நித்திய கல்யாணி கோவில்தான். இருந்த செல்வத்தையெல்லாம் இழந்து, வறியவனுகக் காட்சி தருவது போல, கோயில் குளம் நீரின்றி..... வறண்டு போய்க் காணப்படுகின்றது!

இக்கோவிலின் முன்புள்ள குறுகிய, நீண்ட சாலைதான் இராதாபுரத்தின் பஸ் நிலையமாகவும், மெயின் பஜாராகவும் இயங்கி வருகின்றது. சாலையைத் தொட்டமைந்துள்ள வருவாய்த்துறை அலுவலகம், காவல் துறை அலுவலகம், கோவிலுக்குப் போகும் வழி - இவற்றை மறைத்துக் கொண்டு, பேருந்துகளை நிறுத்துகிறார்கள். இப்படி, சாலையோரத்தில் பேருந்துகளை நிறுத்துவதற்குக் காரணம், இராதாபுரத்திற்கு என்று தனியாக ஒரு பஸ் நிலையம் இல்லாதது மட்டுமல்ல; இங்குள்ள ஹோட்டல்களில் கண்டக்டர்கள், டிரைவர்களுக்கு எல்லாமே பாதி விலைதான்! ஒரு பஸ் நிற்கும்போது அடுத்த பஸ் செல்வதற்கு போதுமான இடவசதியுமில்லை! பயணிகள் படும் அவதி கொஞ்சநஞ்சமல்ல. பேருந்துகள் நிற்காத ஒரு மூலையில் கொண்டு போய் 'பயணிகள் நிற்குமிடத்தை' அமைத்திருக்கிறார்கள். அதில் சில சோம்பேறிகள் படுத்திருக்கின்றனர்!

நித்திய கல்யாணிக் கோவிலுக்குச் சொந்தமான இரண்டு தேர்களையும்கூட, சாலை ஓரத்திலேயே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். 'அதில் புதிய தேர் ஒன்றை நாற்புறமும் இரும்புத் தகட்டினால் மூடிப் பாதுகாத்திருக்கின்றனர். அரியபல சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட விலை மதிப்பிட முடியாத பழைய தேர் ஒன்று அநாதையாகச் சாலை ஓரத்தில் நிற்கின்றது. மழையிலும் வெயிலிலும் பாதிக்கப்பட்டுச் சிற்பங்கள் சிதைக்கப்பட்டு வருகிறது. தொல்பொருள் இலாகாவாவது கவனிக்கக்

கூடாதா? இரவுநேரங்களில், பாதுகாப்பின்றி நிற்கும் அத்தேரின் அபூர்வமான சிற்பங்கள் திருடப்பட வாய்ப்பிருக்கிறது.

ஊரின் உட்பகுதிக்குச் சென்றோம். வீடுகளுக்கு முன்பு சாக்கடை ஓடைகள், மலைப் பாம்பு போன்று நெளிந்து நெளிந்து சென்றன. காலை எட்டி வைத்துத்தான் அவற்றைத் தாண்ட வேண்டும்!

தண்ணீருக்காக மக்கள் படும் அவதி கொஞ்ச நஞ்சமல்ல! கடந்த பொதுத் தேர்தலின் போது போடப்பட்ட நிலத்தடி தண்ணீர்க் குழாய்கள், ஒரு வருடத்திற்குள் துருப் பிடித்து போய் பயனற்றதாக ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஊராட்சிக் கிணறு கூட வற்றி விட்டது. மக்கள் குழாய்த் தண்ணீரைத் தான் நம்பி வாழ்கிறார்கள்.

இங்குள்ள தண்ணீர்க் குழாய்களின் மேற்பகுதியில், பைப்பைக் காணவில்லை. அதற்குப் பின்புறம் ஒரு பள்ளம் காணப்படுகிறது. அதனுள் எட்டிப் பார்த்தால்.... பூமிக்குள் போடப்பட்டிருக்கும் பெரிய சைஸ் குழாயிலிருந்து சிறு குழாய் ஒன்றை இணைத்து, அதன் வாயை ஒரு மர அடைப்பானைக் கொண்டு மூடி வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் குழாயின் வாயைக் காயத்துக்குக் கட்டுப் போடுவது போலக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

இவற்றைப் பார்த்து ஆச்சரியம் மேலிட அங்கிருந்த சமூகத் தொண்டர், எம். ஆறுமுகப் பிள்ளையிடம், "ஏன் இப்படி தண்ணீர்க் குழாய்க்குப் பின்புறம் பள்ளம் தோண்டியிருக்கிறீர்கள்? தண்ணீர் பிடிப்பதற்கு வசதியாக, மேலே குழாய் அமைத்துத் தரவில்லையா?" என்று கேட்டோம்.



* பெண்கள் கழிப்பிடத்திற்கு அருகில் கள்ளுக் கடை

அதற்கு அவர் சொன்ன பதில், எங்களுக்கு மேலும் ஆச்சரியத்தைத் தந்தது!

"தண்ணீர் பிடிப்பதற்கு வசதியாக குழாய் போட்டுத் தந்தாங்க! ஆனா, அது வழியாத் தண்ணீர் வந்தாத்தானே? மேடான பகுதியில், தரை மட்டத்திற்கு மேலே தண்ணீர் வர்றதில்லே! அதான், இப்படிப் பள்ளம் தோண்டி, அதிலேர்ந்து தண்ணீர் பிடிக்கிறார்கள்!"


இதனால் ஏற்படக்கூடிய சுகாதாரக் குறைவை நினைத்து மனம் நடுங்கியபடியே, "ஆமாம்.... நீங்க இதையெல்லாம் சம்பந்தப் பட்டவர்களுக்குத் தெரிவிப்பதில்லையா?" என்றோம்.

"அவங்களுக்குத் தெரிவிச்சு என்னங்க பிரயோஜனம்? 'சாகக் கிடக்கிறான்'னு சொன்னா, செத்த பதினாறுக்கு வருவாங்க! அவங்களை மட்டும் குற்றம் சொல்லிப் பிரயோஜனமில்லீங்க....! ஊர் மக்கள்ல பத்துப் பேர் இறங்கி பப்ளிக்கா ஒர்க் பண்ணினாத்தானே, அந்த ஊர் முன்னேறும், இல்லீங்களா?" என்றார் அவர்.

இராதாபுரத்திலுள்ள மக்களில் முக்கால் பகுதியினர் ஹரிஜனங்கள். முக்கியத் தொழில் விவசாயம்தான். தீண்டாமை, நோய், இராதாபுரத்தில் பரவவில்லை! மக்கள் எல்லோரும் ஒற்றுமையாகக் காணப்பட்டனர். அப்படியிருந்தும் ஊரின் முன்னேற்றத்துக்கு ஒன்று சேர்ந்து போராடாமலும் உழைக்காமலும் இருப்பது வியப்பளிக்கிறது.

வழியில் ஒரு வயதான பாட்டி மட்டுமே ஒரு வீட்டில் இருந்தார். அவரை அணுகி, "பாட்டி..... உங்க பேரு என்ன?" என்று கேட்டோம்.

* பூட்டியே கிடக்கும் அரசு மருத்துவமனை



"என் பேரு கனகம்மாளுங்க. வயசு வேணுங்களா? ஒரு எம்பது போடுங்க! ஆமா, நீங்க ரேஷன் கார்டு எழுதத்தானே வந்தீங்க....?" என்று அப்பாவித்தனமாகக் கேட்டார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பதற்கும், ரேஷன் கார்டுக்கும், வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கும் மட்டுமே இவர்களுடைய பெயர், வயதை நம் அரசாங்கம் கேட்பதால், அவர்களும் அப்படியே பழகிவிட்டனர். மற்றபடி இவர்கள் குறைகளைக் களைய அணுகுவோர் யார்?

"சாப்பாட்டுக்கு என்ன பண்றீங்க?"

"வயதானவங்களுக்குக் கெடைக்கும் சத்துணவுதானுங்க சாப்பாடு!"


"சத்துணவு நல்லாப் போடுறாங்களா?"

"ஏதோ போடுறாங்க! என்னைப் போல அநாதைங்களுக்கு எப்படிப் போட்டா என்னங்க? அதாவது கெடைக்குதேன்னு நிம்மதியடைய வேண்டியதுதான்!" என்று பெருமூச்சுவிட்டார் கனகம்மாள் பாட்டி.


அங்கிருந்து, இராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு வரும்பொழுது, ஓரிடத்தில், பெண்கள் கழிப்பிடத்திற்கு அருகிலுள்ள ஒரு சிறு கட்டடத்தினுள் ஆட்கள் போவதும் தள்ளாடிக்கொண்டே வருவதுமாயிருந்தனர். அங்கு என்ன விற்கிறார்கள் என்ற போர்டு இல்லை!

அந்த வழியாகச் செல்பவர்களை நிறுத்தி, விசாரித்தபோது சிலர், 'எங்களுக்கு ஒண்ணும் தெரியாதுங்க....' என்று நழுவி விட்டனர். அவர்கள் எதற்கோ, யாருக்கோ பயப்படுகிறார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

நாங்களும் விடாமல் துருவித் துருவி விசாரித்தபோது, திடுக்கிடும் செய்தி வெளிப்பட்டது. அந்தச் சிறு கட்டடத்திற்குள் கள்ளுக் கடை நடத்துகிறார்கள்!



* மாணவர் விடுதிக்கான கழிப்பிடக் கட்டடம்



* கர்ப்பிணியாய் நிற்கும் பிரசவ வார்டு

பெண்கள் கழிப்பிடத்திற்கு அருகில் முன்பு அதே கட்டடத்திற்குள் கள்ளுக் கடையை வைத்தபோது, பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். இரவு நேரங்களில், பெண்கள் அந்தப் பக்கம் போகவே முடியாத சூழ்நிலை! அந்த ஊரில், பெண்களுக்கு என்று கட்டப்பட்டுள்ள ஒரே கழிப்பிடமும் அதுதான். இதனால், பொது மக்கள் கொடுத்த புகாரின் பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில், போலீஸாரால், அங்கிருந்த கள்ளுக் கடை அகற்றப் பட்டது.

ஆனால் அவர் தலை மறைந்த பிறகு மீண்டும் அதே கட்டடத்தினுள் (போர்டு இல்லாமல்) கள் வியாபாரம் மும்முரமாக நடக்கிறது. காவல் நிலையம் அருகில் இருந்தும் கூட இதைக் கண்டுக்காமல், கண் மூடித் தூங்குகின்றது!

ஊரிலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் முன்பு குளமாக இருந்த நிலத்தில், தற்போது 'அரசு மருந்தகம்' அமைந்துள்ளது. 'மக்கள் உடல் நலத்தை உருக்குலைக்கும் கள், சாராயக் கடைகள் எல்லாம், ஊருக்குள்ளே இருக்கும் போது, அவர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் மருத்துவமனையை இவ்வளவு தூரத்தில் கட்டியிருக்கிறார்களே!' என்று நினைத்துக்கொண்டே, அம்மருத்துவமனையை அடைந்தோம்.

நாங்கள் சென்றபோது, நேரம் நண்பகல் 12.30 மணி. 'அரசு மருந்தகம்' ஊமையாக வாய்மூடிக்கிடந்தது! முன்புறமுள்ள கதவுக்கு மேல், 'திங்கள், புதன், வெள்ளி — ஆகிய மூன்று நாட்கள் மருத்துவர் இருப்பார்!' என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் பொது மக்களிடம் விசாரித்தபோது, அந்த மூன்று நாட்கள் கூட ஒழுங்காக மருத்துவர் வருவதில்லை என்றும் அதுவும் சில மணி நேரம் ஏதோ கடமைக்காக இருந்துவிட்டு, ஊருக்குக் கிளம்பி விடுகிறார் என்றும் கூறினர். மருத்துவ மனையினுள், ஒரு பரிசோதனைக் கூடம் கூட இல்லை!

நோயாளிகள் இரத்தம், சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டுமென்றால், ஐம்பது ரூபாய் செலவு செய்து, நாகர்கோவிலுக்கோ, வள்ளியூருக்கோதான் போக வேண்டும்.

அங்குள்ள இரண்டு நர்ஸுகளும், நோயாளிகளுக்கு மருந்து, மாத்திரைகளைக் கையில் கொடுப்பதில்லையாம். தூக்கித்தான் எறிகிறார்களாம். நோயாளிகள் அதைக் 'காட்ச்' பண்ணிக் கொள்ள வேண்டுமாம்!

அம்மருத்துவமனைக்குப் பின்புறமுள்ள கக்கூஸ் உடைந்து, உருக்குலைந்து காணப்படுகிறது. மருத்துவமனையின் இடது பக்கம், ஒரு பிரசவவார்டு கட்டி முடிக்கப்பட்டு, ஏழாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பிரசவமாகாமல் கர்ப்பிணியாகவே காட்சி தருகின்றது!

மருத்துவ மனையின் நிலைமையை நேரில் கண்டு, வேதனையோடு அங்கிருந்து புறப்படும் போது ஒரு வயதானவர், நொண்டியவாறே வந்து, பார்வையாளர்கள் இருக்கையில் உட்கார்ந்தார். அவருடைய இடது காலில் ஏதோ வெட்டுக்காயம். அதிலிருந்து இரத்தம் இரக்கமின்றி ஒழுகிக் கொண்டிருந்தது. வேதனை பொறுக்காமல் அவர் துடித்தார். அவரை அழைத்துச் சென்று காயத்திற்குக் கட்டுப் போட மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் யாருமேயில்லை!

"எங்களைப் போல உள்ள ஏழை பாழைங்களுக்கு உதவுறதுக்குத்தானே சர்க்காரு மருத்துவ மனை கட்டுறாங்க! ஆனா இது மாதிரி எந்த நேரமும் பூட்டிக் கெடந்தா, அதனால் யாருக்கு என்னங்க பிரயோஜனம்? எங்க ஓட்டுக்கள்தான் அவங்களுக்கு முக்கியம்; எங்க வாழ்க்கையைப் பத்தி அவங்களுக்குக் கவலையில்லீங்க!" என்று வேதனையோடு சொன்னார் அவர். அவருடைய காயத்தின் வேதனையைவிட இதயத்தின் வேதனை அதிகம் என்பதை உணர முடிந்தது!

அந்த நேரத்தில், சாவகாசமாக சைக்கிளில் வந்து இறங்கிய மருத்துவ மனை வாட்ச்மேனிடம், அப்பெரியவரின் நிலைமையை எடுத்துச் சொன்ன பிறகு, அவர் வேண்டா வெறுப்போடு அப்பெரியவரை கட்டு போட அழைத்துச் சென்றார்! வாட்ச்மேன்!

இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இராதாபுரம் ஏரியாவில் சுமார் 30 கி.மீ. சுற்றளவிலுள்ள ஒரே அரசு மருந்தகம் இதுதான். போலீஸ் கேஸ் என்றால்

கூட, இங்கு மருத்துவர் எந்நேரமும் இல்லாததால், நாங்குநேரிக்குத்தான் கொண்டு செல்கிறார்கள்!

மருத்துவ மனையிலிருந்து, அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வந்தோம். சின்னச் சின்ன கட்டடங்கள் அங்கொன்றும் இங்கொன்று



டி. எம். பண்டாரா சிவன் பிள்ளை



* காயத்தோடு காத்திருக்கும் பெரியவர்



* எச். ஆறுமுகப் பிள்ளை



* பி. கோபால்

மாகச் சிதறிக் கிடந்தன. பள்ளிக்குத் தனியாகச் சுற்றுச் சுவரோ, அல்லது முள் கம்பி வேலியோ இல்லாததால், சமீபத்திய பஞ்சாயத்துத் தேர்தல் விளம்பரங்களையும், தங்கள் சின்னங்களையும் பள்ளிக் கட்டடங்களில் எழுதி வைத்திருக்கின்றனர். அறிவியல் ஆய்வுக் கூடம், கக்கூஸ் ஒன்றையும் விட்டு வைக்கவில்லை!

அப்பள்ளி மாணவர்களிடம் விசாரித்த போது, ஜீரணிக்க முடியாத ஒருவிஷயத்தைக் கேட்டு அதிர்ந்தோம். அதாவது, பள்ளி ஆசிரியர்களில் சிலர் பள்ளி நேரத்திலேயே 'தண்ணி' அடித்துச் சீட்டு விளையாடிக் கும்மாளம் போடுகிறார்களாம். பள்ளி மாணவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்றுத் தர வேண்டிய ஆசிரியர்களே இப்படி நடக்கிறார்கள் என்பதை நம்பவே முடியவில்லை!

தலைமையாசிரியர் உட்பட யாருமே இதைத் தட்டிக் கேட்க முடியவில்லையாம். முன்பு ஒருமுறை, சில மாணவர்கள், ஒரு வாரப் பத்திரிகை நிருபரிடம் இச்செய்தியைச் சொல்லப் போய், அநியாயமாக அவர்கள் அப்பள்ளியிலிருந்தே நீக்கப்பட்டார்களாம்! மாணவர்களை அநியாயமாகப் பழி வாங்குவதைவிட, தவறு செய்பவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படும் காலம் என்று வருமோ? ஒரு சில ஆசிரியர்கள் செய்யும் தவறினால், ஒட்டுமொத்தமாக அப்பள்ளிக்கே அவமானம் ஏற்படுகிறதே!

பள்ளிக்கு அருகிலுள்ள 'அரசு மாணவர் விடுதி'க்குச் சென்றோம்! வழியிலேயே, அவ்விடுதிக்குச் சொந்தமான கக்கூஸ்கள் அத்தனையும் மேற்கூரையின்றிக் கதவுகள் இன்றிப் புராதன கால கட்டடங்கள் போலக் காட்சியளித்தன. இதுவே இப்படியென்றால், மாணவர்கள் விடுதியோ பார்க்கவே பரிதாபமாக இருந்தது!

எட்டு வயதிலிருந்து, பதினைந்து வயது வரையுள்ள சுமார் நாற்பத்தைந்து மாணவர்கள் அங்கு தங்குகின்றனர். திறந்த வெளியில் ஒரு நீண்ட செவ்வக வடிவில் அமைந்த அக்கட்டடத்தினுள் நுழைந்தோம்!

ஜன்னல்களில் ஒன்றிற்கும் சரியான அடைப்புகள் கிடையாது. தரையெல்லாம் ஒரே சோற்றுப் பருக்கைகளும், மண்ணுமாகக் காட்சியளித்தது. சுவரில் காரை பெயர்ந்து, உருக்குலைந்து போயிருக்கின்றது! சுண்ணாம்பைக் கண்ணால்கூட அவ்விடுதிச் சுவர்கள் பார்த்திருக்குமா என்பது சந்தேகம் தான்! மேற்கூரையிலுள்ள ஓடுகள் தடம் புரண்டு.... தலையில் விழும் நிலையில் இருந்தன. இரண்டு மூன்று, டியூப் லைட் ப்ரேம்கள் மட்டுமே மிஞ்சியிருந்தன. அவற்றிற்கு அருகில் சில பல்புகள் நிர்வாணமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. விடுதியின் வலது ஓரத்தில் பரிதாபத்துக்குரிய மாணவர்களுக்குசமையல்செய்யப்படுகின்றது. அந்தச் சமையல் கட்டோடு ஒப்பிடும்போது, விடுதி எவ்வளவோ பரவாயில்லை!

அங்கு தங்கிப் படிக்கும் மாணவர்களின் பரிதாப நிலையை, மாணவர் தலைவர் பி. கோபால் சொன்னார்:

''ஸார்! இது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குள்ள விடுதி. இங்கே ஒரு வசதியுமில்லை. வரும்போது கக்கூஸைப் பார்த்திருப்பீங்களே! நாங்க காலையில எங்கேயாவது ஆற்றங்கரை ஓரத்தில்தான் மலஜலம் கழிக்கிறோம். எப்பவாவது குழாயில தண்ணீர் வந்தா குளிப்போம்! விடுதின்னு பேரு. லைட் வசதிகூட இல்லீங்க. மீட்டர் கிடையாது! நாங்க எல்லாரும் சேர்ந்து பணம் போட்டு மூணு பல்புகளை வாங்கி மாட்டியிருக்கிறோம். கதவு, ஜன்னல்களுக்குப் பலகைகள் இல்லே.

''திறந்த வெளியில் இந்த விடுதி இருப்பதால், நல்லாக் காத்து அடிக்கிறப்போ உள்ளுக்கே மணல், தூசி எல்லாம் வந்துடும். மழை பெய்யிறதில்லே.... இல்லேன்னு எங்களால உள்ளே படுக்கவே முடியாதுங்க. தரையைச் சுத்தம் செய்யவோ, கழுவவோ யாருமில்லீங்க! சாப்பிட்ட இடத்திலேயே நாங்க படுக்கிறோம். சுகாதார வசதிகள் இல்லாததால் இங்குள்ள மாணவர்களுக்கு சொறி, சிரங்குகூட வந்துவிட்டது. எங்க கைகளைப் பாருங்க.....!'' என்று அம்மாணவர் சொன்னதும், பல மாணவர்கள் கையை விரித்துக் காட்டுகின்றனர். விரல் இடுக்குகளில் சிரங்குகள் காணப்பட்டன.

''வார்டன் ஒழுங்கா வர்றதில்லையா?''

''இல்லீங்க....! எப்பவாவது வருவார்; போவார். எங்களைக் கவனிக்கிறதேயில்லே.''

''சாப்பாடு எல்லாம் எப்படிப் போடுறாங்க?''

∴பாரெக்ஸ்®
முதன்முதல் தேர்வு!




ஏனெனில் புதிய மேம்பட்ட ∴பாரெக்ஸ்® முதன்முதலாக திட உணவிற்கு மாறும் குழந்தைக்கென இன்றியமையாத உட்பொருள்கள் சரியான அளவுகளில் சேர்க்கப்பட்டதாகும்.

குழந்தையின் வளர்ச்சிக்கும் மென்மையான செரிக்கும் சக்திக் கெனவும் சரியான அளவில் புரதங்களும் கொழுப்புச் சத்துக்களும் அடங்கிய தாகும் ∴பாரெக்ஸ்.

குழந்தையின் இரத்தத்தை ஆரோக்கிய மாக வைக்க இதில் போதுமான அளவு இரும்புச் சத்தும் உள்ளது.

குழந்தையின் எலும்புகளும் பற்களும் திடமாக வளருவதற்கு உகந்த விகிதத்தில் கால்ஷியம்-∴பாஸ்∴பரஸ் அடங்கியதாகும் ∴பாரெக்ஸ்.

இவை தவிர, புதிய ∴பாரெக்ஸ் கலப் பதற்கு எளிதானது...சுவைமிக்கது.



பாசத்துடன் வழங்குவோர் க்ளாக்ஸோ !

புதிய மேம்பட்ட ∴பாரெக்ஸ்®

பால் சேர்க்கத் தேவையில்லை!
நீருடன் கலந்து கொடுத்தால் போதும்.

CLARION/B/GX/10/203

ஒரு வித்தியாசமான சேவை!

மனம் நொந்து, தற்கொலைதான் எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு என்று நினைப்பவர்கள், தொலைபேசி எண் 379846-க்கு டெலிபோன் செய்தால் போதும்! சம்பந்தப்பட்டவர்களுடன் அவர்கள் மன நிலைக்கு ஏற்ப இதமாகப் பேசி, தேவைப்பட்டால் மருந்து, மாத்திரைகள் கொடுத்துச் சிகிச்சையும் அளிக்கிறார்கள். மீண்டும் அவர்கள் தெம்புடன் வாழ வழி சொல்கிறார்கள். இந்தச் சேவை முற்றிலும் இலவசம். நடப்பது பம்பாயில்! —செம்பூர் சந்துரு

''இங்கே போடப்படும் சாப்பாட்டை நாங்கதான் தின்னணும். வேறே யாரும் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாங்க. எங்களுக்குச் சத்துணவும் கிடையாது. மூணு நேரமும் சோறுதான். மத்தியானம் ஒரு சாம்பாரும், கூட்டும் தருவாங்க. மதியம் சாப்பாட்டை நாங்க இன்னும் சாப்பிடக்கூட இல்லீங்க! நாற்பத்தைஞ்சு மாணவர்களுக்குத் தந்திருக்கும் கூட்டைப் பாருங்க; சாம்பாரைப் பாருங்க; சோற்றில் ஊற்றிப் பிசையக் கூடப் போதாதுங்க! பல நேரங்களில் எங்கள் கண்ணீர்த் துளிகளைத்தான் சாதத்தில் விட்டு பிசைஞ்சு சாப்பிடுறோம்! ஒண்ணு மட்டும் சொல்றேன் ஸார்! அநாதையாய்ப் பிறந்தாலும் அரிஜனனாகப் பிறக்கக் கூடாது!'' என்று குரல் தழுதழுக்க, அம்மாணவர் சொல்லச் சொல்ல கேட்ட எங்களுக்கே இதயம் அழுதது!

அது ஒருபுறமிருந்தாலும் தங்கள் விடுதியைச் சுத்தமாக வைக்க பணியாட்கள் வர வேண்டும் என்று எதிர்பாராமல் ஏன் இவர்களே தூய்மையாக வைத்திருக்கக் கூடாது என்ற கேள்வியும் எங்கள் மனத்தில் எழத்தான் செய்தது.

மார்க்கெட்டினுள் பேருந்து நிலையத்திற்கு என அப்போதைய மாவட்டக் கலெக்டர் எம். சந்திரசேகரன் பிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்களால் 24.1.1965ல் நாட்டப்பட்ட அடிக்கல், அநாதையாக நிற்கின்றது!

கள்ளுக் கடை, சாராயக் கடை என்றால் உடனடியாக மின்சார சப்ளை செய்து தருபவர்கள், பல ஆண்டுகளாக, மின்சாரமின்றியிருக்கும் கிராம நிர்வாக அதிகாரி/வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை மட்டும் கவனிக்காமல் விட்டது ஏனோ?

அங்குள்ள நூலகமும் சரியாக இயங்குவதில்லை! இராதாபுரத்தில் தண்ணீர், மற்றும் தங்கும் வசதிகளும் இல்லாததால் எந்த அதிகாரிகளும் இங்கே தங்குவதில்லை!

இதே இராதாபுரத்தில்தான் வலம்புரி ஜான் வளர்ந்தார். இன்று வாழ்க்கையில் உயர்ந்ததோர் இடத்தைப் பிடித்துள்ள அவர், தான் வளர்ந்த ஊரை மறந்துவிட்டார், போலும்!

கடந்த பொதுத் தேர்தலில், இதே இராதாபுரம் தொகுதியில் அ.தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்ட கா.கா.தே.கா தலைவர் குமரி அனந்தன், பெரும்பான்மை ஓட்டுக்களைப் பெற்றுச் சட்டமன்ற உறுப்பினரானார். தனக்கு வாக்களித்த மக்களை, இலக்கியச் செல்வர் இப்படி அலட்சியப்படுத்தலாமா?

இந்தக் குறைபாடுகளையெல்லாம் சுமந்து கொண்டு, இராதாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர், டி.எம். பண்டார சிவன் பிள்ளையைச் சந்தித்தோம்.

சமீபத்தில் பதவி ஏற்ற பூரிப்போடு அவர் காணப்பட்டார். நாங்கள் நேரடியாகக் கண்ட குறைபாடுகளை எல்லாம் எடுத்துச் சொன்னதும், அவசர வேலையிருக்கிறது என்று தட்டிக் கழிக்காமல், ''நீங்கள் சொன்னவற்றையெல்லாம் நான் இதயத்தில் குறித்து வைத்துக் கொள்ளுகிறேன். அவற்றைக் களைவதற்கு என்னென்ன முயற்சிகள், நடவடிக்கைகள் உண்டோ அவற்றைக் காலந் தாழ்த்தாமல் செய்கிறேன். பதினாறு ஆண்டுகாலமாக, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாததால், ஊர் முழுக்கக் குறைபாடுகள் நிறைந்துவிட்டன! மக்களுக்கு உடனடித் தேவையான குடி தண்ணீர், சுகாதாரம், சாக்கடை வசதி, போக்குவரத்து வசதி இவைகளைத்தான் நாங்கள் முதலில் செய்யப் போகிறோம். மார்ச் மாதக் கூட்டத்திலேயே இதைப் பரிசிலனைக்கு வைக்கிறோம். அடுத்த தடவை, நீங்கள் இராதாபுரம் வரும்போது, தற்போதுள்ள குறைபாடுகள் நீங்கி, புது இராதாபுரமாகக் காட்சியளிக்கும்!'' என்று உறுதியளித்தார்.

"ஓராண்டுக்குப் பின் நிச்சயம் வருவோம். ஊர் மக்கள் ஒத்துழைப்புடன் நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கத்தான் போகிறோம்'' என்றோம். பார்ப்போம்!

— பானு மணாளன்

படங்கள்: ஆர். முரளி ராஜாதரன்

கடவுளை நம்பாதவருக்கு வாரியார் அறிவுரை என்ன?



கேள்வி: 'வாரியார்' என்று தங்களை எல்லாரும் அழைக்கிறார்களே? அந்தப் பெயர் யாரால் இடப்பட்டது?

வாரியார்: என் தந்தையார் மல்லையதாசர், சமானமில்லாதபெரியதமிழ்புலவர். 1906ல் ஆவணியில் சுவாதி நட்சத்திரத்தில் நான் பிறந்ததால், பெயர் ரு, ரூ, ரே, ரோ வில் வரவேண்டும். தமிழில் முதலில் இவை வராது. அதனால் 'கிருபானந்த வாரி' என்று நாமகரணம் செய்தார். 'மகம்' நட்சத்திரத்திலே பிறந்த என் தமையனார் பெயர் மதுசூதனன். கூப்பிடும்போது, ரெட்டியார், செட்டியார் போல என்னை மரியாதையாய் 'வாரியார்' என்று அழைக்கிறார்கள். வாரி என்றால் கடல் அல்லது செல்வம் என்று பொருள்படும். லௌகீகச் செல்வம் அல்ல; கிருபானந்த செல்வம், கடல்.

கேள்வி: தங்கள் இள வயது, இத்துறையில் வளர்ந்த விதம் பற்றிக் கூறுங்களேன்...

வாரியார்: என் தகப்பனார் என்னைப் பள்ளிக்கூடமே அனுப்பாமல் மூனு, மூணரை வயதிலேயே பக்கத்தில் வைத்துக் கொண்டு, இலக்கணம், இலக்கியம், சமஸ்கிருதம், சித்தாந்தம் எல்லாம் கற்றுக் கொடுத்தார். படிப்பைவிட, பண்பாடே முக்கியம் என்று அவர் சொல்லிக் கொடுத்தார். ஏழெட்டு வயதிலேயே எனக்கு கவிபாடும் ஆற்றல் இருந்தது. பனிரெண்டு, பதிமூணு வயதில் சுமார் 10,000 பாடல்களை மனப்பாடம் பண்ணிவிட்டேன். பதினேழு, பதினெட்டு வயதில் பிரபலமாய் சொற்பொழிவு செய்யத் தொடங்கிவிட்டேன்.

கேள்வி: தங்களின் துணைவியாரைப் பற்றிக் கூறலாமே!

வாரியார்: என் தாய் மாமா மகளையே கல்யாணம் பண்ணிக் கொண்டேன். அமிர்த லக்ஷ்மி என்று பெயர். குடும்பத்திலே ஈடுபட்டேனேயொழிய, இளமையிலேயே தினம் ஓர் ஊராய்ப் போனதால், பேருக்குத்தான் குடும்பம் என்று இருந்தது. இறைவன் திருப்பணி, தொண்டு இதிலேயே ஈடுபட்டதால்; குடும்பம், பாசம், நேசம் இதெல்லாம் மற்றவர்கள் மாதிரி எனக்கில்லை. வாழ்க்கை தொண்டு செய்வதிலேயே கழிந்தது.

கேள்வி: நீங்கள் இரவில் கஞ்சி மட்டுமே பருகுவதாய்க் கேள்விப்பட்டோமே?

வாரியார்: இரவில் விரைவில் செரிக்கக்கூடிய உணவு கஞ்சி. நான் இருபது வருடங்களாய் இரவில் கொஞ்சம் பால் சேர்த்த கோதுமைக் கஞ்சி மட்டுமே பருகிவருகிறேன். அது எளிதில் ஜீரணமாகி, உடல் நலத்தைப் பாதுகாக்கிறது.

கேள்வி: கடவுள் மேல் நம்பிக்கை இல்லாதவனுக்கு உங்கள் அறிவுரை என்ன?

வாரியார்: நோயாளி, வைத்தியனிடத்தில் நம்பிக்கை இல்லை என்பது எத்தனை வருந்தத்தக்கதோ, அத்தனை வருந்தத்தக்கது இதுவும். உலகில் நம்பிக்கை இல்லாமல் ஒருகணம் கூட வாழ முடியாது. முன்பின் தெரியாத டாக்சி டிரைவரை நம்பிப் பயணம் செய்கிறான்; முன்பின் தெரியாத கம்பவுண்டர் தருகிற மருந்தைச் சாப்பிடுகிறான். ஒரு கைகாட்டி மரத்தை நம்பி வழி நடக்கிறான். எனவே நம்பிக்கைதான் மனிதனை உயர்த்தும்.

கேள்வி: பெண்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?

வாரியார்: பெண்களுக்கு பக்தி அதிகம். தம் குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே ஞானியாய்ப் போன துருவன், பிரகலாதன், போன்றவர்கள் கதைகளைச் சொல்லி, அவர்களைப் பக்தியில் ஈடுபட வைக்க வேண்டும். பிஞ்சுப் பருவத்திலேயே அவர்களுக்கு நல்லொழுக்கங்கள் பற்றிய உணர்வுகளை உண்டாக்க வேண்டும்.

ஆதாரம்:

வாழ்க்கையில் முன்னேற வாரியார் பதில்கள்

(வெளியீடு: குமரி பதிப்பகம், நாகப்பட்டினம். விலை ரூ 7.50)

தொகுப்பு: மௌஷ்மி



இவர்: "அந்த எம். எல். ஏ. தன் மகனோட கல்யாணப் பத்திரிகையிலே 'வரதட்சிணை வாங்குவதும், கொடுப்பதும் சட்டப்படி குற்றம்'னு அச்சடிச்சிருந்தாரில்ல, ஆனா அவரு வரதட்சிணை வாங்கிட்டுத்தான் அப்படி விளம்பரப்படுத்திக்கிட்டாராம்."

அவர்: "பெண் வீட்டார் எப்படிச் சம்மதிச்சாங்களாம்?"

இவர்: "கேட்டதுக்கு, சாராயப் பாட்டிலிலே 'குடி குடியைக் கெடுக்கும்'னு அரசாங்கத்திலே லேபிள் அச்சடிச்சிருக்காங்களே, அது போலத்தான் இதுவும்' அப்படின்னுட்டாராம்."

— இரா. சம்பத்குமார்.

அவள்: உங்க எழுத்தாளர் அப்பா... உயிலில் என்ன எழுதி வெச்சுட்டுப் போனார்...?

இவள்: எல்லோருக்கும் நிறையத்தான் எழுதி யிருந்தார்... ஆனால் உயிலின் கடைசி வார்த்தை தான் எல்லோரையும் உலுக்கிடுச்சு...!

அவள்: அப்படி என்ன எழுதியிருந்தார்?

இவள்: 'மேலே படித்தவை கற்பனையே தவிர நிஜமில்லை' என எழுதியிருந்தார்...!

—ராஜி ராதா.





அவர்: "என்னது, உங்க ஆபீஸில் சம்பளக்கவர்களெல்லாம் ஒரு குச்சியிலே கட்டி உயரத்திலே தொங்குது. எல்லோரும் எம்பி எம்பி எடுக்கிறாங்களே, ஏன்?

இவர்: ஒண்ணுமில்லே. எல்லோரும் இந்த மாதம் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கச் சொன்னோம். அதற்கு மானேஜர் பண்ணின வேலைதான் அது!"

— அ. சுந்தரம்

"இப்பக் கூட நம்ம எம். எல். ஏ. நெனச்சா தொகுதிக்கு நிறையச் செய்ய வாய்ப்பு இருக்கு...!"


"எப்படி...?"

"இடைத் தேர்தல் மூலம்தான்...!"

— சடுவை கோபால்சாமி.



மாதம் ஒரு மாவட்டம்



கன்னியாகுமரி மாவட்ட மக்களே கவனியுங்கள்...

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

கல்கி ஏற்றிருக்கும் 'மாதம் ஒரு மாவட்டம்' சமுதாயப் பணி பற்றி அனைவருக்கும் தெரியும். அதன்படி முதல் மாவட்டமாக மதுரை மாவட்டம் பற்றிச் செய்திகள் வந்த கல்கி இதழ்களையும் அனைவரும் படித்திருப்பீர்கள்.

பெரியார் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து நமது பிரதிநிதிகள் சேகரித்து வந்த பரபரப்பான செய்திகளும், பேட்டிக் கட்டுரைகளும் இம் மாதம் 20, 27 தேதியிட்ட இதழ்களில் வெளிவருகின்றன.

மூன்றாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் இம்மாதம் மூன்றாவது வாரத்தில் நமது பிரதிநிதிகள் சுற்றுப் பயணம் செய்ய இருக்கிறார்கள்.

இப்போது நான்காவது மாவட்டமாக, முக்கடலும் சங்கமிக்கும் பெருமை கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

'எழுமின்! விழிமின்!' என்று உரத்த குரல் கொடுத்து உலகத்தையே ஒரு பழைமையான உறக்கத்திலிருந்து விழிப்படையச் செய்த சுவாமி விவேகானந்தர், தியானம் செய்யத் தேர்ந்தெடுத்த இடம் குமரிக் கரைதான் என்றாலும் இப்போது அங்கே பிரச்னைகள் இல்லாமல் போய்விடுமா என்ன?

எத்தனையெத்தனையோ முறை மனுக்கள் எழுதி அதிகாரிகளிடம், எம்.எல்.ஏ.க்களிடம் அல்லது அமைச்சர்களிடம் கொடுத்தும் பொதுப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப் படவில்லை என்றோ அல்லது தனி நபர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றோ அக்னியாய் மனம் கொதித்துக் கொண்டிருப்பீர்கள். அல்லது சரித்திரப் புகழ் வாய்ந்த உங்கள் மாவட்டத்தின் சிறப்பியல்புகள் பற்றியும், தனி மனித சாதனைகள் பற்றியும் வெளியுலகுக்குத் தெரியவில்லையே என்றும் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பீர்கள். அல்லது இன்னின்ன திட்டங்கள் தீட்டப் பட்டால் நமது மாவட்டம் வளம் கொழித்துச் செழிக்குமே என்றும் ஆதங்கப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்.

இவை பற்றியெல்லாம் நன்கு சிந்தித்துச் சுருக்கமாகக் கல்கி அலுவலகத்துக்கு உங்கள் முழு முகவரியோடு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் கடிதங்களையெல்லாம் பரிசீலனை செய்த பிறகு, முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, மே மாதம் மூன்றாம் வாரத்தில் கல்கி இதழின் பிரதிநிதிகள் குமரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்ய வருவார்கள்; உங்களை நேரடியாகச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் உங்களைச் சந்திக்க வரும் தேதி பற்றி அனைவருக்கும் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும். அப்போது நீங்கள் அவர்களிடம் ஆதாரங்களைக் காட்டலாம்; சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அவர்களை நேரில் அழைத்துச் சென்றும் காண்பிக்கலாம். பிறகு அவர்கள் உங்கள் மாவட்டக் கலெக்டரைச் சந்திக்க முயற்சி செய்வார்கள். உங்கள் குறைகளை அவரிடம் முறையிடுவார்கள். அவையெல்லாம் ஜூன் மாதக் கல்கி இதழ்களில் கட்டுரைகளாகவும், பேட்டிகளாகவும், புகைப்படங்களாகவும் வெளியாகும்.

எல்லாவற்றையும் பிரசுரித்துவிடவோ அல்லது அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டுவிடவோ முடியாது என்றாலும் பெரும்பாலானவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து அரசின் கவனத்தையும், அதிகாரிகளின் கவனத்தையும் ஈர்ப்பதோடு, சகோதர மக்களிடையேயும் ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்த முடியுமல்லவா? எனவே உடனே எழுதி அனுப்புங்கள்.

குமரி மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், அநீதிகளும், வேதனைச் சம்பவங்களும், சாதனைகளும், வளர்ச்சிக்கான ஆலோசனைகளும் கொண்ட உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசித் தேதி: 20.4.86. உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — குமரி' என்று குறிப்பிட்டால் மிகமிக உதவிகரமாய் இருக்கும்.

— ஆசிரியர்.



பயங்கரவாதிகள்
பர்னாலா
பட்டதாரிகள் தொகுதி தேர்தலில் தோல்வி
பட்டதாரிகள் தொகுதி தேர்தலில் வெற்றி
Zuna.
ஜெயலலிதா
இந்த நோட்டீஸ் உன்னை ஒண்ணுமே பண்ணாது!
நோட்டீஸ்
ராஜினாமாஸ்திரம்
இதோ அம்பை!



கல்கி

1986 ஏப்ரல் 6
மலர் 44 இதழ் 36
குரோதன பங்குனி 24



சத்துணவுத் திட்டம் கைவிடப்படுமா?

மதுவிலக்கை அமுல்படுத்த முடியாததற்கு முக்கியக் காரணம், கள்ளச் சாராய விற்பனை அதிகரிக்கிறது; அதை அருந்திப் பலர் உடல்நிலை பாதிக்கப்படுகிறார்கள்; சிலர் இறந்து கூடப் போகிறார்கள் என்று கூறப்பட்டு வருகிறது.

எந்த நல்ல காரியம் செய்யப் புகுந்தாலும் இதுபோன்ற சில இடர்ப்பாடுகள் இருக்கவே செய்யும். அவற்றைச் சமாளித்து வெற்றிகரமாக நல்ல காரியத்தை நடத்திச் செல்வதில் அரசு உறுதியுடன் இருக்க வேண்டும்.

உதாரணத்துக்குச் சத்துணவுத் திட்டத்தையே எடுத்துக் கொள்வோம். அது ஒரு நல்ல முயற்சி என்பதை யாருமே ஆட்சேபிக்க முடியாது. ஆனால் அதனால் பல சமயங்களில் கெடுதல் நேராமல் இருக்கிறதா? 'சத்துணவில் பல்லி விழுந்ததால் இருநூறு குழந்தைகள் மருத்துவமனையில்' என்பது போன்ற செய்திகளை எத்தனை தடவை நாம் நாளிதழ்களில் படித்துவிட்டோம்! கள்ளச் சாராயமாவது பெரியவர்கள் காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொள்கிற காரியம். சத்துணவில் விஷம் என்பது ஒருபாவமும் அறியாத பச்சிளம் பாலர்களைப் பழி வாங்குவதாக அல்லவோ ஆகிறது?


மதுவிலக்கினால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்று கூறுவதும் பொருந்தாது. ஏனெனில் மது விலக்கினால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுகட்டத்தான் ராஜாஜி விற்பனை வரியைக் கொண்டு வந்தார். அது இன்று காமதேனுவாகப் பல கோடிகளை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே அரசின் செலவினங்கள் ஏகத்துக்கு உயர்ந்துவிட்டன என்று வேண்டுமானால் கூறலாமே ஒழிய மதுவிலக்கினால் வருவாய் இழப்பு என்று சொல்வது மக்களை ஏமாற்றுவதாகும்.

இந்நாள்வரை, 'சத்துணவில் பல்லி' என்றும் 'சத்துணவுத் திட்டம் அமுல்படுத்தப் படுவதில் ஊழல்கள், ஒழுங்கீனங்கள்' என்றும் படித்து வந்தோம். இப்போதோ இந்தியாவின் தலைமைக் கணக்காயரே (ஆடிட்டர் ஜெனரல்) அதிர்ச்சி அளிக்கும் விதமாகப் பல குறைபாடுகளைத் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். 'ஒரு குழந்தைக்கு ஏழு கிராம் எண்ணெய் என்ற விகிதத்தில் கணக்கிடுவது அதிகம்; குழந்தைக்கு ஐந்து கிராம் எண்ணெயே போதுமானது' என்று மதுரையில் நடைபெற்ற ஒரு கலெக்டர்கள் மாநாடு தீர்மானித்தது. ஆனால் இந்தச் சரியான யோசனையை அமுல்படுத்த கிட்டத்தட்டப் பதினொரு மாதங்கள் காலதாமதம் ஆனதால் மூன்று கோடி ரூபாய் அரசுக்கு அதாவது மக்களுக்கு நஷ்டமானது! பண்டங்களை சத்துணவுக் கூடங்களுக்குச் சுற்றி வளைத்துக் கொண்டு போகாமல் குறைந்த பட்ச தூரம் உள்ள பாதையைப் பின்பற்ற வேண்டும் என்ற திட்டம் அமலாகப் பத்து மாதக் காலதாமதம் ஏற்பட்டது. இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் பத்து லட்சம்! ஆடிட்டர் ஜெனரலின் சோதனைகள், 482 இடங்களில் நிர்ணயித்த அளவுக்குக் குறைவாகவே காய்கறிகள் பயன்படுத்தப்படுவதை அம்பலப்படுத்தின. பள்ளிக்கு வந்து படித்தால்தான் சாப்பாடு என்ற நியதி மாறி, சாப்பிட மட்டுமே பள்ளிக்கு வந்துவிட்டு ஓடி விடும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இப்படி எத்தனையோ பல குறைபாடுகள் இருந்தபோதிலும் சத்துணவுத் திட்டத்தைத் தமிழக அரசு கைவிட்டுவிடுமா? விடாது, கூடாது! காரணம், சத்துணவு, வோட்டுப் பெற்றுத் தருவது மட்டுமல்ல; சத்துணவால் குழந்தைகள் மெய்யாலுமே பயனடைகிறார்கள். எனவே நல்ல முறையில் திட்டத்தை அமுல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமேயன்றி, குறைபாடுகள் உள்ளன என்பதால் சத்துணவுத் திட்டத்தையே வாபஸ் பெறக் கூடாது.

மதுவிலக்கு விஷயமும் இப்படித்தான்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.


வித்துக்கள்
சிஷ்யா

கண்ணம்மாளுக்குத் தாங்க முடியாத ஆச்சரியம், அதிர்ச்சி! பூவாகச் சிரித்துக் கொண்டு, செல்ல நாய்க்குட்டி மாதிரி வீட்டில் வளைய வந்து கொண்டிருந்த சரவணனுக்குத் திடீரென்று இந்த ரௌத்திரம் எப்படி வந்தது...? இருந்தாலும் பத்து வயதுப் பயலுக்கு இத்தனை கோபம் கூடாது.

வழக்கமாகக் கேட்பது போலத்தான் அன்று காலையில் பக்கத்துப் போர்ஷன் வனிதா மூலைக் கடையிலிருந்து 'லக்ஸ்' வாங்கி வரச் சொல்லிக் கேட்டாள். சாதாரணமாகச் சரவணன் இந்த வேலையை உற்சாகத்துடன் செய்வான். வனிதா நீட்டும் காசை வாங்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு, 'ட்ர்ர்ர்..... பீம் பீம்' என்று உதட்டசைவில் கற்பனைக் காரை உருவாக்கி அதில் ஏறிக் கொண்டு பறப்பான். ''இந்தா அக்கா லக்ஸ்'' என்று மூன்றாவது நிமிடம் வந்து நிற்பான். வனிதா, சோப்பின் மேல் உறையைப் பிரித்துத் தர, அதை ஆசையாக முகர்ந்து பார்த்துவிட்டு, பத்திரமாகச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு கற்பனைக் காரை ரிவர்ஸில் எடுத்து ஓட்டுவான். அதைப் பார்த்து வனிதா அவன் குண்டு கன்னத்தைக் கிள்ளிவிட்டுக் கல கலவென்று வெள்ளி மணிச் சிரிப்பை உதிர்ப்பாள். அவனும் அதில் சேர்ந்து கொள்வான்.

ஆனால் இன்றைக்குக் காலையில் நடந்ததே வேறு.

''சரவணா'' வனிதாவின் குரல் வாசல் படிக்கு அருகே கேட்டபோது, ஒரு மூலையில் புத்தகங்களை அடுக்கிவைத்துக்கொண்டிருந்த சரவணன், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் திரும்பிப் பார்த்தான்.

''லக்ஸ்டா! ப்ளீஸ், சீக்கிரம் வேணும்'' என்று அவள் காசை நீட்டியபோது வேண்டா வெறுப்பாய் எழுந்து போய் வாங்கிக்கொண்டான்.

அடுத்த நிமிஷம் அவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ''என்னாலே இப்பப் போக முடியாது, போ!'' என்றபடி வாங்கிய காசை விட்டெறியாத குறையாக அவள் காலடியில் போட்டுவிட்டு ஓடியே போய்விட்டான். அவன் ஆத்திரத்துடன் கொட்டிய வார்த்தைகளை ஜீரணிக்க முடியாமல் திணறி ஒரு மாதிரியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, காசை எடுத்துக் கொண்டு மௌனமாகப் போனாள் வனிதா.

சமையல் கட்டிலிருந்து இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணம்மாளுக்குப் பிள்ளையின் நடத்தை புதிராகத்தான் இருந்தது. வெளியே ஓடிப் போனவன் சரியாகச் சாப்பாட்டு நேரத்துக்குத்தான் வந்தான். புத்தகப் பையைச் சரி செய்து வைத்துவிட்டுத் தட்டை எடுத்துப் போட்டுக் கொண்டான்.

''போய்ச் சாமி கும்பிட்டுட்டு வாடா. தொரைக்கு அதைக் கூட மறந்து போற அளவுக்கு அப்படி என்ன கோபம்?'' அதட்டினாள் கண்ணம்மாள்.

முணுமுணுத்துக் கொண்டே சுவாமி படங்களின் முன்னால் போய் நின்று கொண்டான் சரவணன். கைகளைக் கூப்பிக் கண்களை மூடினான். வழக்கமாக, கண்களை மூடிக் கொண்டானானால், மனத் திரையில் பிள்ளையாரையும் முருகனையும் வெண்ணைத் தாழி கிருஷ்ணனையும் வரவழைத்துக் கொள்ள அவனால் முடியும். 'பாலும் தெளி தேனும்' இல் ஆரம்பித்து 'தீப மங்கள ஜோதி நமோ நம' முடிய துதிப் பாடல்களைத் துளிப் பிசிறில்லாமல் உதடுகள் உச்சரிக்கும். திருநீறு கீற்று நெற்றியில் பளிச்சென்று துலங்க நிற்கும் சரவணனைப் பார்த்துப் பூரித்துப் போவாள் கண்ணம்மாள்.

இன்றைக்கு..... சரவணனின் மூடிய இமைகள் படபடத்தவாறே இருந்தன. கடையோரத்தில் கண்ணீர் முத்துக் கட்டி நின்றது. நேற்றைய அவமானம் மனத்தைப் பாறாங்கல் மாதிரி அழுத்தியது. அந்த 'லேடீஸ் ஸ்பெஷல்' கண்டக்டரின் முகம் அசுரத்தனமாக வளர்ந்து, விகாரமாகி அவன் மனத் திரையை ஆக்கிரமித்தது.

நேற்று மாலை வனிதா அக்கா கோவிலுக்குப் போகத் துணைக்குக் கூப்பிட்ட போது சந்தோஷமாகத்தான் கிளம்பினான் சரவணன். துப்புரவாகக் கைகால்களைக் கழுவி, கசங்கிய உடைகளைக் களைந்து, சலவைத் துணி அணிந்து அம்மாவிடம் சில்லறை கேட்டு வாங்கிப் பத்திரமாகச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு புறப்பட்டான்....வனிதா அக்காவுடன் இணையாக ரோட்டில் நடக்க அவனுக்குப் பிடித்திருந்தது.

பஸ் ஸ்டாப்பை அடைந்ததும் ''நான் டிக்கெட் வாங்கறேன்'' என்று பெருமையாகச் சட்டைப் பையைத் தட்டியபடி சொன்னான். வனிதா சிரித்துக் கொண்டே தலையை ஆட்டினாள்.

கூட்டம் நிறைய வந்த இரண்டு பஸ்களை விட்டனர். மூன்றாவதாக வந்த பஸ், முதல் இரண்டைப் பார்க்கையில் 'காலியாகவே' இருந்தது. அது அருகே வந்ததும் சிவப்பு, எழுத்துக்கள் 'மகளிர், குழந்தைகள் மட்டும்' என அறிவிப்பது தெரிந்தது. வனிதாவைத் தொடர்ந்து பஸ்ஸில் ஏறினான் சரவணன். இன்னும் இரண்டு பெண்களும் ஏறினார்கள். முன்னால் டிக்கெட் விநியோகித்துக் கொண்டிருந்த கண்டக்டர் விசில் கொடுத்தார்.

வனிதாவுக்கு உட்கார இடம் கிடைத்தது. பக்கவாட்டுக் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்ற சரவணனுக்கு முன்னால் வந்து நின்று கொண்டாள் ஒரு சல்வார் கமீஸ் பெண். அவள் தலைப் பின்னலின் நுனி சரியாகச் சரவணனின் நாசித் துவாரத்தில் பட்டு உறுத்தியது. சரவணன் நகர்ந்து நின்றான். ஜாதிமல்லியும், சந்தனப் பவுடரும் வியர்வையும் கலந்த ஒருவித வாசனை அந்தப் பஸ்ஸில் பரவியிருந்தது.

கண்டக்டர் அருகில் வந்ததும் "இரண்டு அம்பது" என்றவாறு ஒரு ரூபாய்த் தாளை நீட்டினான் சரவணன். அவனை ஏற இறங்கப் பார்த்த கண்டக்டர் காசை வாங்காமலேயே கேட்டான்:

"உனக்கு எத்தனை வயசுடா?"

"பத்து.....

"பொய் சொல்லாதே."

"நிஜமாத்தான்....."

"யாரைடா ஏமாத்தற? ஹாஃப் பாண்ட் போட்டிருந்தா வயசு . பார்க்காம இந்த வண்டிலே ஏத்திடுவோம்னு நினைச்சியோ?"

சரவணனுக்கு குபீரென்று முகம் சிவந்தது. அந்த பஸ்ஸில் இருந்த அத்தனை கண்களும் அவனை அனுதாபத்துடன் வருடுவது தெரிந்தது. புத்தகத்துக்கு மேலாக எட்டிப் பார்த்த கண்கள், இறங்கிய மூக்குக் கண்ணாடியை ஏற்றிக் கொண்டு பார்த்த கண்கள், மை தீட்டிய கண்கள், மஸ்காரா கண்கள்.... அவனுக்கு வேர்த்துக் கொட்டியது. வேர்வை அருவியாக கால்களிலும் கழுத்திலும் வழிந்தது. உதடும் நாக்கும் வறண்டன. கம்பியைப் பிடித்த கை மட்டும் தளராமல் இறுகியது. ரூபாயை நீட்டிய கை மெல்லப் பின்வாங்கிச் சட்டைப் பையைத் துழாவியது.

அடுத்த கணம் விசில் சப்தம் கேட்டது. அனுதாபத்தை அள்ளி வீசுவதில் தாராளம் காட்டிய அந்தக் கண்களுக்குரியவர்கள் ஒருவரேனும் வார்த்தைகளை நம்பி அவனுக்கு வக்காலத்து வாங்க முன்வரவில்லை. வனிதாவும் வாயைத் திறக்காமல் எழுந்து இறங்கினாள். சரவணன் குறுகிப் போய் அவளைப் பின் தொடர்ந்தான்.

சுவாமி படங்களில் சாற்றியிருந்த மல்லிகைப் பூவின் வாசனையும் மட்டிப் பால் ஊதுவத்திப் புகை வாசனையுமாகச் சேர்ந்து அவனுக்கு வயிற்றைக் குமட்டியது.

"சரவணா" கண்ணம்மாள் பிள்ளையின் பக்கத்தில் வந்து நின்று மெள்ளத் தோளில் கை வைத்தாள். "என்னடா கண்ணு ஆச்சு?" புடவைத் தலைப்பால் அவன் கண்களைத் துடைத்தாள்.

சாப்பிட்டதும் அம்மாவின் புடவையில் கையையும், வாயையும் துடைத்துக் கொள்வதில் சரவணனுக்கு அலாதியான ஆனந்தம்.

"அதுதான் கைக்குட்டை வாங்கித் தந்துருக்கேனில்லே. அப்புறம் ஏன் இப்படி...." என்று செல்லமாகக் கடிந்து கொள்ளும் அம்மாவை பார்த்துச் சிரித்துவிட்டு நழுவி விடுவான். அவள் தேய்த்துக் குளிக்கும் மஞ்சள் பொடியின் வாசனையும் அவள் புழங்கும் சமையலறையின் வாசனையும் அந்தப் புடவையின் நெசவோடு ஒன்றிப் போயிருக்கும் — அது 'அம்மா' வாசனை.

இன்றைக்குச் சரவணனால் அந்த வாசனையைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆதுரத்துடன் கண்களைத் துடைக்க வந்த கையை விருட்டென்று உதறினான்.

அவனின் 'அர்த்தமற்ற' கோபத்தால் பொறுமையிழந்தவளாய்க் கண்ணம்மாள் கத்தினாள். "மயிலே மயிலேன்னா இறகு போடாதுடா!" பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு. நீ இப்ப சாப்பிட்டு விட்டுக் கிளம்பற வழியைப் பாரு. உன்னை நான் சாயந்தரம் கவனிச்சுக்கறேன்....."

தட்டில் வைத்த சோற்றைச் சற்று அளைந்து விட்டுச் சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி விட்டு எழுந்தான் சரவணன். வாசலில் எதிர்வீட்டுச் சுபாக்குட்டி வந்து தயாராய் நின்றது. "அண்ணா நா ரெடி" என்று மழலையில் அவனைக் கூப்பிட்டது.

"சுபாக்குட்டி அண்ணா கை பிச்சுக்கோ பாக்கலாம்" என்று அந்த மழலைக்குச் சமமாய்க் கீழிறங்கி அவள் பஞ்சுக் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அவள் ஸ்லேட்டுப் பையையும் தன் சுமைகளோடு சுமையாய்த் தூக்கிக் கொண்டுதான் பள்ளிக்குப் போவான் சரவணன். "டேய் 'சரவணா' இன்னிக்காவது உன் மனசை மாத்திக்கிட்டுச் சுபாக் குட்டியைக் கட்டிக்கிறேன்னு சொல்லமாட்டியா?" வழக்கம்போல் அவனை வம்புக்கு இழுத்தாள் சுபாக் குட்டியின் அம்மா யசோதை.

வாடிக்கையான இந்தக் கேள்விக்கு, "நான் எங்க மைதிலி அக்கா மகளைத்தான் கட்டிக்கப் போறேன். அக்காவும் அத்தானும் ஊர்லே இருந்து கடுதாசி போட்டிருக்காங்க" என்று வழக்கமான பதிலை மிகச் சாத்வீகமாகச் சொல்லுவான் சரவணன்.

அந்தக் கேள்வியின் அதீதமான அசட்டுத்தனம் அவனுக்கு இன்றுதான் முதன் முதலாக உறைத்தது. அதனுள்ளிருந்த கிண்டலும் நக்கலும் வட்டியும் முதலுமாகச் சேர்ந்து கொண்டு இன்றுதான் அவனை வதைத்தன. இத்தனை நாட்களாக இந்தக் கேள்வியை ஒரு பொருட்டாக மதித்துப் பதில் சொல்லி வந்ததின் அனர்த்தம் அவனுக்குப் புலனாயிற்று. ஒரு கணம் அவமானத்தால் குன்றிப் போனான்.

மறுகணம் அவனுள் ஒரு விசித்திரமான மாறுதல் உண்டாயிற்று. ரோட்டில் சிந்திய பெட்ரோலில் கலந்த மழை நீர் குழம்பிக் குழம்பி, ஒட்டாமல், வானவில்லின் நிறங்களைக் கக்குவது போல, அவனுள் உணர்ச்சிகளின் கலவை குழம்பிக் குழம்பிக் குமுறிற்று. அப்படிப் பொங்கியெழுந்த உணர்ச்சிகளுள் ஆத்திரத்தை மட்டுமே அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. அவனுக்கே அச்சமூட்டியது அந்த ஆத்திரம்.

ஒரு முடிவுக்கு வந்தவனாய்ப் புத்தகப் பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான். சுபாக்குட்டி மிகச் சுவாதீனமாக அவன் கையைப் பிடித்துக் கொள்ளத் தன் குட்டிக் கையை நீட்டியது. வழியில் நின்ற அவளை ஒரு நெம்பு நெம்பித் தள்ளினான் சரவணன். அடுத்த கணம், திரும்பிப் பார்க்காமல் ரோட்டில் இறங்கி ஓடினான்.

சென்னையில் 16.16 காசாகவும், பம்பாயில் 17.61 காசாகவும் டில்லியில் 16.15 காசாகவும், கல்கத்தாவில் 20.37 காசாகவும் ரூபாயின் மதிப்பு நிலவுகிறது. கர்நாடகா மாநிலத்திலுள்ள குல்பர்காவில்தான் இந்தியாவிலேயே விலைவாசி அதிகம். இங்கு ரூபாயின் மதிப்பு 15.50 காசாகத்தான் இருக்கிறது.

— லில்லி அஹமது

விஜய் வேதாளம்

பறக்கும் மண்டையோடுகள். திடீரென் எழுந்து நட்டனமாடும் எலும்புக் கூடுகள். புகையை, நெருப்பைக் கக்கிக் கொண்டு ஒரு டஜன் கிளைகளை ராக்ஷஸக் கைகளாய் விரித்துச் சட்டென்று கவ்விக் கொள்ளும் மரங்கள். வினோத அசுர ஸ்சஸ் பிராணிகள். பறக்கும் மர கருடன்.

வழக்கமான இந்தப் பக்கவாத்தியத்தோடுவிட்டலாச்சார்யாவின் கதை.

'எழில்கொஞ்சும்' என்று அடிக்கடி வர்ணிக்கப்படும் மாதவிதான் நாயகி. வேதாள பூதம் அவரைப் பிடித்திருக்க, அதை விரட்டும் மந்திரம், சரியான



சமயங்களில் நாயகன் நரசிம்மராஜுவுக்கு மறந்து போக, இடையில் சம்பிரதாயமான வில்லத் தளபதி, மாதவியைக் கவர திட்டங்கள் போட, எதிர்பார்த்த காட்சிகள்.

நாயகனுக்குத் தோழனாய் நாகேஷ். வயது ப்ளஸ். பழைய நையாண்டித் துறுதுறு மைனஸ். இதில் காதல் லீலை வேறு, பாவம்.

நாகேஷும், நரசிம்மராஜுவும் சாமியார்களின் வேஷம் போடும் போது மட்டும் நல்ல கலகலப்பு. ஒருத்தர் தேங்காய்ச் சாமியார். இன்னொருத்தர் வாழைப்பழச் சாமியார். வில்லனையும், அவன் அடியாட்களையும் இரண்டு சாமியார்களும் மாற்றி மாற்றி டபாய்கிறார்கள்.

"ரம்பா வேண்டுமா ரம்பா" என்று கேட்டு புஷ்பகக் குஷனில் அனுராதாவை இறக்கி கையைக் காலை முகத்துக்கு நேரே நீட்டி (3D படம் பாருங்கள்) டான்ஸ் ஆட வைத்து, வில்லன் கடைசியில் கட்டிப் பிடிக்கும்போது, கரடியாய் மாறி விட, கொஞ்சம் சிரிக்க முடிகிறது. ஜெயமாலினி கூடுதல் போனஸ்.

சக்ரவர்த்தியின் இசையில் அவசியப் பழைமை.

படம் முடிந்து வெளியே வரும்போது, ஒரு நல்ல மாஜிக் ஷோ பார்த்த திருப்தி மட்டுமே மிச்சம்.

—ஜெயமன்மதன்





கோடை ஆரம்பமாகிவிட்டது. பலருக்கு வெயிலின் கடுமையை விட வியர்வையை எண்ணித்தான் ஒரே பயம். அதிலும் வேர்க்குரு வந்துவிடுமே என்ற கவலையாலேயே உடல் வியர்ப்பார்கள் பலர்!

உதாரணமாக ஷீலாவை எடுத்துக் கொள்ளுங்கள். பதினேழு ஆண்டுகளாக ஒவ்வொரு கோடையிலும் வேர்க்குரு உபத்திரவத்தை அனுபவித்து அனுபவித்து விரக்தியே அடைந்துவிட்டாள். அந்த ஐந்தாறு நாட்களும் எரிச்சல், குத்தல், அரிப்பு வேறு! நைலான் போன்ற செயற்கை நூலிழை ஆடை அணிந்தால் இந்த அரிப்பு அதிகமாவதையும் காண்கிறாள் ஷீலா.

வெயில் உக்கிரமாக இருக்கும் எல்லாப் பிரதேசங்களிலும் உடல் வியர்ப்பதில்லை. காற்றில் நீராவியின் அளவு அதிகமாக இருக்கும் (Humid) பகுதிகளில்தான் அதிகம் வியர்க்கிறது. வியர்வை உலர்ந்து நீராவியாகக் காற்றில் கலக்க முடியாததால் உடலில் வழிகிறது. வேர்க்குரு தோன்றுகிறது. தோலில் பொறிப் பொறியாகச் சிவந்து காணப்படும் இந்த நிலைக்கு மருத்துவப் பெயர் — தெரிந்து கொள்ளுங்களேன்: மிலியேரி யா ருப்ரா.

இது எதனால் தோன்றுகிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தோலின் அமைப்பை ஆராய வேண்டும். மனித சருமத்தில் உள் தோல், புறத்தோல் என்ற இரு பகுதிகள் உண்டு. புறத்தோல் அடிக்கடி பொடிப் பொடியாக உதிர்ந்து உதிர்ந்து புதுப்பிக்கப்படுகிறது. இது நம் கண்களுக்குப் புலனாகாமலே ஓர் இயற்கை நியதிப்படி நடக்கிறது. உள் தோலில்தான் வியர்வைச் சுரப்பிகளும் அவற்றின் நாளங்களும் உள்ளன. சுரப்பிகள் உருவாக்கும் வியர்வையை நாளங்கள் வெளியேற்றுகின்றன. புறத்தோலுக்கு மேல் வந்து சேரும் வியர்வை ஆவியாகிக் காற்றில் கலந்து விடுகிறது.

ஆனால் மிக அதிகமாக வியர்க்கும்போதும் வியர்வை ஆவியாகிக் காற்றுடன் கலக்க வாய்ப்பில்லாது போகும்போதும் புறத்தோலின் மீது வியர்வை படிந்து இருக்கிறது. அப்போது காய்ந்து பொடியாகி உதிரக் காத்திருக்கும் புறத்தோல் துகள்களுடன் கலந்து கூழாகி விடுகிறது. இதனால் புறத்தோல் உதிர்ந்து புதுப்பிக்கப்படுகிற இயற்கை நியதி பாதிக்கப்படுகிறது என்பதோடு இந்தக் கூழ் வியர்வை நாளங்களை அடைத்துக்கொண்டும் விடுகிறது. இதனால் வியர்வை வெளி வர முடியாமல் தவிக்கிறது. போதாக்குறைக்கு புறத்தோலில் உள்ள (பாக்டீரியா) நுண் கிருமிகளுக்கு இந்த வியர்வைச் சேறு இனப் பெருக்கத்துக்குவசதியாகஇருக்கிறது. ஏராளமாக அவை குட்டிப் போட்டுப் பெருகுகையில் நமது தோல் சிவந்து 'பொறிப் பொறி' யாகி விடுவதுடன் குத்தலெடுக்கிறது. அரிக்கவும் செய்கிறது.

வேர்க்குருவுக்குள் இத்தனை விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்பதை மைக்ராஸ்கோப் உதவியுடன் ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வேர்க்குரு வராமல் தடுப்பது எப்படி?

ரொம்பச் சுலபம். ஏ.ஸி. அறையில் வேலை பார்க்கலாம்; தூங்கலாம்! அந்த பாக்கியம் இல்லாதவர்கள் நாளைக்கு இரண்டு தடவையாவது குளித்து சருமத்தின் மேல்பரப்பில் படிந்துள்ள வியர்வையைக் கழுவிச் சுத்தப்படுத்தலாம். 'தண்ணீருக்கு எங்கே போக' என்கிறீர்களா? கஷ்டம்தான். மறுக்கவில்லை. ஒரு பக்கெட் தண்ணீரில் ஒருவேளை குளிப்பதைக் காட்டிலும் ஒன்றரை பக்கெட் தண்ணீரில் இரண்டு வேளை குளிக்க முயல்வது நலம்.

கனமான ஆடைகள் அணிவதைத்தவிர்க்கலாம். குறிப்பாக நைலான் டெரிலீன் போன்ற செயற்கை இழை ஆடைகள் வியர்வையை ஒற்றி எடுக்காது. பருத்தி ஆடைகள் தான் வியர்வையை ஈர்த்துக் கொள்ளும் என்பதால் கோடைக்கு ஏற்றது.

இதையும் மீறி வியர்த்து வேர்க்குரு வருகிறதென்றால் மருந்துக் கடையில் நல்ல நிறுவனம் ஒன்றின் தயாரிப்பான வேர்க்குரு பவுடர் வாங்கிப் போட்டுக் கொள்ளலாம். வேர்க்குரு பவுடரில் டால்கம் பவுடரும் ஸலிஸிலிக் ஆஸிட் என்ற மருந்தும் சரியான விகிதத்தில் கலந்திருக்கும். டால்கம் பவுடர் வியர்வையை உறிஞ்சிக் கொள்கிறது. தவிர ஸலிஸிலிக் ஆஸிட் பாக்டீரியா கிருமிகளுடன் போராடி அவற்றை அழிக்கிறது. மேலும் புறத் தோலின் காய்ந்து போன, வியர்வையுடன் கலந்து ஒட்டிக் கொண்டிருக்கிற துகள்களைத் தாக்கி நீக்குகிறது. வியர்வை நாளங்களில் அடைத்துக் கொண்டிருக்கும் கசண்டைக் கூட வெளியேற்றுகிறது. இந்தக் காரணங்களால் வேர்க்குருவிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

இவ்வளவையும் மீறி சிலரைக் கடுமையாக வேர்க்குரு தாக்கக் கூடும். அவர்களுக்கு 'மைஸின்' மருந்துகள் உதவும். ஆனால் இவற்றை டாக்டரைக் கலந்தாலோசிக்காமல் விழுங்கி வைக்கக் கூடாது. ஆபத்து!



ஆதாரம்:

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் நிறுவனத்தின் ஒரு பிரசுரம்

இது போன்ற மருத்துவ மனைகள் தேவைதானா?

கடந்த 19.2.86 அன்று மாலை என்னுடைய நண்பனின் உடல்நிலை வெகுவாகப் பாதிக்கவே, உடனடியாக ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு லால்குடி அரசு மருத்துவமனைக்கு இரவு 7.45க்குக் கொண்டு சென்றோம். அப்பொழுது டூட்டியில் இருந்த டாக்டர் வீரராகவன் அவர்கள் அவனுக்கு முதலுதவியாக இரண்டு பாட்டில் குளுக்கோஸ் ஏற்றச் சொல்லிச் சீட்டு எழுதிக் கொடுத்தார். அத்துடன் ஒரு மாத்திரை, ஊசி சீட்டையும் கொடுத்தார். கொண்டு சென்று நர்ஸிடம் கொடுத்தபோது, குளுக்கோஸ் இல்லை என்று வெளியில் விலைக்கு வாங்கி வரச் சொன்னார். எங்களுடைய அவசரம், சரியென்று அருகில் உள்ள மருந்து விற்பனைக் கடைக்குச் சென்று ஒரு பாட்டில் வாங்கி வந்தோம். இதற்கிடையில் என்னுடைய நண்பனின் உறவினர் சென்னையில் பார்மஸிஸ்டாகப் பணிபுரிபவர் ஊசி, மருந்து சம்பந்த விவரத்தை விசாரித்தபோது சொல்ல மறுத்துவிட்டார், அந்த டூட்டி நர்ஸ். போதாக்குறைக்கு மாத்திரை சாப்பிடத் தண்ணீர் கேட்டதற்கு, தண்ணீரும் இல்லை என்று சொல்லிவிட்டார். சரி, வெளியில் சென்று கொண்டு வரலாம் என்று நினைத்து, ஒரு டம்ளராவது கொடுங்கள் என்றும் கேட்டுப் பார்த்தோம். அதற்கும் முரண்பாடான பதில்களே வந்தன.

லால்குடி தாலுக்காவிற்குப் பிரதான அரசு மருத்துவமனையாக உள்ள இங்கு, அட்மிட் செய்யப்பட வேண்டிய நபருக்கே இந்த உபசரிப்புகள். வெளி நோயாளிகளுக்கு.... மனத்தில் எழுவது '?'யே. ஒரு குளுக்கோஸ் பாட்டில், மருந்து சாப்பிடத் தண்ணீர் இதுபோன்ற அடிப்படை மருத்துவ வசதிகள்கூட இல்லாத இந்த மருத்துவமனை இங்கு தேவையா? இதற்கு அதிகாரிகள் வேறு வேண்டுமா? ஒரே ஆறுதலான, ஆச்சரியமான விஷயம் டாக்டர் வீரராகவனின் அணுகுமுறை மட்டுமே. மற்றபடி ஒன்றும் இல்லை!

— ஆனந், ஆர்:கரை.

கோயிலில் நடக்கும் அநியாயம்!

சமீபத்தில் நான் பூண்டி புதுமை மாதா கோவிலுக்குச் சென்றிருந்தேன். மாதாவை வழிபட அங்கிருந்த ஒரு கடையில் (கோவிலுக்குச் சொந்தமானது.) இரண்டு மெழுகுவர்த்திகள் வாங்கினேன். இரண்டுமே எரிந்து அணைந்த மெழுகுவர்த்தியாகத்தான் இருந்தன. எனினும் அதை முழு விலை கொடுத்துத்தான் வாங்கினேன். அதைக் கோவிலில் வைத்து ஏற்றி மாதாவை வழிபட்டுக் கொண்டிருக்கும்போதே, கடைக்காரர் ஓடி வந்து நான் ஏற்றி வைத்த அந்த மெழுகுவர்த்திகளை அணைத்து மறுபடியும் விற்பதற்காக எடுத்துச் சென்றுவிட்டார். அப்படி அவர் வழிப்பறிபோல் என் கண் முன்னாலேயே அவற்றை எடுத்துக் கொண்டு சென்றபோது எனக்கு ஏற்பட்ட வேதனையைச் சொல்லி மாளாது. கோவில் நிர்வாகம் இந்த அநியாயத்தைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்குமா?

— சா. ரமேஷ் பாபு, லால்குடி.

கைத்தறி நிறுவனத்தின் மோசடி!

1984ம் ஆண்டு கைத்தறித் துணி வாங்குகிறவர்களுக்கு இருபது லட்சம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகள் உண்டு என்றும் இந்தத் திட்டம் 30.1.85 தேதியுடன் முடிவடைகிறது என்றும், இத்திட்டம் கடன் முறையில் வாங்குகிறவர்களுக்கும் ரொக்கத்தில் வாங்குகிறவர்களுக்கும் உண்டு; அனைவரும் இந்தப் பண்டிகைக்குக் கைத்தறித் துணிகளையே வாங்கி, ஆதரியுங்கள் என்ற வாசகம் அடங்கிய மிகப் பிரம்மாண்டமான பேனர்கள் சென்னை நகரம், மற்றும் தமிழ் நாடெங்கும் காட்சி அளித்தன.

ஏராளமான பொது மக்கள் தங்களுக்கு இருபது லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுகள் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையில் தாங்கள் கைத்தறித் துணி வாங்கிய பில்களை மிக ஜாக்கிரதையாக வைத்துப் பாதுகாத்தனர்.

ஆனால் கைத்தறி நிறுவனம், மேற்படி திட்டத்தை 30.11.85 வரை தள்ளிப் போட்டது. மீண்டும் பரிசு தங்களுக்கு வரக்கூடும் என்ற நம்பிக்கையில் 85ம் ஆண்டு பலர் கைத்தறித் துணி வாங்கினார்கள். ஆனால் 1986ம் ஆண்டு மார்ச் மாதம் வரை கைத்தறி நிறுவனம், தான் முன்பு 84ம் ஆண்டு அறிவித்த 20 லட்சம் ரூபாய்ப் பரிசுத் திட்டத்தை அமுல்படுத்தவே இல்லை. அதுமட்டுமல்ல, அந்த வெட்கக் கேடான பேனர்களையும் இன்னும் அப்புறப்படுத்தவே இல்லை. இதையே ஒரு சாதாரண நிறுவனம் செய்திருந்தால் இந்நேரம் பொது மக்களால் மோசடிப் புகார் செய்யப்பட்டுப் பல வழக்குகள் தாக்கலாகி இருக்கும். ஆனால் அரசு சார்பு, கைத்தறி நிறுவனமே இந்த மோசடியில் ஈடுபட்டு இருக்கும்போது பொதுமக்கள் என்ன செய்ய முடியும்?

— ச. கமல தியாகராஜன், சென்னை—28.

குடை மீது என்ன கோபம்?

சங்கரசுப்பு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்குக் கிளம்பியபோது அவரை வழியனுப்பி வைக்க வாசல் வரை நான் வந்தேன். அப்போதுதான் மழைத் தூறல் பலமாக விழுந்து கொண்டிருந்ததை உணர முடிந்தது. எங்கள் வீட்டுக் கூடத்தில் வெளி உலக பாதிப்புகள் அவ்வளவாகத் தெரியாது.

''ஐயா சங்கரசுப்பு! பஸ் ஸ்டாண்டிற்குப் போவதற்குள் ஒரேயடியாய் நனைந்து போய் விடுவீர்! என்னிடம் உபரியாக ஒரு குடை இருக்கிறது. எடுத்துக் கொண்டு போய் அப்புறம் கொண்டு வந்து கொடுக்கலாம்'', என்று சொல்லிக்கொண்டே உள்ளே போகத் திரும்பினேன்.

''வேண்டாம்! வேண்டாம்....! இந்தத் துண்டைத் தலையில் போட்டுக் கொண்டே நான் வேகமாக பஸ் ஸ்டாப்பிற்குப் போய் விடுவேன்! குடை வேண்டாம்'' என்று கையை ஆட்டிவிட்டுத் தெருவில் இறங்கிவிட்டார். அவர் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மழை பலக்கத் துவங்கியது.

மனிதருக்கு இரவல் வாங்குவதில் தயக்கம் இருக்குமா? ஆனாலும் அப்போது சங்கரசுப்பு மழையில் நனைந்து கொண்டே நடந்தது என் மனத்திற்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

மறுநாள் காரியாலயத்தில் அவரைச் சந்தித்தபோது, எவ்வளவு தூரம் நனைந்து கொண்டே அவர் வீடு போய்ச் சேர்ந்தார் என்று விசாரித்தேன். மனிதர் மழை பெய்ததையே மறந்திருந்தார். நனைந்ததைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக் கிழமை திருவல்லிக்கேணியிலுள்ள மற்றொரு காரியாலய நண்பர் வீட்டில் ஒரு பகல் விருந்து. அந்த நண்பர் சில குறிப்பிட்ட நபர்களை மாத்திரம் அழைத்திருந்தார். அந்தப் பட்டியலில் நானும் இடம் பெற்றிருந்தேன். சங்கர சுப்புவும் வந்திருந்தார்.

சாப்பாடு முடிய ஒரு மணிக்கு மேலாகி விட்டது. சங்கர சுப்பு உடனடியாக வீடு திரும்ப முனைந்தார். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. அவர் கையில் குடை எதும் இல்லை.

''கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு போங்கள்! அல்லது ஒரு ரிக்ஷா பிடித்துக் கொண்டு பஸ் ஸ்டாண்டு போங்கள்'' என்று விருந்து அளித்த நண்பர் சொன்னார்.

''ஒன்றும் வேண்டாம். நான் வருகிறேன்'' என்று கிளம்பிவிட்டார். நான்தான் வெயிலுக்கு பயந்து சற்று நேரம் தாமதித்தேன். ''நாகசாமி! சங்கரசுப்புவிடம் ஒரு குடையைக் கொடுத்து அனுப்பியிருக்கலாமே....! நாளைக்கு ஆபீசில் கொண்டு வந்து கொடுத்துவிட்டிருப்பாரே'' என்றேன்.

''சங்கரசுப்பு குடை பிடிக்க மாட்டார்'' என்ற பதில் பளிச்சென்று நாகசாமியிடமிருந்து வந்தது. அந்தப் பதில் எனக்கு வியப்பையும் அளித்தது.


''அப்படி என்ன ஐயா அந்த மனுஷனுக்குக் குடை மேலே கோபம்?'' என்று கேட்டு வைத்த எனக்கு மீண்டும் தயக்கமில்லாத பதில் நாகசாமியிடமிருந்து வந்தது. ''கோபம் இருக்கக் காரணம் இருக்கிறது. குடை ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் குடும்பத்தில் ஒரு சோதனையைத் தோற்றுவித்து வேதனையில் முடிந்தது. அப்போது பள்ளிச் சிறுவனாக



இருந்தசங்கர சுப்புகுடையைப்பிடிப்பதில்லை என்ற வைராக்கியமான முடிவு எடுத்து இன்றும் கடைபிடித்து வருகிறார். எனக்கு நன்றாகத் தெரிந்த சம்பவம்'' என்றார் நாகசாமி. அதை என்னிடம் சொல்ல ஆர்வமும் காட்டினார்.

சங்கர சுப்புவின் தந்தை வழிப் பாட்டனார் முத்துலிங்கம் அந்தக் காலத்து கலெக்டராபீஸ் தலைமை குமாஸ்தாவாக இருந்து ஓய்வு பெற்றவர். உத்தியோகத்திலிருந்த போதும் சரி ஓய்வு பெற்ற பிறகும் சரி, அவர் எதிலும் கண்டிப்பாகவும் கறாராகவும் இருந்தார். இரண்டு பிள்ளைகளையும்படிக்கவைத்து வேலை தேடிக் கொடுத்தார். மூத்த பிள்ளை வெளியூரில் வேலை பார்க்கக் குடும்பத்துடன் போய்விட்டார். இரண்டாவது பிள்ளை உள்ளூரிலேயே பள்ளி ஆசிரியராகப் பணியாற்ற ஆரம்பித்தார்.

முத்துலிங்கம் தன் இரண்டாவது பிள்ளையைத் தான் இருந்த தெருவிலேயே வேறு வீடு பார்த்துக் குடித்தனம் வைத்தார். அவரும் அவருடைய மனைவியும் சொந்த வீட்டிலேயே தனியாக வாழ்ந்தார்கள்.





ஒரே தெருவில் இருந்தாலும் அப்பாவும் பிள்ளையும் எப்போதாவது சந்தித்துக் கொள் வார்கள். பேரன் பேத்திகள் எப்போதாவது தாத்தா வீட்டிற்கு வரும். அப்போதும் முத்து லிங்கம் அவர்களிடம் பள்ளிப் பாடங்கள் சம்பந்தமாக ஏதாவது கடாபுடா என்று கட்டைக் குரலில் கேள்விகள் கேட்பாரே தவிர, அன்பாய் ஆதரவாய்க் குழந்தைகளைக் கொஞ்ச மாட்டார். அது அவர் சுபாவம்.

ஒருநாள் காலை நேரத்தில் மழை பிடித்துக் கொண்டது. பள்ளி ஆசிரியராகப் பணி புரியும் முத்துலிங்கத்தின் மகன் சேதுராம னுக்குக் கொஞ்சம் சீக்கிரமே பள்ளிக்கூடத் திற்குப்போகவேண்டியநிர்ப்பந்தம். பள்ளிக் கூட மேற்பார்வை அதிகாரிகள் வரப் போவதாகத் தகவல் வந்திருந்தது.

இத்தனை நாள் தேடாத குடையைத் தேடி னார். அது எங்கிருந்தோ மரப் பெட்டி இடுக் கிலிருந்து கிடைத்தது. அதை விரித்துப் பார்க் கவே அவசியமில்லாமல் போயிருந்தது. எலி குடைத் துணியை முழுதுமாகத் தேங்காய்த் துருவலாக்கியிருந்தது-கம்பிகளிடம்எலியின் வீரம் பலிக்கவில்லை.

சங்கர சுப்புவுக்கு அப்போது பத்து வயசு இருக்கலாம். ''டேய் சங்கு! தாத்தா இன்றைக்கு எங்கும் வெளியே போக மாட்டார். அவரிடம் போய் நான் குடை கேட்டு வாங்கி வரச் சொன்னதாக வாங்கி வா! போகும்போது நீ உன் தலைக்கு, இந்தப் பலகையை வைத்துக் கொண்டு நனையாமல் போ! திரும்பி வரும்போதும் அப்படியே வா! நீ குடையை விரித்தால் தாத்தாவுக்குக் கோபம் வரும். சீக்கிரமாக ஓர் ஓட்டத்தில் வா'' என்று சொல்லி அனுப்பினார்.

சங்கர சுப்பு போன வேகத்தில் திரும்பி வந்தான் வெறும் கையாக. ''அப்பா! தாத்தா என்கிட்டே குடையைத் தரமாட்டாராம்! நீங்க போய் கேட்டு வாங்கிக்கணுமாம்'' என்று சொன்னான்.

சேதுராமனுக்கு அப்பாவின் குணம் தெரியும். சிறிய விஷயமாக இருந்தாலும் கண்டிப்புக் கலந்த ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றாமல்எதையும்செய்யமாட்டார். பள்ளிக் கூட இன்ஸ்பெக்ஷனை ஒட்டிச் சீராக, கவன மாக, கோட்டு, தலைப்பாகை அணிந்து தயாராக இருந்த சேதுராமன், சங்கரசுப்பு விடமிருந்த கள்ளிப் பலகையை வாங்கித் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு முத்து லிங்கம் முன்னால் வந்து நின்றார். வேட்டி நுனி, ஓரம், கோட்டின் முன்கைப் பகுதிகள் எல்லாம் மழை ஈரத்தை ருசி பார்த்திருந் தன.

''ஏண்டா சேதுராமா! உனக்கு எப்போது தான் பொறுப்பு வரப் போகிறது! வயசு நாற்பதாகலே! மழைத் தூறல் விழுந்த பிறகு தான் குடையைத் தேடணுமா? தினசரி, அதைச் சரிபார்த்து வைக்காமல் போன தால்தானே எலி கடித்திருக்கிறது.... உனக் குச் சமர்த்தோ, சாமர்த்தியமோ எப்போ வரப்போகிறதோ?எனக்குப்பிறந்தது இப்படி ஒரு மண்டூகமாகவா இருக்கணும்?'' என்று இரைந்து கத்திவிட்டு உள்ளிருந்து தன் பழைய குடையை எடுத்து வந்தார். ''இந்தா! குடை ஜாக்கிரதை! பள்ளிக்கூடத்திலிருந்து திரும் பும்போது கவனமாக என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போகணும்! உன் வீட்டில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு எலி கடித்து விட்டது என்று ஒட்டுத் தையல் போட்டுக் கொண்டு வரக்கூடாது.... ஜாக் கிரதை'' என்ற எச்சரிக்கையுடன் பிள்ளை கையில் குடையைக் கொடுத்தார். அன்பு, பாசம், சூழ்நிலை எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய கண்டிப்பும் உபதேச உணர்ச்சி யும் மேலோங்கி நின்றது.

சேதுராமனுக்கு ரோஷமாகத்தான் இருந் தது. ''நீருமாச்சு! உம் குடையுமாச்சு'' என்று மற்ற சந்தர்ப்பமாக இருந்தால் கிளம்பிவிடக் கூடிய வயசுதான். ஆனால் அன்று பள்ளிக் கூட மேற்பார்வை நிகழ்ச்சிகளை ஒட்டிப் பொறுப்பு இருந்ததால், பொறுமையாக, பதில் பேசாமல் தலையை ஆட்டிவிட்டுக் குடையை வாங்கிக் கொண்டு கிளம்பினார்.

அன்று மழையும் விட்டவில்லை. பள்ளிக் கூட மேலதிகாரிக்கு திருப்தியும் ஏற்படவே யில்லை. ஆசிரியர்கள் ஹெட்மாஸ்டர் எல் லோர் மீதும் அவர் எதற்கோ சீறி விழுந்தார். மொத்தத்தில் பள்ளிக்கூடச் சூழ்நிலையில் ஒரு மாதிரி எரிச்சல். அதிகாரி போனவுடன் தலைமை ஆசிரியர் சக ஆசிரியர்கள் மீது பாய்ந்தார். அவர்கள் யார் மீது ... ப[illegible]டியும்! தலையைத் தொங்கப் போட்[illegible] [illegible]கொண்டு வீடு திரும்பினார்கள்.

சேதுராமனும் அப்படித்தான் [illegible]ரும்பினார். பள்ளிக்கூட மேற்பார்வையா[illegible]ின் பெரிய தாக்குதலில், காலையில் தந்தை முத்துலிங்கம் தொடுத்த சின்னத் தாக்குதலை மறந்து விட்டிருந்தார். ஒருவரிடமும் பேசாமல், சாப் பாட்டைமுடித்துக்கொண்டுவாசல்திண்ணை யில் வந்து உட்கார்ந்தார்.


அப்போதுதான் அந்தச் சிம்ம கர்ஜனை வாசலை ஒட்டிய இருட்டிலிருந்து வந்தது.

''டேய் சேதுராமா! குடை எங்கேடா? வாங்கிக்கொண்டுபோகக்காட்டறஅக்கறை யிலே கொஞ்சமாவது திருப்பிக் கொடுக்கிற திலே இருக்கணும்.....! இப்போ நான் வந்து கேட்கவேண்டியிருக்கிறது....'' என்றுசீறினார் முத்துலிங்கம்!

''உட்காருங்க அப்பா! இதோ எடுத்து வந்து தர்றேன்'' என்று உள்ளே போனார். தேடினார்! தேடினார்! குடையைக் காணோம். அவர் பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு வெளியே எங்கும் போகவில்லை. ஆனால் குடை எங்கே போயிற்று? விழித்தார்.

''அப்பா.....! குடையை ஏதோ நினைவில் பள்ளிக்கூடத்திலேயே வைத்துவிட்டு வந்து விட்டேன் என்று நினைக்கிறேன். இன்று அங்கே கொஞ்சம் அமர்க்களம்! நாளைக்கு எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்றார் மரியாதை கலந்த தணிந்த குரலில்.

''உனக்கு ஏதுடா பொறுப்பு....? பொறுப்பு இல்லாதவன் ஏண்டா பிறர்



வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

கோடையில் ஓர் அனுபவம்

போட்டி: 49

ஏப்ரல் பிறந்துவிட்டது. இனி மூன்று மாதங்களுக்கு ஒரே வெயில் தகிப்புத்தான். இது போன்ற கோடை காலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியான, துயரமான அல்லது ஆச்சர்யமான மறக்க முடியாத் அனுபவம் ஒன்றைக் கீழே வெற்றிடத்தில் எழுதி அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. அரைப் பக்கம் முழுமையாகக் கத்தரித்து அனுப்புக. உறை மீது: ''கோடையில் ஓர் அனுபவம்''. குலுக்கலில் ஒருவருக்கு வி.ஐ.பி. ஸூட்கேஸ்.

முடிவு தேதி: 21.4.86

வி.ஐ.பி. ஸூட்கேஸ்கள் நாலே நாலு தான் பாக்கி! நான்கே வாய்ப்புக்கள்! தவற விடாதீர்கள்!

என் பெயர்: ....

விலாசம்: ....

....

சாமானை வாங்க வரீங்க....! போ இப்பவே ஸ்கூலுக்கு! வாட்ச்மேன் இருப்பான் இல்லே? குடையைக் கண்டு பிடிச்சுக் கொண்டா.... நாளைக்கும் மறந்துட்டு வந்தியின்னு என் குடை என்ன ஆகிறது....? போ! இப்பவே போ!'' என்று விரட்டினார்.

''நீருமாச்சு! உம் குடையுமாச்சு! பிடியும் முப்பது ரூபாய்! புதுக் குடை வாங்கிக் கொள்ளும்'' என்று சொல்லுகிற புத்திர வர்க்கத்தில் சேர்ந்தவரில்லை சேதுராமன். அதற்கு மேல் வாதாடிப் பிரயோசனமில்லை என்று தெரியும். பதில் பேசாமல் அந்த இருட்டில் பள்ளிக்கூடத்தை நோக்கி ஒரு மைல் தூரம் நடக்க ஆரம்பித்தார்.

கிளை ரோட்டிலிருந்து மெயின் ரோட்டில் நடந்தபோது ஒரு லாரி அவரை உரசினாற் போல போயிற்று. மயிரிழையில் தப்பினார். ஒரே அதிர்ச்சி. ஓரமாகப் போய்ச் சற்று நின்றார். தலையைச் சுற்றியது. பக்கத்தில் நின்ற மின்கம்பத்தைப் பிடித்துக் கொண்டார். நெஞ்சை யாரோ அழுத்துவது போல உணர்ச்சி. அப்படியே உட்கார்ந்துவிட்டார்.

சேதுராமன் வெளியே போனவர் திரும்ப நேரமாக நேரமாக வீட்டிலுள்ளவர்களுக்குக் கவலை அதிகமாயிற்று. சேதுராமனின் மனைவி, சங்கர சுப்புவைக் கூட்டிக் கொண்டு தேடக் கிளம்பினாள். மெயின் ரோட்டில் விளக்குக் கம்பத்தடியில் துடித்துக் கொண்டிருந்த சேதுராமனைக் கண்டு பதறினார்கள். அந்த வேதனையிலும் அவர் எதற்காக அந்த நேரத்தில் அங்கு வந்தார் என்பதைத் திணறலில் சொன்னார்.

சங்கரசுப்பு ஓடிப் போய் ஒரு டாக்டரை அழைத்து வந்தான். டாக்டர் வரும்போது எல்லாமே முடிந்துவிட்டிருந்தது. தெருக்காரர்கள் உதவியுடன் சேதுராமனின் உடல் பாதி ராத்திரியில் வீட்டிற்கு வந்து சேர்ந்தது. அதைக் கிடத்த சங்கர சுப்பு பரணில் இருந்த பாயை எட்டி இழுத்தான். அதில் சொருகி வைக்கப்பட்டிருந்த தாத்தா முத்துலிங்கத்தின் குடை கீழே விழுந்தது. சேதுராமன் வீடு திரும்பிய போது குடையைப் பரணில் வைத்தது மறந்தே போய்விட்டிருந்தது. அந்த மறதிக்கு அவர் உயிரே அபராதக் காணிக்கையாகப் போய் விட்டது.

திண்ணையில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்த முத்துலிங்கத்தின் காலடியில் சங்கர சுப்பு குடையைக் கொண்டு வந்து போட்டான். ''நீங்க போகலாம்! உங்க உறவு போதும்'' என்று கத்தினான்.

"அதற்கப்புறம் சங்கரசுப்பு குடை என்பதைக் கையில் எடுப்பதே இல்லை. தந்தைக்காக அவன் செய்யும் கடமையாக நினைப்பு'' என்று நாகசாமி சொல்லி முடித்தார்.

எனக்குச் சங்கர சுப்பு தாங்கிய மழையும் வெயிலும் புரிய ஆரம்பித்தது.

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி


கன்காரு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்காரு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச க்ரீம் (செவ்வின மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

சித்தரஞ்சனி

36. சொர்க்க பூமி!

சாதவாகனன் மற்றுமொருவிஷயத்தை அறிந்து வரச் சொன்னதாகக் காஷ்டானன் கூறியதையும் அதைப் பற்றி தன்னிடமும் சொல்லியிருப்பதாக யவனனும் சொன்னதும் சில விநாடிகள் குழப்பமடைந்த நாகபாணன் அவ்விருவரும் சொன்ன பதிலைக் கேட்டதும்மிதமிஞ்சியபிரமையையே அடைந்தான். "தாங்கள் இதுவரை பல இடங்களில் கொள்ளையடித்துச் சேமித்து வைத்திருக்கும் வெள்ளி,தங்க நாணயக் குவியல்களை எங்கு மறைத்து வைத்திருக்கிறீர்கள் என்று சாதவாகனர் அறிந்து வரச் சொன்னார்" என்று காஷ்டானன் கூறியதும் ஒரு விநாடி பிரமை அடைந்த நாகபாணன் அடுத்த விநாடி வெறுப்பு மிகுந்த குரலில், "இதைவிட சாதவாகனன் என்னைக் கொன்று போடலாமே" என்று வெறுப்புடன் கூறியதும், "தங்களைக் கொல்வதால் பயன் ஏதுமில்லை என்று சாதவாகனர் நினைக்கிறார்" என்றான் காஷ்டானன்.

அதுவரை சினத்தைக் கூடியவரை அடக்கிக் கொண்டிருந்த நாகபாணன் "எனது செல்வம் அனைத்தையும் எடுத்துக் கொண்ட பின் நான் ஏன் வாழ வேண்டும்?" என்று கேட்டான்.

"பிராணன் உயர்ந்ததல்லவா?" என்று கேட்டான் யவனன்.

"பணம் போன பின் பிராணன் இருந்து என்ன பிரயோசனம். பணமில்லாதவன் பிணம் என்ற பழமொழி கேட்டதில்லையா?" என்று சீறினான் மகாக்ஷத்ரபன்.

அப்பொழுதுமீண்டும்மன்றாடியயவனன், "மகாக்ஷத்ரபரே! உமது உயிரை வைத்துக் கொள்ளவோ போக்கிக் கொள்ளவோ உமக்கு உரிமையுண்டு. ஆனால் சாதவாகனரிடம் சிக்கியிருக்கும் உமது படைப் பகுதியும் எனது படைப் பகுதியும் சேர்ந்த வீரர்கள் உமது பிடிவாதத்துக்காக உயிர் விடுவதை விரும்பவில்லை" என்று சுட்டிக்காட்டினான்.

"எனது பொக்கிஷம் இருக்குமிடத்தை நான் சொல்ல மறுத்தால்?" என்று மறுபடியும் ஆக்ரோஷத்துடன் வினவினான் நாகபாணன்.

"உமது வீரர்களே உம்மைக் கொன்று விடுவார்கள். நமது படைகள் கலகம் செய்யும் குறிகள் தெரிகின்றன. வீரர்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லத் துடிக்கிறார்கள்" என்றான் யவனன்.

மகாக்ஷத்ரபனை நாகபாணன் தான் சகலவிதத்திலும்தோல்வியடைந்துவிட்டதை உணர்ந்து கொண்டு தலையைக் கவிழ்ந்து கொண்டான். பிறகு மெதுவாகப் பேசினான்:

"காஷ்டானனே! யவனர் தலைவா! நான்





சாண்டில்யன்



சேமித்து வைத்திருக்கும் பொக்கிஷம் பூராவும் *"ஜோகல்தம்பி (நாஸிக்) பகுதியில் இருக்கிறது" என்று. இதைச் சொல்லி முறிந்த மனத்துடன் கோட்டையை நோக்கித் திரும்பிச் சென்றான்.

அவன் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற சித்தரஞ்சனி அந்தப் பெரிய வீரனால் வெற்றியைத் தாங்க முடிந்ததே தவிர தோல்வியைத் தாங்க முடியவில்லை என்று தனக்குள் அனுதாபப்பட்டாள். பிறகு காஷ்டானனுடனும் மற்ற வீரர்களுடனும் அக்கரையை நோக்கிச் சென்றாள். அவளை நதிக் கரையிலேயே வரவேற்ற சதகர்ணி அவளைத் தனது புரவியில் ஏற்றிக் கொண்டு தாபிலேசுவரர் கோவிலுக்குச் சென்றான். ஈசுவரனை வணங்கிவிட்டு சண்டிகா தேவியையும் வணங்கினான்.

மறுநாள் இரண்டு ஆலயங்களிலும் அபிஷேக ஆராதனைகளை மிகுந்த விமரிசையுடன் செய்ய மலைவாசிகளுக்கு உத்தரவிட்ட சாதவாகனன் அந்த விழாக்களில் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டான். அடுத்த இரண்டு நாட்களில் தனது படைகளுக்கும் அந்தப் பகுதிக்கும் மகாக்ஷத்ரபனாக காஷ்டானனை நியமித்து, "இங்கே மக்கள் அரசை நிறுவிவிட்டு பிரதிஷ்டானவுக்கு வந்து சேர். அங்கும் நீதான் மகாக்ஷத்ரபன்" என்றான்.

காஷ்டானன் பிரமை பிடித்து, "சாதவாகனரே! இத்தனை பெரிய பதவியை என்னால் தாங்க முடியாது" என்றான்.

"இது ஒன்றும் பெரிய பதவியல்ல. நீ செய்த சேவைக்குத் தகுந்த பரிசு. சாதவாகன அரசு பேரரசாக வெகு சீக்கிரம் விரிவடையும். அதன் அமைப்பில் உனக்கும் பங்கிருக்கும்" என்றான்.

காஷ்டானன் சாதவாகனன் காலிலும் சித்தரஞ்சனியின் காலிலும் விழுந்தான். அதைக் கண்டு புன்முறுவல் கொண்டான் சாதவாகனன். அந்தப் புன்முறுவலுக்குக் காரணத்தை உணர்ந்திருந்த சித்தரஞ்சனி அவனுடன் தனிமையிலிருக்கையில் கேட்டாள். "காஷ்டானன் வணங்கியபோது ஏன் சிரித்தீர்கள்?" என்று.

"உனக்கு புருஷனாக வர இருந்தவன் ஒரு முறை காலில் விழுந்தான். நான் ஆயுள் முழுவதும் உன் காலைப் பிடிக்க வேண்டுமே என்று நினைத்தேன்" என்று கூறிப் பெரிதாக நகைத்தான். சித்தரஞ்சனியின் கண்களில் தீப்பொறி பறந்தது.

தாபிலேசுவரர் மலையிலிருந்து மக்களின் ஜெயகோஷம் கலந்த வாழ்த்துடனும் பூஜாரியின் ஆசி வசனங்களுடனும் கிளம்பி பிரதிஷ்டானை வந்த மகனையும் மருமகளையும்

*** "That Satakarni deprived the khaharatas of their possessions is also apparent from the large Jogalthambi (Nasik) hoard containing Silver Coins of Nahapana & his other pieces" — History of Ancient India - By R.S. Tripathi - Page 195.**

கௌதமி பாலஸ்ரீ மங்கல ஆரத்தியுடன் வரவேற்றாள்.

"குழந்தாய்! இவள்தானே.....?" என்று கேட்டாள் தாய். மருமகளை அணைத்துக் கொண்டு.

"அந்தப் பிசாசு இதுதான். அங்கு பிடித்துக் கொண்டது இதுவரை என்னை விடவில்லை" என்றான் கௌதமிபுத்ரன்.

கௌதமி பாலஸ்ரீ "டேய்! உன் துஷ்டத்தனத்தை இவளிடம் காட்டாதே" என்று கடிந்து கொண்டு சித்ரரஞ்சனியை உள்ளே அழைத்துச் சென்றாள்.

அன்றிரவு, தனது பள்ளியறையிலிருந்து வெளியே வானில் ஓடிய முழுமதியைப் பார்த்து, "சித்ரரஞ்சனி பாடு" என்றான் சதகர்ணி.

இம்முறை அவள் மிக மெதுவாக இசைத்தாள். ஹுங்காரமே மயக்கும் நாதமாகத் திகழ்ந்தது. அதைக் கேட்டுக் கொண்டே அவளை அணைத்து நின்ற கௌதமிபுத்ரன், "சித்ரரஞ்சனி! இதென்ன மேலும் போகாமல் கீழும் இறங்காமல் ஒலிக்கும் ராகம்?"

"பிற்காலத்தில் இந்த ராகம் என் பெயரைக்கொள்ளும். இதற்குநிஷாதத்துக்கு மேலும் கிடையாது. ஷட்ஜத்துக்குக் கீழும் கிடையாது. படாடோபமற்ற குல மகளைப் போல் நடுத்தரமான சுத்தமான வாழ்க்கை உடையது" என்று பதில் சொன்னாள் சித்தரஞ்சனி.

"உன்னை நான் உலகத்தின் உச்சியில் நிற்க வைப்பேன்" என்றான் கௌதமிபுத்ரன்.

"என்னுடைய சாம்ராஜ்யம் நீங்கள்தான். வேறு எந்த உச்சியும் எனக்குத் தேவையில்லை" என்றாள் சித்ரரஞ்சனி.

அவன் அவளை அப்படியே தனது கைகளில்தூக்கிக்கொண்டுபஞ்சணையில்கிடத்தினான். வான்மதியின் பூர்ண நிலவு அவள் மீது விழுந்தது. ஸஹ்யாத்ரியின் காற்று அவள் சேலையை அப்படியும் இப்படியும் நீக்க முற்பட்டது. கௌதமிபுத்ரன் அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் மீது தனது உடலைக் கவிழ்த்தான். "சித்ரரஞ்சனி! இனி தடையில்லை" என்று மெதுவாகச் சொன்னான்.

"எதற்கு?" என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டாள் சித்ரரஞ்சனி.

விளக்கம் சொற்களில் வரவில்லை அவனிடமிருந்து. வந்த விதத்தில் அவள் உணர்ச்சிகள் வேகமாகச் சுழன்றன. இதயம் சொர்க்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்த சொர்க்க சிருஷ்டிக்கு புருஷர்களின் முரட்டுத்தனம் மிக அவசியம் என்பதைச் சித்ரரஞ்சனி புரிந்து கொண்டாள். சாதவாகனன் அவள் காதில், "நீதான் சொர்க்க பூமி சித்ரரஞ்சனி" என்று சொன்னான்.

"அதை ஆளும் சக்கரவர்த்தி நீங்கள் தானே" என்று முணுமுணுத்தாள் அவள்.

(முற்றும்)

பி.கு: கௌதமிபுத்ரன் சாகர்களை முறியடித்து மகாராஷ்டிரம், கொங்கணம் முதலிய அனைத்தையும் கைப்பற்றி சாதவாகனப் பேரரசை நிறுவினான். அதற்கு காஷ்டானன் மகாக்ஷத்ரபனாக சாதவாகனனிடம் பணிபுரிந்தான் என்று சரித்திரம் கூறுகிறது.









வாசகர் பங்கு

பிறகு அவர்கள் மாப்பிள்ளை வீட்டாரிடம் சென்று தேங்காயோ அல்லது வேறு பரிசுப் பொருள்களையோ பெறுவார்கள்!

— ஜெ. பிரேமா, குஜராத்.

போர்க்களமான நலங்கு

என் தோழியின் திருமணத்திற்குச் சென்றிருந்தேன். ஊரே பெருமைப் படும்படி திருமணம் நடந்தது. அன்று மாலை, நலங்கின்போது பெண்ணைப் பாடச் சொல்ல, அவள் தனக்குப் பாட வராது என்று சொல்லியும்

திருமண தினத்தன்று...

காதில் சொல்லும் ரகசியம்!

குஜராத்திலுள்ள படேல் இனத்துக் கல்யாணத்தில் ஒரு சடங்கு. திருமணம் முடியும் தறுவாயில் பெண் வீட்டாரோ அல்லது அவர்களது உறவினர்களோ பதினொரு பேர், மணப் பெண்ணின் காதில் 'அகண்ட சௌபாக்கியவதி' என்று கூறுவார்கள். அதன்

மாப்பிள்ளை வீட்டாரும் மற்ற நண்பர்களும் வற்புறுத்தவே அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். அதனால் பேச்சு முற்றிக் கோபமாக மாறி அடிதடி நடக்கும் அளவுக்குச் சென்று விட்டது. ஐந்தே நிமிடத்தில் கல்யாண வீடு அழுகை வீடாக உருமாறி விட்டது. பிறகு ஊர்ப் பெரியவர்கள் தலையிட்டு அமைதிப் படுத்தினர். இப்போது அவளைப் பார்த்தா

லும் எனக்கு அந்த நிகழ்ச்சியே நினைவுக்கு வரும்.

— ஐ. லலிதா, திருவிழந்தூர்.

எந்த இலை யாருடையது?

எங்கள் உறவினர் வீட்டுத் திருமணத்தில் திருமணம் முடிந்து சாப்பாட்டுப் பந்தி நடந்து கொண்டிருந்தது. அப்போது வாசலில் யாரோ ஒரு நடிகர் வந்திருப்பதாக யாரோ சொல்ல, சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்





களெல்லாம் நடிகரைப் பார்ப்பதற்காக பாதி சாப்பிட்ட கையோடு எழுந்து ஓடினார்கள். பிறகு பந்திக்குத் திரும்பியபோது, யார் இலை எது என்று தெரியாமல் அனைவரும் திண்டாடிக் கொண்டிருந்ததை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான்!

— டி.ஏ.ஆர். கௌசல்யா,
செகந்திராபாத்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி....

1964ல் என் மாமாவுக்குத் திருமணம். எங்கள் குடும்பங்களில் நடக்கும் திருமணங்களில், மாப்பிள்ளைக்கு நெற்றியில் பொட்டு வைத்து, திருஷ்டிப் பொட்டிட்டு, கண்ணுக்கு மைதீட்டி ஊஞ்சலில் உட்கார வைத்துப் பாட்டுப் பாடி ஊஞ்சலாட்டுவார்கள். அப்படி அலங்கரிக்கப்பட்ட என் மாமா ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தபோது, கூட்டத்திலிருந்தவர்கள் ஒருவரையொருவர் பாட்டுப் பாடும்படி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என் மூத்த சகோதரி விரைந்தோடி வந்து, 'ஆட்டுக் குட்டி ஆட்டுக் குட்டி மாமாவைப் பாரு. அவர் ஆம்பிளையா, பொம்பளையா என்னுன்னு கேளு....' என்று பாட, அனைவரும் அதிர் வெடியாய்ச் சிரித்து விட்டார்கள்!

— கே. ராதிகா, மதுரை — 10.

அன்றுதான் உணர்ந்தேன்

தொழிற்சாலை நடத்தும் நண்பர் ஒருவர், அவருடைய தொழிற்கூடத்தில் பணிபுரியும் இருவரது திருமணத்திற்காக அழைப்பனுப்பியிருந்தார். அவரே அருகிலுள்ள முருகன் கோயிலில் அத்திருமணத்தை நடத்தி வைத்தார். அதற்குச் சென்றிருந்த நானும் என் மனைவியும் வியத்து போனோம். காரணம், மணமக்கள் இருவருக்குமே கண் தெரியாது என்பதல்ல; அவர்கள் இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொள்வதாகக் கேள்விப்பட்டதுதான்! காதலுக்குக் கண்ணில்லை என்பது அனைவருக்கும் தெரியுமென்றாலும் கண்ணில்லாதவர்களுக்கிடையேயும் காதல் உண்டு என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

— என். பாலு, திருச்சி — 18.

என்னை மாற்றிய திருமணம்

சுயமரியாதைத் திருமணம் செய்வதாக நினைத்துக் கொண்டு என் திருமணத்தை மிகவும் எளிமையான முறையில் ஏற்பாடு செய்திருந்தேன். எந்தவிதமான மதச் சடங்குகளுமில்லாமல் தாலி கட்டிய பிறகு, வந்திருந்த கிருஸ்துவ, முஸ்லீம், இந்து நண்பர்களும் உறவினர்களும் வாழ்த்திப் பேசும்போது, எங்கள் வாழ்க்கை சிறக்க அவரவர் கடவுளிடம் ஆசிர்வதிக்கும்படி வேண்டினார்கள். அப்போதிருந்து என்னுள் படிப்படியாக நாத்திகம் மறைந்து தற்போது ஆர்.எஸ்.எஸ். ஸில் பற்றுடையவனாகும் அளவுக்கு மாறிப் போய்விட்டேன். என் திருமண நாளே என் நாத்திகம் முடிவுற்ற நாளானது.

— கே. ஏ. நடராஜன், தஞ்சாவூர்.

தாலி கட்ட மறந்த கதை!

எங்கள் உறவினர் வீட்டுத் திருமணம், கூறைப் புடவை ஓதியிட்டுக் கொடுத்தவுடன் தாலி கட்டுவது சம்பிரதாயம். அத்திருமணத்தில் புடவையை ஓதியிட்டுக் கொடுத்தவுடன், தலைமைப் புரோகிதர் வெளியில் ஒரு வேலையாகச் செல்லநேர்ந்தது. அவரது உதவியாளர் மற்ற சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அலுவலக நண்பர்கள் கொண்டு வந்திருந்த மாலைகளை மணமக்கள் மாற்றிக் கொண்டிருந்தனர். அச்சமயம் பார்த்துத்

திரும்பிய தலைமைப் புரோகிதர் தாலி கட்டப்பட்டுவிட்டதாக நினைத்துக் கொண்டு மற்ற சடங்குகளை நடத்திவிட்டார்! பிறகு விருந்தினர் ஒருவர் நினைவுபடுத்திய பிறகுதான் தாலி கட்டப்பட்டது!

— ஹேமா நாராயணன், பம்பாய்—71.

தலைக்கு வந்தது.....

பதினைந்தாண்டுகளுக்கு முன் நடந்தது இது. ஓய்வு பெற்ற ஓர் உத்யோகஸ்தருடைய மகள் திருமணம். திருமணத்திற்கு முதல் நாள் காலையில், கல்யாண மண்டபத்திற்குக் கிளம்புமுன், கைக்குழந்தையுடன் ஒரு பெண்ணும் அவள் அம்மாவும் மணப் பெண்ணின் தந்தையைப் பார்க்க வேண்டுமென்றார்கள். பிறகு அப் பெண்தான் மணமகனின் முதல் மனைவியென்றும், சொன்னபடி நகைகள் போட முடியாதபடியால் அழைத்துப் போகவில்லையென்ற உண்மை தெரிய வந்தது. நல்ல வேளையாகத் தாலி கட்டிய பிறகு தெரிய வராமல் முன்பே தெரிய வந்ததே என்று கல்யாணத்தை நிறுத்திவிட்டு அனைவரும் ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

— என். சுந்தரேசன், சென்னை — 18.

வித்வானான சாஸ்திரிகள்

சுமார் ஐம்பதாண்டுகளுக்குமுன் நடந்த சம்பவம். கல்யாண வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. புரோகிதர் சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருந்தார், நாதஸ்வர வித்வான் நடுவில் ஸ்வரம் தவறி வாசித்துக் கொண்டிருக்கவே,சடக்கென்றுசாஸ்திரிகள் அவரிடம் சென்று, ''என்னய்யா ஸ்வரம் தவறி வாசிக்கிறீர்கள்? உம் குரு யார்?'' என்றார். ''விவரம் தெரியாதவர்களெல்லாம் விமர்சனம் செய்ய வந்துவிடுகிறார்கள்'' என்றார் நாதஸ்வரக்காரர். அவ்வளவுதான்! ''கொடுங்கய்யா வாத்தியத்தை.....'' என்று வாத்தியத்தைப் பறித்துக் கொண்டு, வித்வான் விட்ட இடத்திலிருந்து மேலே வாசிக்க ஆரம்பித்துவிட்டார் சாஸ்திரிகள். அற்புதமாகப் பிழையின்றி வாசித்துக் கொண்டேயிருந்தார். கல்யாணத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். நாதஸ்வர வித்வானும் திகைத்துப் போய்க் கடைசியில் சாஸ்திரிகளை வணங்கினார்!

— நா. நடராஜன், சென்னை — 82.

இதோ ஒரு புரட்சிப் பெண்

திருமணத்திற்கு வாங்கப்பட்ட கூறை காஞ்சிபுரம் பட்டுத்தானா என்ற அல்ப சந்தேகம் வருங்கால மாமனாருக்கு வந்துவிட்டது. முகூர்த்தத்தை ஒத்திப் போடச் சொல்லி, புடவையை எடுத்துக் கொண்டு புடைவைக் கடைக்குப் புறப்பட்டுவிட்டார். அங்குள்ள சமையல்காரர் [illegible] யார் தடுத்தும் கேட்கவில்லை.மாப்பிள்ளையோ அப்பாவின் செயலைப் பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தார். அத்தனையையும் கவனித்துக் கொண்டிருந்த மணப் பெண் ஒரு கோழையை மணந்து கொள்வதைவிட அநியாயத்தை எதிர்த்துப் போராடிய அந்த இளம் சமையல்காரரே மேல் என்று தீர்மானித்து, அப்போதே தன் எண்ணத்தைக் கூறி, அவரையே மணந்து கொண்டும் விட்டாள். படித்திருந்த அந்தச் சமையல்காரரும் அருமையான வேலை தேடிக் கொண்டார். இது நடந்தது ஐம்பதாண்டுகளுக்கு முன்பு. மணப் பெண் என் பாட்டி!

— சந்திரிகா கண்ணன், பம்பாய் — 19.

அந்நியர் தீர்த்த மனக்குறை

என் தங்கையின் திருமணம் நடந்த 9.12.84 அன்று எங்களூரிலுள்ள நந்தனாருக்காக நந்தி விலகிய சிவலோக நாத சுவாமி கோயிலில் நடந்தது. அன்று ஆங்கிலேயர்கள் சுமார் பத்துப் பேர் சுவாமியைத் தரிசிக்க வந்திருந்தனர். நம் திருமணச் சடங்குகளைக் கண்டு வியந்த அவர்கள் கையில் வைத்திருந்த பொலராய்ட் கேமராவால் ஐந்து படங்கள் எடுத்து உடனடியாக எங்கள் கையில் தந்தனர். போட்டோ எடுக்க முடியவில்லையே என்ற என்னுடைய மனக்குறை அவர்களால் நிறைவடைந்தது.

— சீனு சங்கர், திருப்புங்கூர்.

எனக்குக் கல்யாணம் வேண்டாம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு என் மாமா பெண் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து மாலை, சம்பந்தி வீட்டினர் என் மாமாவைக் கூப்பிட்டு, ''சாந்தி கல்யாணத்திற்கு நாள் பார்த்து எழுதுகிறோம். எல்லோரும் அன்று வந்துவிடுங்கள். வரும் போது, சாந்தி கல்யாணப் புடவையைப் பச்சைக் கலரில் எடுத்து வந்து விடுங்கள்!'' என்று கூறினர். இதையெல்லாம் பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த என் ஏழு வயதுத் தங்கை சாந்தி உடனே 'ஓ'வென்று அழ ஆரம்பித்துவிட்டாள். ''அம்மா எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம். பச்சைக் கலர் புடவையும் வேண்டாம்.... என்று அழுது கொண்டே கூற அனைவருக்கும் ஒரே சிரிப்புத்தான்.

— எஸ். விஜயலட்சுமி, சென்னை — 44.





சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்



உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிருபணமான ஆன்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாறிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.


OBM/2514/TM

Johnson & Johnson


சில, பல காரணங்களால் இப்ப செய்ய வேண்டிய பிரசவத்தை புதிதொரு மாசம் தள்ளிப் போடறேன்!
பிரசவ வார்டு


பழக்க வழக்கம்


என்னை வீடியோ எடுக்க
படம் போட்
அப்பத்தான் திருமண
பேசுவே


சவக்கிடங்கு
அவர் தூங்கறார்!


ஓ.கே. எலெக்ட்ரிகல்ஸ்
ஓ.கே. எலெக்ட்ரிகல்ஸ்
திறப்பு விழா
மாண்புமிகு
பண்ருட்டி
ராமச்சந்திரன்
அவர்கள்
அனைவரும் வருக!


அமைச்சர் வந்துட்டார்!
அட ராமா! லைட் அணைஞ்சுட்டுதே!


கோயில்
நடத்தத்
தயார்!



எடுத்ததை
காண்பிக்கணும்!
காளிமுத்து
சத்துணவில் பல்லி விழுந்ததற்குக் காரணம் மத்திய அரசே!
பதுங்கற நேரத்துல பதுங்கி, பாய வேண்டிய நேரத்துல பாய உங்க கிட்ட ட்யூஷன் வெச்சுக் கலாம்னு...
ஜெயலலிதா
மரம் நடு விழா! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
மூன்று பேர் சேர்ந்து தூக்கிய மாலையையும் பாராங்கல்லையும் எம்.ஜி.ஆர். ஒருவரே தூக்கினார்! — செய்தி

சொர்க்கத்தின் கதவுகள்

22

ஒரு சில தினங்களாக, மிகுந்த சுறுசுறுப்புடன் இருந்தார் சுவாமிநாதன். கேசவனை நர்ஸிங் ஹோமிலிருந்து 'டிஸ் சார்ஜ்' செய்து அழைத்து வருவதில், தீவிரம் காட்டினார். மஞ்சுளாவை, தங்களுடன் நிறுத்தி வைத்துக் கொண்டு விட்டிருந்தார்.

வீட்டு வேலைகளில் மஞ்சுளா காட்டிய வேகம் அவரை அசர வைத்தது. விமலாவைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்தும் அவருக்கு மஞ்சுளா மூலம் ஓய்வு கிடைத்திருந்தது என்பதும் மறுக்கமுடியாத உண்மை!

''இப்படி ஒரு நாட்டுப் பெண் கிடைக்கிறதுக்கு அருணா கொடுத்து வச்சிருக்கணும்'' விமலா பெருமைப்பட்டுக் கொண்டாள்.

வீடு முழுவதும் மஞ்சுளாவின் வரவைக் கூறுவது போல, அப்படி ஓர் அற்புதமான மாற்றம். நீண்ட நாட்களாக, வரண்டு போன அவர்களது வாழ்வில் பாலைவனச் சோலை போல மஞ்சுளா உலவி வந்தாள்.

''எங்க அஸ்வத்துக்கு என்னெல்லாம் பிடிக்கும். பிடிக்காதுன்னு சொல்றேன். நீ தெரிஞ்சு வைச்சுக் கொள்ளு'' விமலா மெதுவாகக் கூறியபோது, 'க்ளுக்'கெனச் சிரித்தாள் மஞ்சுளா.

''அஸ்வத் எங்கிட்டே சொல்லியாச்சு.''

மஞ்சுளாவைப் பார்க்க அஸ்வத் அடிக்கடி வந்தான். ''அவளோட அப்பாவுக்குச் சொல்லிடணும் அஸ்வத். நம்மை நம்பி இந்தப் பெண் புறப்பட்டு வந்திருக்கு'' சுவாமிநாதன் முதல் நாள் அவனை எச்சரித்து விட்டிருந்தார்.

''பெரியப்பா, கவலைப்படாதீங்கோ. எங்கப்பாக்கு எம் மேலே நம்பிக்கை இருக்கு. அஸ்வத் மனேலே எல்லாரும் ஓ.கே. சொன்னால் அவர் புறப்பட்டு வருவார்'' மஞ்சுளா தயக்கம் இன்றிப் பதில் கூறியது அவரைக் கவர்ந்தது.

தனது திட்டங்களை மிகத் தெளிவாகத் தீட்டி வைத்திருக்கிறாள் என்று உணர்ந்து கொண்டார் அவர்.

அஸ்வத்திடம் முகம் சிவக்க அவள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது அவர் மனம் பாகாய் உருகிப் போய் விடும். ''பாவம் இந்தப் பெண்! எத்தனை நேசமாய் அவனுடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறாள். இளம் ஜோடிக் கிளிகள் போல் இருக்கும் இவர்களைப் பிரிப்பது பாவமான செயல்'' மனத்தினுள் எண்ணினார்.

அருணா முகம் கொடுத்துக் கூடப் பேசத் தயாராக இல்லை என்பதை அஸ்வத் மூலமாக அவர் தெரிந்து கொண்டிருந்தார்.

''அவளை இந்த வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு வந்தியானா, என்னை நீ உசிரோட பார்க்கமாட்டே ஆமாம்'' மகனிடம் அருணா சவால் விடுத்திருந்தாள்.

அஸ்வத் இதற்கிடையில் இரண்டு முறை பெங்களூர் சென்று வந்தான். அலுவலக வேலைகளைக் கவனிக்கும் சாக்காகச் சென்னை வந்து போய்க் கொண்டிருந்தான்.

ஒரு வாரம் ஓடிச் சென்றுவிட்டது. அஸ்வத் அன்று காலைதான் பெங்களூரிலிருந்து திரும்பி இருந்தான்.

''அஸ்வத்! ஊரார் வீட்டுப் பொண்ணை இப்படி நம்மகிட்டே நிறுத்தி வைச்சுக்கறது ரொம்பத் தப்புப்பா'' விமலா அவனுக்கு இலேசாகப் புத்திமதி கூறினாள்.

யார் பெற்ற பெண்ணோ, இந்த வீட்டில் வந்து சம்பந்தமில்லாமல் உழைக்கிறதே என்ற கவலை விமலாவுக்கு வந்துவிட்டது. வீட்டைக் கவனித்து, சமையல் செய்து, சுவாமிநாதனுடன் கடைகளுக்கும் சென்று வந்தாள் மஞ்சுளா. பெங்களூருக்குக் கடிதம் எழுதுவாள். அவள் அப்பா, அம்மா எழுதியதை மொழி பெயர்த்து அவளது கன்னடத் தமிழில் கூறுவது வேடிக்கையாக இருக்கும்.

''இத்தனை துறுதுறுத்த பெண்தான் நல்ல நாட்டுப் பெண்ணாக வருவாள். என்ன செய்யறது? எனக்குப் பிள்ளையில்லாமப் போயிடுத்து! அருணாவுக்குப் புத்தியில்லாமல் போயிடுத்தே'' அங்கலாய்த்தாள் விமலா.

''அவளுக்குத் தேவை பணம். பொறுமை குணம் இதெல்லாம் ரெண்டாம் பக்ஷம்'' என்றார் சுவாமிநாதன்.

''இதை எப்படி முடிச்சு வைக்கப் போறேன்? இந்தப் பொண்ணானால் இங்கேயே நமக்கு உழைத்துக் கொண்டு உட்காந்திருக்கு. அஸ்வத் ஓடிப் போயிட்டு,

போயிட்டு வரான்'' கவலையுடன் கேட்டாள் விமலா.

சுவாமிநாதனின் தலையில் வேறு இரு காரியங்கள் பாரமாக ஏறி அழுத்திக் கொண்டிருந்தன. அன்று மாலைதான் கேசவனை வீட்டுக்கு அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டிருந்தார்.


டாக்டர் மோகன் அவருக்குக் கொடுத்த வாக்கை மீறவில்லை என்பது 'பில்' தொகையைப் பார்த்ததுமே சுவாமிநாதனுக்குத் தெரிந்திருந்தது.

''பரவாயில்லேப்பா மோகன். இந்தப் பணத்தை நானே கட்டிடுவேன். சாயங்காலம் அவனை அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்று கூறிவிட்டு வந்திருந்தார்.

காலையில் அஸ்வத் வந்ததும் அவனிடம் கூறினார். ''அஸ்வத்! இன்னைக்குச் சாயந்திரம் ஒரு பையனை அழைத்துக் கொண்டு வரப் போறேன். நீயும் அவனை அவசியம் சந்திக்க வேணும். ராத்திரி இங்கே சாப்பிடலாம்'' என்றார்.

மாலை அஸ்வத், பெரியப்பா வெளியிலிருந்து திரும்பு முன் ஆஜராகிவிட்டான். மஞ்சுளா, சமையலைக் கவனித்துக் கொண்டு விட்டதில் சுவாமிநாதன் நிம்மதியடைந்தவராய், கேசவனை அழைத்து வரக் கிளம்பினார்.

வாயிற்புறத்தில் ஆட்டோ வந்து நின்றதும் பார்வதியம்மாள் பரபரப்புடன் ஓடி வந்தாள். ஆவலை அடக்கமுடியாதவளாய், ''உங்க வீட்டில், கொஞ்ச நாளா, ஒரே விருந்தாளிமயமாய் இருக்கே. நாம் உள்ளே வந்து





அருள்வாக்கு

ஸாதாரணமாகவே ஓர் இயக்கத்துக்கு அது சொல்கிற எதிர்ப்புக் கார்யத்தை வைத்துத்தான் பொதுஜன ஆதரவு கிடைக்கிறது; இந்த அளவுக்கு அது விதிக்கிற விதிகளுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. 'வெள்ளைக்காரனை விரட்டு' என்று காந்தி சொன்னதால் எல்லாரும் அவர் கீழே எதிர்ப்புக் கார்யத்தில் ஒன்று சேர்ந்தார்கள். ஆனால் அவர் விதித்த அஹிம்ஸை, ஸத்யம், ஒழுக்கம், ஈச்வர பக்தி முதலானதை எத்தனை பேர் எடுத்துக் கொண்டார்களென்று பார்த்தால் வருத்தமாகத்தான் இருக்கும். வெள்ளைக்காரனிடம் ஏன் நாம் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதாக அந்நிய ஆட்சியின் அதர்மத்துக்காக அவ்வளவு இல்லாமல் நம்முடைய ஸ்வேச்சா ஸ்வதந்த்ரங்களில் ஆசையால்தான் பெரிய போராட்டம் நடத்தியது. அந்த காந்தியே நம்மை சில தர்மங்களில் கட்டுப்படுத்துகிறார் என்னும்போது அவற்றை ஏற்றுக் கொள்ள மனஸ் இல்லை. பொதுவாக நம்முடைய தப்பை உணர்ந்து நம்மைத் திருத்திக் கொள்வதைவிட, பிறன் தப்பைச் சொல்லி எதிர்ப்பதில்தான் நமக்கு ருசி. நானே உங்களிடம் நாஸ்திகத்தையோ, கன்வர்ஷனையோ எதிர்த்துக் கூட்டம் போடுங்கள் என்று ஒரு வார்த்தை சொன்னால் உடனே பெரிசாக மஹாநாடு நடத்திக் காரஸாரமாகப் பேசி, தீர்மானங்கள் நிறைவேற்றுவீர்கள்; அதுவே சாஸ்த்ர ஆசாரப்படி இப்படி இப்படி இருங்கள் என்று ஓயாமல் சொன்னாலும் கேட்கத் தோன்றுகிறதா?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தொல்லை கொடுக்க வேணும்னு வராமல் இருக்கேன். 'விமலா சுகமா?'' என்று கேட்டாள்.

''இப்போதைக்கு வராமல் இருப்பதே சுகம்.'' மனத்தினுள் எண்ணமிட்டவராய்ச் சுவாமிநாதன் தலையை ஆட்டினார்..

''விருந்தாளியெல்லாம் போனப்புறம் வரேன்னு சொல்லுங்கோ. விமலா தப்பா நினைத்துக் கொள்ளப் போகிறாள்'' என்று பார்வதியம்மாள் சமாதானம் கூறியபடி அகன்றாள்.

சுவாமிநாதன் ஆட்டோவை அனுப்பி விட்டுக் கேசவனுடன் உள்ளே நுழைந்தார். அஸ்வத் வியப்புடன் பெரியப்பாவைப் பார்த்தான். உறவு, பந்தம் என்று இல்லாத யாரோ ஓர் அந்நியனிடம் பெரியப்பாவுக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்ற ஆச்சரியம் அவன் கண்களில் படர, ''இவர்தான் மிஸ்டர் கேசவனா?'' என வினவினான்.

''ஆமாம்'' என்றவர் வாயிற் கதவை மூடி விட்டு, ''உட்காரப்பா கேசவா'' என உபசரித்தார்.

உடல் தெரிய தெம்பில் உள்ளே சென்றான் கேசவன். ''வாப்பா!'' விமலாவின் ஆதரவான மென்குரலில் அவன் சிலிர்த்துப் போனான்.

''எனக்கு இன்னொரு ஜன்மம் கிடைச்சுதும்மா. அதுக்கு இவர்தான் காரணம்'' என்று உணர்ச்சியினால் வார்த்தைகள் தடுமாறின. நெடுஞ்சாண்கிடையாக அவன் அவளை நமஸ்கரித்துவிட்டு, ''ஆசீர்வாதம் கூறுங்கோ'' என்றான்.

''எழுந்திருப்பா! என்ன இது? எங்களால் முடிஞ்சது செய்தோம்.'' விமலா கனிவுடன் கூறிவிட்டு அவனை அருகில் அமரச் செய்தாள்.

இரவுச் சாப்பாட்டின் சுவை அருமையாக இருந்தது. ''அஸ்வத்! நீ ரொம்ப 'லக்கி'ப்பெல்லோ. மஞ்சுளா நன்றாகவே சமைக்கிறா'' பெரியப்பா குறும்பாகக் கண்களைச் சிமிட்டுவதைப் பார்த்து மஞ்சுளா முகம் சிவந்தாள்.

''பெரியப்பா. யூ ஆர் நாட்டி'' என்றான் பதிலுக்கு. ''கொஞ்சம் மைசூர் ரஸம்.....'' என்று உபசரித்தாள்.

''எனக்கு வயிறு ஃபுல். அஸ்வத்தைத் தான் நீ பெங்களூர் ஆசாமி ஆக்கிட்டே. அவனுக்கு ஊத்து மைசூர் ரஸத்தை'' சுவாமிநாதன் சொல்லவும் சிரிப்புப் பரவியது.

சாப்பாட்டிற்குப் பிறகு, சுவாமிநாதன் கேசவனிடம் பேசிக் கொண்டிருந்தார்.

''ஸார்! இனிமேல் என்ன செய்யறதுன்னு மனசு ரொம்பக் குழப்பமா இருக்கு'' அவன் முகத்தில் கலவரம் தெரிந்தது.

''பயந்து வாழ்றதை விடத் தைரியமா இறந்து போறது மேல்னு சொல்லி இருக்கு கேசவா! நீ இனி மேல் புதுசா வாழ்க்கையைத் துவங்கு. இந்த ஊரை விட்டு எங்கேயாவது போய் நல்லபடியாகப் பிழைச்சுக் கொள்ளு.'' சுவாமிநாதன் தைரியம் கூறினார்.



கழுதைக்கு ஒரு மன்றம்!

பாண்டிச்சேரியில் புற்றீசல் போல் பெருகி வரும் ரசிகர் மன்றங்களைக் கண்டித்துச் சில இளைஞர்கள் விநோதமான முறையில் ரசிகர் மன்றங்களைத் துவங்கி வருகின்றனர். பஞ்ச கல்யாணி சினிமாவில் நடித்த கழுதைக்குப் பாண்டி,தேங்காய்த் திட்டுப் பகுதி இளைஞர்கள் தலைமை ரசிகர் மன்றம் தொடங்கி உள்ளனர். இதன் ஆரம்ப விழா கோலாகலமாக நடைபெற்றது. முன்னதாகக் கழுதையை மாலையிட்டு ஊர்வலமாக அழைத்து வந்தனர். ''கழுதையார் வாழ்க'' கோஷம் வானைப் பிளந்தது!

— கோ. திருஞானசெல்வம்.



பம்பாயில் ஒரு கூட்டத்தில் சிவசேனை தலைவர் பால்தாக்கரே பேசிக்கொண்டிருந்தார். நிறைய போலீஸ்காரர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டி அங்கு இருந்தார்கள். அப்பொழுது அவர்களைப் பார்த்து தாக்கரே இவ்வாறு சொன்னார்—

கள்ளச் சாராயம் முதலியவற்றிற்கு போலீஸ் மாமூல் வாங்குவது தெரியும். அதைப் பற்றி அவ்வளவாகக் கவலையில்லை. ஆனால் 'பிரவுன் ஷுகர், டிரக்ஸ்' போன்ற போதைப் பொருள் கள் விற்பவர்களிடம் மாமூல் வாங்கி அந்தக் கொடியவர்களை விட்டுவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரண மாக கேட்டுக் கொள்ளவில்லை. கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். (கையைக் குவிக்கிறார்.)

— செம்பூர் சந்துரு.

''பெரியப்பா! விஷயம் என்னன்னு நானும் தெரிஞ்சு கொள்ளலாமா?'' அஸ்வத் கேட்டபடி அவர் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

சுவாமிநாதன் கேசவனை ஒருமுறை பொருள் பொதிந்த பார்வையால் பார்த்தார். ''பரவாயில்லே. உண்மையைத் தெரிந்து கொள்றதுலே என்ன தப்பு இருக்கு ஸார். மேலும், அவர் உங்க மகன்தானே. வேறே யாரும் இல்லேயே'' கேசவன் உறுதியளித்தான்.

சுவாமிநாதன், கேசவனைப் பற்றிக் கூறியதைக் கேட்ட அஸ்வத் திகைப்புடன் அசையாமல் இருந்தான்.

''பெரியப்பா! உங்களை என்ன சொல்றதுன்னே புரியலே.''

சுவாமிநாதன் திகைப்புடன், ''என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

''யாரும் இல்லாத இந்த இளைஞன் மேலே, அக்கறையும், அனுதாபமும் எடுத்துக் கொண்டு இவ்வளவு செஞ்சிருக்கேனே. இதுக்கெல்லாம் உங்களுக்குப் பணம் ஏது? ட்யூஷன்கூட ஒழுங்காக இல்லே!''

''பணம்.... அதுக்கும் ஏதாவது வழி பிறக்கும் அஸ்வத். இந்தப் பையனுக்கு ஏதாவது வழி பிறந்துவிட்டால், நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். இவனது திறமை, இளமை, முயற்சி எல்லாம் நல்ல வழியில் பயன்படணும்னு ஆசைப்படறேன். அவனுக்கும் அப்படி ஓர் உண்மையான மனோபாவம் ஏற்பட்டிருக்கு. அதனால்..... இவனுக்கு என்ன வழி செய்யறதுன்னு யோசிக்கிறேன். அதைப் பத்தித்தான் பேசறேன்'' என்றார் நீண்ட பிரசங்கியைப் போல்.

அஸ்வத் பெரியப்பாவின் கைகளைச் செல்லமாகவருடினான். ''என்னை அருமையா, அன்பா வளர்த்தேள். இப்ப எனக்காக என் வருங்காலத்திற்கும் துணை பேச வரேள். அதனால் நான் என் பெரியப்பாவுக்கு ஏதானும் செய்ய வேண்டாமா?'' என்று கேட்டான்.

''புதிர் போடறியே.''

''புதிரே இல்லே. எங்க ஆபீஸ்ல புதுசா ஒரு கிளை ஒண்ணு திருநெல்வேலியில திறக்கப் போறா.''

''அதுக்கு நீ போறியாக்கும்'' சுவாமிநாதன் விளங்காதவராய்க் கேட்டார். ''அதுக்கும் நீ எனக்குச் செய்யறதுக்கும் என்ன சம்பந்தம்.''

''அவசரப்படாதீங்கோ. மிஸ்டர் கேசவனுக்கு அவர் தகுதிக்கு ஏத்த மாதிரி ஏதானும் வேலைக்கு ஏற்பாடு செய்யலாம்னு யோசிக்கிறேன்.''

கேசவன் அஸ்வத்தின் பக்கம் திரும்பிக் கரம் கூப்பினான். ''இந்த நன்றியை என் ஜென்மம் உள்ள வரை மறக்க மாட்டேன்.''

''எனக்கு நன்றி சொல்லாதீங்கோ. இவருக்குச் சொல்லுங்கோ'' அஸ்வத் சிரித்தபடி சுவாமிநாதனைக் காட்டினான். அது சமயம் வாயிற்புறம் ஆட்டோ நிற்கும் ஒலி கேட்டது.

''இந்த ராத்திரி நேரத்தில் யார் அது?'' வியப்புடன் கதவைத் திறந்தவர் திகைத்துப் போனார். ஐஸ்வர்யா, குழந்தை கிரணுடன் நின்று கொண்டிருந்தாள்!

(தொடரும்)

a ஃபார் ஆப்பிள்
m ஃபார் மர்டர்

13

விவேக்கின் உடம்பிலிருந்த ரத்தம் பூராவும் உஷார் நிலைக்கு வர, மூளைப் பிர தேசத்துச் செல்கள் அதி கூர்மையாயின. இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் கொண்டு வந்து கொடுத்த யாமினி கொலை தொடர்பான பைஃலை ஓர் அரை மணி நேரம் உன்னிப் பாய்ப் படித்தான். நெற்றியில் லேசாய் வியர்வை கோர்த்திருக்க நிமிர்ந்தான்.

''கோகுல்நாத்.

''என்ன விவேக்?''

''யாமினியோட ஃபாதர் மதர் எங்கே இருக்காங்க?''

''அமிஞ்சிக்கரையில....''

''நான் அவங்களைப் பார்த்துப் பேச ணுமே.''

''இப்பவேவா?'

''ம்....''

''வாங்க போலாம் விவேக்....'' — கோகுல் நாத் மேஜை மேல் கிடந்த தன் தொப்பியை எடுத்துத் தலைக்குக் கொடுத்துக் கொண்டே விவேக் பின் தொடர வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போனார்.

ஜீப் அமிஞ்சிக்கரையை மோப்பம் பிடித் துக் கொண்டு ஓடியது. ஓடிக் கொண்டிருந்த ஜீப்பில் மோவாயை வழுவிக் கொண்டே தீவிரமான யோசனையில் இருந்தான் விவேக்.

ஆனந்தி சுவரோரமாய், ஒரு குப்பைக் காகிதம் மாதிரி படுத்துக் கிடக்க, திருஞானம் மட்டும் கலங்கின கண்களோடு சொல்லிக் கொண்டிருந்தார். விவேக் அவரையே பார்த் தான்.

''எம் பொண்ணுக்கு அடுத்த மாசம் கல் யாணம் ஸார்.... அவளுக்கு இப்படியொரு முடிவு வரும்னு நாங்க கொஞ்சம்கூட நினைச் சுப் பார்க்கலை....''

''இண்டர்வியூநடந்தகம்பெனியோடபேர் என்னன்னு சொன்னீங்க?'' விவேக் மெல்லிய குரலில் கேட்டான்.

''கிட் புட்ஸ்.''

''அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் குடுத் திட்டாங்களா?''

''நான் யாமினியைத் தேடிட்டு போனப்போ, அந்தக் கம்பெனியோட எம்.டி. யாமினியை செலக்ட் பண்ணியிருக் கிறதாச் சொல்லி ஆர்டரை டைப் பண்ணிக் கொடுத்தார்.''

''நீங்க அங்கே போனப்போ டயம் எவ் வளவு இருக்கும்?''

''அஞ்சு மணி இருக்கும்.''

''யாமினி அந்தக் கம்பெனியை விட்டு எத்தனை மணிக்கு வெளியே போயிருக் கான்னு விசாரிச்சுப் பார்த்தீங்களா?''

''ஆரம்பத்துல செண்ட்ரி கேட்ல கேட் டேன் ஸார். யாமினி உள்ளேதான் இருக்கா. வெளியே போகலைன்னு சொன்னாங்க.... அப்புறமாக செண்ட்ரி ஆள் இண்டர்காம்ல விசாரிச்சுப் பார்த்துட்டு யாமினி வெளியே போயிட்டதாச் சொன்னான்.''

''நீங்கஉள்ளேபோனப்பவும்இண்டர்வியூ நடந்திட்டிருந்ததா?'' விவேக் கேட்டான்.

''இல்ல ஸார்.... யாமினிதான் கடைசி கேண்டிடேட்.....''

''உள்ளே போய் நீங்க யாரைப் பார்த் தீங்க?''

''எம். டி. அப்புறம் அவரோட பி.ஏ.''

விவேக் கோகுல்நாத்தின் பக்கமாய்த் திரும்பினான். ''கோகுல்நாத் நீங்க அந்தக் கம்பெனிக்குப் போய் ஏதாவது விசாரிச்சீங் களா?''

''எனக்கு அவங்க பேர்ல சந்தேகமே வரலை விவேக்.''

''எனக்கு லேசாச் சந்தேகம் பொறந் திருக்கு.....'' விவேக் சொல்லிக் கொண்டே எழுந்தான். ''நாம அவங்களைக் கொஞ்சம் உரசிப் பார்க்கணும்....''

திருஞானம் குறுக்கிட்டார்.

''அந்த எம்.டி. ரொம்பவும் நல்லவர் ஸார். என்னைப் பார்த்ததுமே அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் டைப் பண்ணச் சொன்னார். அவராலே யாமினிக்கு எந்த ஆபத்தும் வந் திருக்காது ஸார்.''

விவேக் புன்னகைத்தான்.

''உங்க பொண்ணோட போட்டோ ஏதா வது இருந்தா குடுங்க...'' விவேக் கேட்கவும், மேஜை இழுப்பறையைத் திறந்து, ஓர் ஆல்பத்தை எடுத்து நீட்டினார் திருஞானம்.

''இந்த ஆல்பம் பூராவும் யாமினியோட நிச்சயதார்த்த போட்டோதான் ஸார். உங் களுக்குத் தேவையான போட்டோவை எடுத் துக்குங்க ஸார்.''

விவேக் ஆல்பத்தைப் புரட்டினான்.

ராஜேஷ்குமார்

ஈஸ்ட்மென் நிறங்களில் நிச்சயதார்த்த போட்டோக்கள் கண்களை— இதமாய் வருடி விட, ஒவ்வொரு போட்டோவாய்த் தள்ளித் தள்ளிப் பார்த்துக் கொண்டே வந்தான். எந்தக் கோணத்திலும் அழகாய் இருந்த யாமினி மனசைக் கனமாக்கினாள்.

''இந்தப் போட்டோவை எடுத்துக்கிறேன்....''

தலையில் கனகாம்பரப்பூ பாரத்தோடு சிரிக்கும் யாமினியை ஆல்பத்தினின்றும் பிரித்து எடுத்துக் கொண்டான் விவேக்.

பாதரசத்தைக்கரைத்துஊற்றினமாதிரியான பளீர் வெயில், பல்லாவரத்தில் காய்ந்து கொண்டிருந்தது.

மத்தியானம் பன்னிரெண்டு மணி.

கிட்புட்ஸ் கம்பெனியின் போர்டிகோவில் ஒரு பூனையின் லாகவத்தோடு சத்தம் எழுப்பாமல் வந்து நின்றது ஜீப்.

விவேக்கும் கோகுல்நாத்தும் கீழே உதிர்ந்து, புள்ளி புள்ளியாய்த் தெரிந்த மொசைக் ஹாலில் நடந்து பிரபுவின் அறைக்கு முன்பாய் வந்து நின்றார்கள். கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் ரெடிமேட் புன்னகையோடு தெரிந்த பிரபு தானே கதவைத் திறந்து வரவேற்றார்.

''ப்ளீஸ் கம்.... இன்ஸ்பெக்டர்.''

விவேக்கும் கோகுல்நாத்தும் உள்ளே வந்தார்கள். பிரபு இருக்கைகளைக் காட்ட உட்கார்ந்தார்கள். உள்ளுக்குள் இருதயம் உதறிக் கொண்டாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல் ''எனிதிங்க்.... இம்பார்ட்டெண்ட் இன்ஸ்பெக்டர்....?'' என்று கேட்டார் பிரபு.

''எஸ். திஸ் ஈஸ் மிஸ்டர் விவேக்.... க்ரைம் ப்ராஞ்ச்....''

விவேக் 'ஹலோ' சொல்லிவிட்டு, முழங்கைகளைக் கண்ணாடி மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டான். சொன்னான்: ''மிஸ் யாமினியோட மர்டர் விஷயமா ஒரு சின்ன என்கொய்ரி.....''

''யாமினி?'' முகத்தில் பாவ்லா காட்டினார் பிரபு.

''நீங்க மறந்துட்டீங்க போலிருக்கு. நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி நீங்க இண்டர்வியூ பண்ணி செலக்ட் பண்ணின யாமினி.''

''ஓ.... தட் புவர் கேர்ள்.... டாக்ஸி டிரைவர் கையாலே அநியாயமாச் செத்த பெண் அந்தப்பொண்ணைப்பத்தி உங்களுக்கென்ன தகவல் வேணும்....?''

விவேக் மேஜையின் மேலிருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து மெல்லச் சுழற்றிக் கொண்டே கேட்டான்.

''அன்னிக்கு நடந்த இண்டர்வியூல யாமினிதான் லாஸ்ட் காண்டிடேட் இல்லையா மிஸ்டர் பிரபு....?''

''ஆமா.''

''அந்தப் பொண்ணை இண்டர்வியூ பண்ணும்போது எவ்வளவு நேரமிருக்கும்?''

''நாலேகால் மணி.''

''இண்டர்வியூ எவ்வளவு நேரம் நடந்தது?''

''பத்து நிமிஷம்.....''


''யாமினி எத்தனை மணிக்கு வெளியே போனா?''

''நாலரை மணிக்கெல்லாம் போயிட்டா.''

''ஆர் யூ ஷ்யூர் அபௌட் இட்?''

''ஷ்யூர்.''

''யாமினியோட அப்பா திருஞானம் தன்னோட பொண்ணைத் தேடிட்டு வந்தப்ப செண்ட்ரி ஆள் அந்தப் பொண்ணு உள்ளே



இருக்கிறதாச் சொல்லியிருக்கார். அவரே கொஞ்ச நேரம் கழிச்சு வெளியே போயிருக்கிறதாகவும் சொல்லியிருக்கார் எதனால இந்தக் குழப்பம்?''

எண்ணெயைத் கொட்டு நெற்றியில் தடவி விட்ட மாதிரி வியர்த்தார் பிரபு. காய்ந்து போன தொண்டையில் குரல் கமறச் சொன்னார்:

''யாமினி வெளியே போனதை அந்த சென்ட்ரி ஆள் கவனிச்சிருக்க மாட்டான். மழை பெய்ஞ்சிட்டிருந்த நேரம் அது....''

''அதைஎப்படிகவனிக்காமேவிட்டாங்க?''

''நீங்க பேசற தொனியைப் பார்த்தா, எம் மேலே சந்தேகப்படற மாதிரி தெரியுது மிஸ்டர் விவேக்.

''நோ.... நோ.... மிஸ்டர் பிரபு.... யூ ஆர் ராங்..... யாமினி இந்த கம்பெனியை விட்டு எத்தனை மணிக்கு வெளியே போயிருக்காங்



கிறதுலே ஒரு சின்னக் குழப்பம். நீங்க நாலரை மணிக்கே அவ வெளியே புறப்பட்டதாச் சொல்றீங்க.... ஆனா யாமினி சென்ட்ரல் ஸ்டேஷன்ல அந்த டாக்ஸியிலே ஏறும் போது ஏழு மணி. பல்லாவரம் எக்ஸ்டென் ஷனிலிருந்து சென்ட்ரல் ஸ்டேஷன் போக இரண்டரை மணி நேரமா ஆகும்?''

பிரபு ஜாக்கிரதையாகி எதிரே உட்கார்ந்திருந்த விவேக்கை பயத்தோடு பார்த்தார். 'இவன் சாமான்யப்பட்டவனில்லே' மனசு எச்சரிக்கைக் கொடியை ஏற்றியது. கோட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து, கர்ச்சீப்பை எடுத்து நெற்றியில் ஒற்றிக்கொண்டே, வலியப் புன்னகைத்து விவேக்கை ஏறிட்டார். ''நாலரை மணிக்கு அவ இங்கிருந்து புறப்பட்டதைத்தான் நான் சொல்லமுடியுமே தவிர, அந்த நிமிஷத்திலிருந்து இரவு ஏழு மணி வரை அவ எங்கெங்கே போனா, என்ன செஞ்சிட்டிருந்தான்னு நான் எப்படிச் சொல்ல முடியும்? அதைத் தெரிஞ்சிக்கிறது அவசியம்னா அதை நீங்கதான் முயற்சி எடுத்துக் கண்டு பிடிக்கணும். அது நான் வேலே இல்லே'' என்றார்.

விவேக் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தான். ''ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் மிஸ்டர் பிரபு. நாங்க வர்றோம். உங்க உதவி தேவைப்பட்டா மறுபடியும் இங்கே வருவேன்.''

''வெல்கம்.''

பிரபு வேண்டா வெறுப்பாய்ச் சிரிப்பைக் காட்ட, கைகளைப் பரஸ்பரம் குலுக்கிவிட்டு விவேக்கும் கோகுல்நாத்தும் வெளியே வந்தார்கள். ஹாலில் நடந்தார்கள்.

''என்ன விவேக்?'' கோகுல்நாத் மெல்லிய குரலில் கேட்டார்.

''ஆள் சரியில்லே. தப்புப் பண்ணியிருக்கான்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''சொல்லத் தெரியலே. ஆனா தப்பு இதே கம்பெனியிலே நடந்திருக்கு. இல்லேன்னா ஒரு மனுஷனுக்கு ஏ.ஸி. ரூம்ல இப்படி வேர்க்காது.....''

கோகுல்நாத் தன் மோவாயைக் கீறிக் கொண்டார். ''நீங்க சொல்றதைப் பார்த்தா யாமினியோட மர்டர் இதே கம்பெனியில தான் நடந்திருக்கணும். இல்லையா விவேக்?''

''அது ஒரு அஸ்ஸம்ஷன்..... ஆதாரம் தேடணும்.

''என்ன செய்யலாம் விவேக்?''

''யோசிக்கணும். ஜீப்புல ஏறுங்க.'' சொல்லிக் கொண்டே ஜீப்புக்குள் ஏறப் போன விவேக், போர்டிகோவுக்கு எதிரே தெரிந்த புல்வெளியில் உட்கார்ந்தபடி 'ட்ரிம்மிங்' செய்துக் கொண்டிருந்த அந்தக் கூலிப் பெண்ணைப் பார்த்ததும் சட்டென்று நின்றான். அவளையே பார்த்தான்.

''என்ன விவேக்.... ஏன் நின்னுட்டீங்க?''

''அந்தப் பெண்ணைப் பார்த்தீங்களா?''

''புல்லை வெட்டிகிட்டு இருக்கிற பெண் தானே?''

''ஆமா.''

கோகுல்நாத் அந்தப் பெண்ணையே சில விநாடிகள் வரைக்கும் பார்த்துவிட்டு, ஏதும் புரியாத பாவனையில் விவேக்கைப் பார்த்தார்.

''என்ன விவேக்..... அந்த பொண்ணுகிட்டே என்ன இருக்கு?''

''வாங்க காட்டறேன்.''

வெயிலில் நடந்து அந்தப் பெண்ணை நெருங்கினார்கள்.

இளம் பெண். கறுப்பு முகத்தில் இமிடேஷன் மூக்குத்தி பகட்டாய் மின்னியது. சேலைத் தலைப்பைத் தலைக்குச் சுற்றி அதன் நுனியைப் பற்களால் பற்றியிருந்தாள். கோகுல்நாத்தையும், விவேக்கையும் பார்த்ததும், 'சரக்'கென்று எழுந்து நின்றாள். கையில் புல்வெட்டும் கத்தி தெரிந்தது.

''உம் பேரென்னம்மா?'' விவேக் கேட்டான்.

''மயிலா'' சொன்ன அவள் உடம்பில் பதற்றம் இருந்தது.

விவேக் அவளை நெருங்கி நின்றான். ''இதோ பார் மயிலா.... நான் கேக்கிற கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்லணும்.''

அவள் பீதி படர்ந்த விழிகளோடு தலையாட்டினாள்.

விவேக் சிமெண்ட் திட்டைச் சுட்டிக் காட்டியபடி கேட்டான். ''இந்தச் செருப்பு உன்னோடதா?''

நீலநிற வெல்வெட் பரப்பில் ஜரிகை இழைகள் மேய்ந்து கொண்டிருந்த அந்தப் புதிய செருப்புகளை கோகுல்நாத் திரும்பிப் பார்த்தார்.

மயிலாவின் கண்களில் நீளமாய் ஒரு திகில்.

''எ.... எ.... என்னோடதுதான்யா...''



சமீபத்தில் தாய்லாந்து நாட்டின் தென் மாகாணத்தின் 'YALA' நகரில் ஒரு பாட்டுப் போட்டி நடைபெற்றது. தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேஷியா முதலிய நாடுகளிலிருந்து வந்த சுமார் 1,000 பாடகர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். சுமார் பத்தாயிரம் சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்த இந்நிகழ்ச்சியில் இறுதியாகத் தாய்லாந்து பாடகர்களே வெற்றி பெற்றனர்!

இதில் என்ன ஆச்சரியம் என்று கேட்கிறீர்களா....? பாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவை அனைத்தும் புறாக்கள்!

நன்றி: ஹிந்து

தகவல்: ஆர். அரிகோபி.

"பொய் சொல்லாதே. கண்டு பிடிச்சுடு வோம்.... இந்தச் செருப்பை எங்கிருந்து எடுத்தே? உண்மையைச் சொன்னா போனாப் போவுதுன்னு விட்டுட்டுப் போயிடுவோம்."

"அ.... அ.... அய்யா...." மயிலா திக்கிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள். முகத்தில் நிறையக் கலவரம்.

விவேக் புன்னகைத்தான்.

"நான் சொல்லட்டுமா மயிலா.... நாலஞ்சு நாளைக்கு முன்னாலே, இந்த கம்பெனியில ஒரு இண்டர்வியூ நடந்தது.. அந்த இண்டர்வியூவுக்கு வந்த 'பெண்கள்லே யாரோ ஒருத்தர் இதை போட்டுட்டு வந்திருந்தாங்க.... அந்தப் பொண்ணுக்குத் தெரியாமே, அவ விட்டிருந்த இடத்திலிருந்து நீ இதை எடுத்துக்கிட்டே, அதாவது திருடிக்கிட்டே...."

மயிலா விருட்டென்று குறுக்கிட்டுச் சொன்னாள்.

"நான் திருடலைய்யா...."

"பின்னே?"

"ஹாலு சுவரோரமா ராத்திரி முச்சூடும் கெடந்துச்சய்யா.... மறு நாள் கார்த்தாலே கூட்டிப் பெருக்கப் போன நான் இந்தச் செருப்பைப் பார்த்தேன். யாரோ விட்டுட்டுப் போயிட்டாங்கன்னு நினைச்சு எடுத்து வெச்சிருந்தேன். மானேஜருகிட்டே சொல்லலாம்னு நெனைச்சேன்., எம் மச்சான்தான் வேண்டாம் நீயே போட்டுக்கன்னு சொன்னாரு...."

"இந்தச் செருப்பை கேட்டுக்கிட்டு யாரும் வரலையா?"

"வரல்லீங்கய்யா...."

கோகுல்நாத் கேட்டார். "விவேக்! இந்தச் செருப்பு யாமினியோட செருப்பா இருக்கும்னு நீங்க நினைக்கறீங்களா?"

விவேக் புன்னகைத்தான். "இந்தச் செருப்பு யாமினியோட செருப்புதான் கோகுல்நாத்."

கோகுல்நாத் குழப்பமானார்.

"உ.... உங்களுக்கு எப்படித் தெரியும் விவேக்?"

"யாமினியோட நிச்சயதார்த்த போட்டோ ஆல்பத்தை நீங்க பார்த்தீங்களா?"

"ஆமா."

"அந்த ஆல்பத்திலே சில போட்டோக்கள்லே யாமினி இந்த ப்ளூ கலர் வெல்வெட் செருப்பை போட்டிருந்ததை நான் கவனிச்சேன். அதே மாதிரியான செருப்பை எதேச்சையா இங்கே பார்க்கவும் விசாரிச்சேன்."

கோகுல்நாத்தின் கண்களுக்கு முன்னால் தொங்கிக் கொண்டிருந்த ஒரு குழப்பத் திரை சட்டென்று விலகியது. விவேக் சொன்னான்:

"செருப்போடு உள்ளே வந்த யாமினி அதை மறந்துட்டு போயிருப்பான்னு நான் நினைக்கலை கோகுல்நாத்.

"பின்னே?"

"அவளுக்கு இதே கம்பெனியில



"வெற்றி பெற்ற உங்களிடம் தோல்வி பெற்ற வேட்பாளர் ஏதோ காதில் சொன்னாரே என்ன?"

"எக்கச்சக்கமாச் செலவு செய்துட்டாராம். அவரையும் கொஞ்சம் கவனிக்கச் சொன்னார்!"

— கடுவை கோபால்சாமி.

என்னமோ நேர்ந்திருக்கு....." விவேக் சொல்லிக் கொண்டே திரும்ப, அவனுடைய பார்வையில் ஹாலில் நடந்து வந்து கொண்டிருந்த பிரபு பட்டார். பெரிதாய் புன்னகைத்துக் கொண்டே அவர்களை நெருங்கினார்.

"வீட்லே கெஸ்ட் வந்திருக்காங்க மிஸ்டர் விவேக். நான் லஞ்சுக்குப் புறப்படறேன்."

"ஒரு நிமிஷம் மிஸ்டர் பிரபு...."

"எஸ்...."

"யாமினி தன்னோட ஸ்லிப்பர்ஸை உங்க கம்பெனியிலேயே விட்டுட்டு போயிருக்கா. அவ மறந்து போயிருப்பான்னு நான் நினைக்கலை...."

பிரபு முகம் மாறினார்.

"வாட் டூ யூ மீன்?"

"வித் யுவர் பர்மிஷன். நான் உங்க கம்பெனியை கொஞ்சம் அலசணும்."

"மறுபடியும் சந்தேகப்படறீங்களா?"

"இப்பத்தான் எங்களுக்குச் சந்தேகமே வருது."

"வாங்க. உள்ளே வந்து பாருங்க. குடி போதையிலே டாக்ஸி டிரைவர் செஞ்ச கொலையை, இப்படித் திசை திருப்பி விடறீங்களா?"

பிரபு எரிச்சலாய்க் கேட்டுக் கொண்டே, அவர்கள் இருவரையும் உள்ளே கூட்டிக் கொண்டு போனார்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்.... மிஸ்டர் பிரபு.... நாங்க போலீஸ் மென். சந்தேகம் வந்தா அதை உடனடியாகக் கழுவிக்கணும்."

பிரபு கடுகடுவென்று முன்னால் நடந்தார்.

விவேக் கேட்டான்: "இண்டர்வியூ எந்த ரூம்லே நடந்தது?"

"என்னோட ரூம்லதான்."

"யாமினி இண்டர்வியூ அன்னிக்கு மத்தியானம், அவளோட அப்பாவுக்கு போன் பண்ணும்போது மெடிகல் டெஸ்ட்டும் கண்டக்ட் பண்றதாச் சொல்லியிருக்கா.... வாஸ்தவமா?"

"ஆமா."

"மெடிக்கல் டெஸ்ட், எந்த ரூம்லே நடந்ததுன்னு சொல்ல முடியுமா?"

''வாங்க காட்றேன்....'' நெஞ்சப் பிர தேசம் திக்திக்கென்று அடித்துக் கொண்டா லும் பிரபு இயல்பாய் நடந்து போய் மெடிக் கல் செல்லைக் காட்டினார்.

வெறுமனே சாத்தியிருந்த அறைக் கதவை மெல்லத் தள்ளினான் விவேக். கதவு மெது வாய்ப் பின்வாங்க, உள்ளே நுழைந்தான். ஸ்விட்ச் பட்டனைத் தட்டி, ட்யூப் லைட்டுக்கு உயிர் கொடுத்து அறையை வெளிச்சத்தில் நிரப்பினான்.

சுவரோரமாய் இருந்த ஒரு மர பீரோ.

ஒரு மேஜை. ஒரு நாற்காலி.

பார்வையை அசுவாரசியமாய் அறை பூராவும் போட்டுத் தேடிவிட்டு, வாசல் பக்க மாய்த் திரும்பியவன் சட்டென்று நின்றான்.

கீழே, தரையில் திட்டுத் திட்டாய் கறுப்பு நிறத்தில் அந்த அமீபா வடிவங்கள் தெரிய, அதனருகே குனிந்து உட்கார்ந்தான் விவேக்.

''என்ன விவேக்?''

''நெருப்புப் பட்ட மாதிரி இந்த இடம் தீய்ஞ்சு போயிருக்கு. கோகுல்நாத்! இது எப்படீன்னு மிஸ்டர் பிரபுகிட்டே கேளுங்க.''

கோகுல்நாத் பிரபுவின் பக்கமாய் திரும்பினார்.

பிரபு வியர்வையில் இருந்தார். சிரமமாய் எச்சில் விழுங்கிவிட்டுச் சொன்னார்: ''நான் இந்த ரூமுக்கு வர்றதேயில்லே இன்ஸ்பெக்டர். இது ஒரு மெடிக்கல் செல். மருந்து ஏதாவது கீழே கொட்டியிருக்கலாம்....''

விவேக், பிரபு சொன்னதைப் பொருட் படுத்தாமல், மண்டியிட்டு உட்கார்ந்து ஒரு பத்து பைசா நாணயத்தால் அந்தக் கறுப்புத் திற்றலைச் சுரண்டி நாசியருகே கொண்டு போய் முகர்ந்து பார்த்தான். சொன்னான்.

''மேபி ஆசிட்....''

''ஆசிட்?''

''அப்படித்தான் தெரியுது. இதைக் கொஞ்சம் கலெக்ட் பண்ணுங்க கோகுல் நாத். லாப்புக்கு அனுப்பினா என்னான்னு தெரிஞ்சிடும்....''

கோகுல்நாத் அந்தக் கறுப்புத் திற்றலைச் சுரண்டுவதற்காக உட்கார, விவேக் எழ முயன்ற அந்த விநாடியில் —

சுவருக்கும் பீரோவுக்கும் இடைபட்ட, இடைவெளியில் பெருவிரல் பருமனில் ஒரு சின்ன சேலைத் துணுக்குப் பறந்தது; காற்றில்.

விவேக் போய் எடுத்தான்.

அதன் ஓரங்கள் பூராவும் உருகிப் போயிருக்க, தக்காளி நிற போட்டோ பிரிண்டட் சேலைத் துணுக்கு. அது யாமினிக்குச் சொந்தமானது என்று சொல்லியது.

''மிஸ்டர் பிரபு....''

வாய் உலர்ந்து போய் விவேக்கைப் பார்த்தார் பிரபு. அவன் கேட்டான்: ''இதுக்கு என்ன காரணம் சொல்லப் போறீங்க பிரபு?''

பிரபு யோசிக்க,

கோகுல்நாத் குறுக்கிட்டார்: ''யாமினியோட டெட் பாடியில இருந்த அதே கலர் ஸாரியோட துணுக்கு இது மிஸ்டர் பிரபு. யாமினிக்கு இங்கேதான் என்னமோ நடந்திருக்கு.''

''நோ'' வீறிட்டார் பிரபு.

''ஸாரி. நீங்க ஸ்டேஷனுக்கு வர்றீங்க! வந்து நடந்த உண்மையைச் சொல்றீங்க. ப்ளீஸ் கம்.... உங்களைப் ஃபோர்ஸ் பண்ணும் படியா வெச்சுடாதீங்க.''

விவேக் சொல்ல, பிரபு அடங்கிப் போய் வெளியே வந்தார்.

சுத்தமாய் மூன்று மணி நேரம்.

போலீஸின் எட்டாவது சிகிச்சையில் பிரபுவும், பத்தாவது சிகிச்சையில் சந்திர போஸும் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள்.

கல்கத்தா பிராஞ்சுக்கு அப்போதுதான் போயிருந்த கீதாவை உடனே புறப்பட்டுத் திரும்பி வரும்படியாய் பிரபுவின் பெயரில் ஒரு தந்தி கொடுக்கப்பட்டது.

லாக்கப்பை விட்டு வெளியே வந்த டாக்ஸி டிரைவர் கன்னியப்பன் கண்களில் நீர் கோர்க்கக் கையெடுத்துக் கும்பிட்டான், கோகுல்நாத்தையும் விவேக்கையும்.

''இ.... இ.... இன்ஸ்பெக்டரய்யா....''

கோகுல்நாத் புன்னகைக்க, விவேக் சொன்னான்: ''கன்னியப்பா! மொதல்ல உன் டாக்ஸியோட டிக்கிக்கு ஒரு லாக்கை வாங்கிப் போடு. இல்லேன்னா போஸ்ட் பாக்ஸ்ல லெட்டர் போடற மாதிரி எவனாவது பிணத்தைப் போட்டுட்டு போயிடுவான்.''

மெல்ல சிரித்துத் தலையாட்டினான் கன்னியப்பன்.

''போ. மொதல்ல வீட்டுக்குப் போய் உன்னோட முகத்தை உம் பொண்டாட்டி மரகதாவுக்குக் காட்டிடு. இல்லேன்னா கொஞ்ச நேரத்துல ஸ்டேஷனுக்கு முன்னாடி வந்து உட்கார்ந்து ஒப்பாரி வெக்க ஆரம்பிச்சுடுவா'' கோகுல்நாத் சொல்ல —

கன்னியப்பன் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான்.

வெளியே காத்திருந்த அந்த சுதந்திரமான காற்று —

சுகமாய் அவனை அலம்பிக் கொண்டு போயிற்று.


(முற்றும்)

வாசகர்: உங்க பத்திரிகையில் எல்லாப் படைப்பும் தரமா இருக்கே, எப்படித் தேர்ந்து எடுக்கிறீங்க?

பத்திரிகை ஆசிரியர்: எல்லாம் குலுக்கல் முறையில்தான்!

— கடுவை கோபால்சாமி.





அடடா! உன் உடம்பிலே ரத்தம் ரொம்பக் குறைஞ்சு போச்சே! டார்டாய்ஸ் கொசுவர்த்திலேந்து தள்ளியே இரு.
கொசுக்களுக்கு உடல்நலக்கேடு, மனிதர்களுக்கு ஆரோக்கியம்...
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
சபாஷ்! நீ முதலாவதாகத் தேறியிருக்கே! ராத்திரி பூரா விளக்கு எரிய விட்டியா?
அத்தோட, டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் எரியவிட்டு நிம்மதியா ராத்திரி பூரா படிச்சேன்
கொசுக்களின் எதிர்ப்பின்றி உடனடி வெற்றி பெறுவீர். டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

கிழக்கு ஓர் உலகம்

12. அசிங்கமாகப் பேசிய பரங்கியர்கள்!

நாண்டியிலிருந்து ஃபீஜியின் தலை நகரான ஸுவாவுக்கு, 'குவின்ஸ் கோச்' என்ற சொகுசு பஸ் காலை 8.30க்குக் கிளம்பிற்று.

"ஃபீஜியின் பசுமை அழகை நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த பஸ் பயணத்தை ஏற்பாடு செய்தோம்" என்று கூறியிருந்தார் நாயுடு.

அவர்களது ஏற்பாட்டிற்காக வழி முழுவதும் நான் மனசில் நன்றி செலுத்தினேன். குளுகுளுவென்ற சீதோஷ்ணமும், பச்சைப் பசேல் என்ற மரங்களும் செடிகளும் பூக்களுமான தாவர எழில் நெஞ்சை அள்ளிக் கொண்டு போயிற்று. வழி நெடுக அங்கங்கே செயற்கைத் தீவுகளை உருவாக்கி மிக இயற்கையாகத் தோன்றும்படி அழகுபடுத்தியிருந்த சுற்றுலாத் துறையின் கைவண்ணம் பிரமிக்கும்படியாக இருந்தது. பயணிகள் இளைப்பாற பஸ் நின்ற இடங்களில் கழிவறைகள் மிக சுத்தமாகவும் நவீன வசதிகளுடனும் இருந்தன.

ஸுவா சற்று மலைப்பாங்கான பிரதேசத்தில் இருக்கிறது. மழை எப்பொழுது ஆரம்பிக்கும் எப்போது சூரியன் பிரகாசிக்கும் என்று சொல்ல முடியாது. என் அதிர்ஷ்டம், பன்னிரண்டு மணிக்கு மிக நவீனமான அழகிய அந்த நகரத்தை அடைந்தபோது பளிச்சென்று வெயிலடித்தது. பஸ்ஸிலிருந்து இறங்கிய என்னை வரவேற்க, சங்கம் ஸ்தாபனத்தின் ஸுவாக்கிளை அங்கத்தினர்கள் ஏழெட்டுப் பேர்களும் ஸுவாவில் இருக்கும் ஐ.ஸி.ஸி.ஆர். கிளை அலுவலக டைரக்டர் வாசுதேவனும் வந்திருந்தார்கள். மறுநாள் மாலை இந்திய பண்பாட்டுக் கேந்திரத்தில் எனக்கு ஒரு வரவேற்பு ஏற்பாடு செய்திருப்பதாகவும் நான் அங்கு உரையாற்ற வேண்டும் என்றும் வாசுதேவன் கேட்டுக் கொண்டார்.

பண்டாரம் என்ற தம்பதிகளின் வீட்டில் தங்க எனக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இருவரும் கல்வித்துறையில் பணியாற்றியவர்கள். தோட்டக் கலையில் உள்ள ஆர்வத்தின் காரணமாய் உத்தியோகத்திலிருந்து தாமாக ஓய்வு பெற்றுத் தோட்ட வேலையை மேற்கொண்டிருக்கிறார்கள். நவீன மோஸ்தர் வீட்டைச் சுற்றி மிக அழகிய ஆர்க்கிட்களும் பல தினுசுப் பூச்செடிகளும், தொட்டிச் செடிகளும் கொண்ட தோட்டம். அவர்களுடைய பூக்களுக்கும் செடிகளுக்கும் ஏக கிராக்கியாம். மனசுக்குச் சந்தோஷத்தை அளிக்கும் இந்த வேலையில் நல்ல வருவாயும் கிடைப்பதாகத் திருமதி பண்டார்ரம், திருப்தியுடன் சொன்னார். அவர் பேச்சில் தாவர இயல் பற்றிய அறிவு பூர்வமான ஞானம் தெரிந்தது.

அன்று மியூஸியத்துக்கும், பஸிஃபிக் ஹார்பர் என்ற ஒரு செயற்கைத் தீவுக்கும் செல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள். என்னை அழைத்துச் செல்ல சீதாலக்ஷ்மி, ராஜலக்ஷ்மி





பண்டாரத்தின் வீடு



என்ற இரண்டு பெண்மணிகள் வந்தார்கள்.

நண்பர்கள் எச்சரித்திருந்தபடி திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. மழையிலேயே மியூஸியத்தையும் பஸிஃபிக் ஹார்பர் தீவையும் பார்த்தோம். திரும்பும் வழியில் கூலி ஆட்களாய் வந்தவர்களில் யாரேனும் உயிருடன் இருந்தால் சந்திக்க ஆசைப்படுவதாகத் தெரிவித்தேன்.

"என் வீட்டின் எதிர்த் தெருவிலேயே ஓர் அம்மாள் இருக்கிறார்" என்றார் ராஜலக்ஷ்மி உற்சாகமாக. "எந்த அளவுக்கு அவங்களுக்குப் பழைய ஞாபகமிருக்குமோ, தெரியாது" என்றார்.

என் ஆர்வம் வீண் போகவில்லை. அதிசயமான ஞாபக சக்தி இருந்தது அந்த அம்மாளுக்கு. காது கொஞ்சம் மந்தம் என்பதைத் தவிர பார்க்க நல்ல திடமாக இருந்தார். வயது உத்தேசமாக எண்பதுக்கு மேல்

என்ருர்கள். கேட்ட கேள்விகளுக்குக் குழப்பமில்லாமல் கணீரென்று தெளிவாக அவர் பதில் சொன்னது எனக்கு மிக வியப்பாக இருந்தது.

நான் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன்' என்று அறிமுகப்படுத்தப்பட்டதும் அவரது கண்களில் சட்டென்று பாய்ந்த ஒளியை என்னுல் வர்ணிக்க இயலாது. அவர்களது ஹிந்தியில் உற்சாகமாகப் பேசினுர்.

"என் பெயர் ராம்பியாரி. பிறந்தது எந்த கிராமம்னு நினேவில்லே. ஓர் அண்ணனும், அக்காவும் இருந்தது நினேவிருக்கு. அப்பா இறந்து போனுர். பெயர் ஞாபகமில்லே. ஒரு நாள் நான் தெருவிலே விளேயாடும்போது எங்கம்மா என்னே எங்கேயோ அழைத்துக் கொண்டு போனுள். பிறகு கப்பல்லே ஆறு வாரம் பிரயாணம் செய்தோம். நான் பயத்திலே வழி முழுவதும் அழுதது நினேவிருக்கு. ஃபீஜியிலே கரும்புத் தோட்டத்திலே வேலே செய்யப் போறேம்னு சொன்னுர்கள். எனக்கு அப்ப ஏழு வயது. கப்பலின் பெயர் மல்தா — I. (அரசாங்கக் குறிப்பில் மல்தா—I 1911 ல் வந்ததாக எழுதப்பட்டிருக்கிறது.) என்னேயும் வேலே செய்ய வைத்துவிடுவார்களோன்னு பயந்து அம்மா என் வயதைக் குறைத்து நாஞ்கு என்று கம்பெனி சர்தார் (மேற்பார்வையாளர்) கிட்டச் சொன்னுள்.

அம்மாவுடைய சம்பாத்தியம் சாப்பாட்டுக்குப் பத்தல்லே. இரண்டு மூணு வருஷத்துக்குப் பிறகு நானும் வயல் காட்டிலே வேலே செஞ்சேன். வேலே ரொம்பக் கஷ்டம். இந்திய சர்தாரே ரொம்ப ஈவு இரக்கமில்லாமெ உதைப்பான்; திட்டுவான். வெள்ளேக்கார சர்தார் அதுக்கு மேலே பாய்வான். கூலி ஆட்கள் சில சமயம் கொடுமை பொறுக்க முடியாமே வேலே நிறுத்தம் செய்வார்கள். உதை வாங்கி ஜெயிலுக்குப் போவார்கள். நானும் அம்மாவும் வேலே நிறுத்தத்திலே கலந்துக்க மாட்டோம். வேலே செய்யும் போதே வயித்துக்குப் பத்தாது. வேலே நிறுத்தம்ஞ முழுப் பட்டினிதான்."

"எல்லா அவமானத்தையும் நீங்கள் வாயை மூடிக் கொண்டேதான் தாங்கிக் கொண்டீர்கள்ளா?"

"இல்லே, ஒரு தடவை நானும் என் சினேகிதிகளும் ஒரு வெள்ளேக்கார சர்தாருக்கு செமை அடி கொடுத்தோம்" என்ருர் ராம்பியாரி கண்களில் விஷமப் புன்னகையுடன். "ஒருநாள் நாங்கள் ஓர் ஆற்ருேரமாக நடந்து கொண்டிருந்தோம். அப்பொழுது ஒரு பரங்கி வந்தான். எங்களேப் பார்த்து அசிங்கமாகப் பேசி 'பிட்ச்' என்று இங்கிலீஷில் திட்டினுன். எனக்கு அதன் அர்த்தம் தெரியாது. ஒருத்திக்குத் தெரிந்திருந்தது. எங்களுக்கு அவள் விளக்கியதும் எங்களுக்கு மகாக் கோபம் வந்தது. எல்லாரும் கையிலிருந்த தடியால் அவனே நன்ருக அடித்து ஆற்றில் தள்ளிவிட்டோம்!"

"அதற்காக உங்களுக்குத் தண்டனே கிடைக்கவில்லேயா?"

"கிடைத்தது. ஏழு நாட்கள் சிறையில் அடைத்தார்கள்."

'கிர்மிட்' காலம் முடிந்ததும் நாகய்யா என்பவரைக் கல்யாணம் செய்து கொண்டாராம். "இப்பொழுது பிள்ளேகள் எல்லாம் சௌகர்யமாக இருக்கிருர்கள். இருந்தும் என்ன? விலேவாசி எவ்வளவு ஏறிவிட்டது!"

"நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிப் போக நினேக்கவில்லேயா?"

"எப்படிப் போவேன்? எங்கிருந்து வந்தேன்னே தெரியல்லியே?"

அந்தக் கண்களில் நிழலாடிய ஏக்கம் பரிதாபமாக இருந்தது.

மழை கொட்டோ கொட்டென்று கொட்டியதை லட்சியம் செய்யாமல்



வாஸந்தி



மனைவி: என்னங்க.... நம்ம பையனும் பெரியவனா ஆனா உங்களாட்டம் அரசியல் வாதியாத்தான் வருவான் போலிருக்கு.

அரசியல்வாதி கணவன்: எப்படிச் சொல்றே?

மனைவி: சாரை சாரையாப் போற எறும்புங்களையெல்லாம் பார்த்துட்டு, என்கிட்டே, 'எறும்புங்க பேரணி நடத்துது பாரும்மா'ங்கறான்.

— இரா. சம்பத் குமார்.

இன்னொரு பெரியவரிடம் அழைத்துப் போவதாக சீதாலட்சுமி சொன்னதும் நான் உற்சாகத்துடன் கிளம்பினேன்.

மேலு ஸிங்கிற்கு வயது தொண்ணூறு என்றார் அவருடைய மகள். மேலு ஸிங் சுருங்கிப் போன உடம்பாய் மிகச் சோர்வாய் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

"சென்ற வாரம் கிட்டத்தட்ட இறந்து போன நிலையில் இருந்தார். இப்பொழுது தேவலை. அப்பா சென்ற காலத்தைப் பற்றி அதிகமாகப் பேசுவதில்லை" என்றார் மகள்.

மேலு ஸிங்கிற்குக் காது கேட்கவில்லை. அவருடைய செவிக்கருகில் குனிந்து பெரிய குரலில் 'தேசத்திலிருந்து' யாரோ வந்திருப்பதாகச் சொன்னதும் அந்த பஞ்சடைத்துப் போன விழிகள் சட்டென்று உயிர் பெற்றது உண்மை. ராம்பியாரியின் ஞாபக சக்தியும் தெளிவான பேச்சும் இவரிடம் இல்லை.

"தேசத்தைப் பற்றி எதுவுமே சரியா ஞாபகமில்லை" என்றார் முதலில். "தேசத்தின் முத்திரை மட்டும் கையில் இருக்கு" என்று அம்மைத் தடுப்புத் தழும்பைக் காண்பித்தார். பிறகு மெல்ல, மிகச் சிரமப்பட்டு ஞாபகங்களைத் தோண்டி எடுத்து விஷயத்தைச் சொன்னார்:

"நான் ராய்ப்பூரைச் சேர்ந்தவன் என்னுடைய அம்மா, மாமியார் கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு ஓடிவிட்டாள். கப்பல் ஒன்று எங்கோ கிளம்புகிறது என்று கேள்விப்பட்டு என்னையும் இழுத்துக் கொண்டு கப்பல் ஏறிவிட்டாள். எனக்கு அப்பொழுது ஒன்பது வயது. அம்மா கூலி வேலை செய்தாள். அவளுக்கு ரொம்ப உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. ஒரு சமயம் இரண்டு நாள் விடாமல் காய்ச்சல் அடித்தது. யாரும் அவளுக்கு மருந்து கொடுக்கவில்லை. நான் அவளை . ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகணும் என்று ஒரு கைவண்டியை எடுத்து வந்து அவளை உட்கார்த்திக்கிளம்பினேன். அவள் வழியிலேயே இறந்துவிட்டாள்.... நான் கூலி வேலைக்குப் போக இஷ்டப்படாமல் வெள்ளைக்காரக் கம்பெனிகளில் சமையல் வேலையில் சேர்ந்து கொண்டேன். என்னைப் போலவே இங்கு வந்து அனாதையாகிப் போன ஒரு பிராம்மணப் பெண்ணை ஸுவாவில் கல்யாணம் செய்துகொண்டேன்.....மற்றவர்கள் கஷ்டப்பட்ட அளவு நான் கஷ்டப்படவில்லை."

அன்று இரவு பண்டாரத்தின் வீட்டில் ஒரு பெரிய விருந்து வைத்தார்கள். வந்திருந்தவர்களில் அப்பாப்பிள்ளை என்ற வயோதிகர் இருந்தார். மிக தீவிரத் தமிழ்ப் பற்றுடையவர் என்று அவர் பேச்சில் வெளிப்பட்டது. ஃபீஜி இந்தியர்களின் எல்லா விருந்துகளிலும் பேச்சுக் கடைசியில் அரசியலுக்குத் திரும்புவதை நான் கவனித்திருந்தேன்.

"ஃபீஜியில் தென்னிந்தியர்கள் வடக்கத்திக்காரனுடைய பாஷையைப் பேச ஆரம்பிச்சதாலே, சொந்த மொழியைப் புறக்கணிச்சதாலே, இரண்டாம் பட்சப் பிரஜையாப் போயிட்டாங்க" என்று அப்பாபிள்ளை ஆரம்பித்தார். "நம்ம குழந்தைங்க ஹிந்தியை ஏன் பேசணும்? வடக்கத்திக்காரன் அதான் அத்தனை மெதப்பா இருக்கான்!" என்றார்.

மற்றவர்களிடையே ஒரு சங்கடமான மௌனம் நிலவிற்று.

"இது ஒரு நாசூக்கான விஷயம்" என்று சமாதானக் குரலில் பண்டாரம் ஆரம்பித்தார். "நீங்கள் தமிழரானதால் தமிழ் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்கிறீர்கள். அடுத்தாற்போல் ஒரு தெலுங்கரும், மலையாளியும் தங்கள் பாஷைகளுக்கு இடம் தர வேண்டும் என்பார்கள். இந்தத் தருணத்துக்காகவே ஃபீஜி அரசு காத்திருக்கிறது. இந்தியர்கள் ஒற்றுமையாக இருந்தால் அவர்களுடைய பலம் அதிகரிக்கும் என்று ஃபீஜி அரசியல்வாதிகளுக்குத் தெரியும். இந்த விஷயங்களில் நாம் தொலை நோக்கோடு சிந்திக்க வேண்டும்" என்றார்.

நான் என்னையறியாமல் அவர்களது வாதத்தில் கலந்து கொண்டு, "இந்தியாவில் இன, மொழி வேற்றுமையில் நடக்கும் சச்சரவுகளைப் பார்த்துக் களைத்துப் போய்விட்டேன். இங்கேயும் அப்படி ஆகிவிடக் கூடாது. உங்களிடையே இப்பொழுது ஒற்றுமை மிக அவசியம். உங்களிடையே சரியான எண்ணப் பரிமாறலுக்கு ஒரே பாஷை பேசுவது நல்லது" என்று சொன்னதும், சரியாக வாங்கிக் கட்டிக் கொண்டேன் கிழவர் அப்பாப்பிள்ளையிடம்.

"அப்பத் தமிழ் வேண்டாம்கிறீங்களா? தமிழ் எழுத்தாளர் என்று பெயர் சொல்லிக் கொண்டு தமிழுக்கு எதிராகப் பேசறீங்களா?" என்று ஒரு போடு போட்டார் அவர்!

(தொடரும்)

ஆகஸ்டுப் புரட்சியின்போது நடந்த வன்முறைச் சம்பவங்களை மஹாத்மா தூண்டிவிடவில்லை என்றாலும் அச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களை அவர் மன்னித்துவிட்டார் என்றும், ரகசியமாக ஜப்பானியர்களுக்கு உதவி வருகிறார் என்றும் பிரிட்டிஷ் இந்திய அரசு திரும்பத் திரும்பக் குற்றம் சாட்டி வந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் இந்தியாவில்மட்டுமின்றி அயல்நாடுகளிலும் (குறிப்பாக அமெரிக்காவில்) பரவின. இக்குற்றச்சாட்டுக்களைத் தக்க ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் அல்லது வாபஸ் பெற வேண்டும் என்று மஹாத்மா கோரினார். வைஸ்ராயுடன் கடிதத் தொடர்பு கொண்டார். பலன் இல்லை. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமலும் வாபஸ் பெறப்படாமலும் இருந்ததால் தமக்கே உரிய, உண்ணாவிரதம் என்கிற பிரத்யேக ஆயுதத்தைப் பிரயோகித்தார் காந்தி. அந்த உண்ணாவிரதம் 21 நாட்களுக்கு நீடிக்கவிருந்தது. தாம் இறக்க விரும்பவில்லைஎன்றும் ஆனால்தமக்குஇழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராட வேண்டிய நிர்பந்த நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார். தனக்கு அவப் பெயர் ஏற்படாமல் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பிரிட்டிஷ் இந்திய அரசு கவலையில்ஆழ்ந்தது.ஆனால்அதேநேரத்தில் லின்லித்கோ பிடிவாதமாக இருந்தார். தமது கைதியின் உண்ணாவிரதத்தைக் கடைசி வரை இருந்து பார்த்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார். காந்தியின் ஈமக் கிரியைக்கான முன்னேற்பாடுகளைக் கவனிக்குமாறு உத்தரவிட்டார். கலவரங்களை ஒடுக்க வேண்டிய போலீஸ் படைகளைத் தயார் நிலையில் வைத்தார்.

1943, பிப்ரவரி பத்தாம் தேதி துவங்கிய உண்ணாவிரதம் எந்தவிதத் துர்சம்பவமும் இன்றி மூன்று வாரங்களுக்குப் பிறகு முடிவுற்றது. காந்தியின் குடும்பத்தினர் சிலர் அவரைக் காண அனுமதிக்கப்பட்டனர். ஸி. ஆரும் அவர்களில் ஒருவர். உண்ணாவிரதத்தின் பதினேழாம் நாள் தொடங்கி, தொடர்ந்து நான்கு நாட்களுக்கு காந்தியைச் சந்தித்துப் பேசினார் ஸி. ஆர். ஒரு வருடத்துக்கு முன் இருவரும் வெளிப்படையாக ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதால் இருவர் மனங்களும் புண்ணாகித்தான் இருந்தன. இப்போது இருவருமே மன்னிப்புக் கேட்கவில்லை. ஆனால் மீண்டும் மனமொன்றியதில் மகிழ்ச்சி அபரிமிதமாகப் பெருகியது. அன்று பிரிட்டிஷ் அரசின் உளவுத் துறை ஊழியர்கள், பம்பாயின் உள்துறை இலாகா காரியதரிசி எச்.வி.ஆர். ஐயங்காருக்குக் கீழ் இயங்கி வந்தனர். அவர்கள் மூலம் செய்தி அறிந்த எச்.வி. ஆர். ஐயங்கார் கூறினார்: "நீண்ட காலத்துக்குப் பிறகு நிகழ்ந்த 'அவர்

ராஜாஜி திட்டம்: மகாத்மாவின் ஒப்புதல்



• காந்தி ஏற்றார், ஜின்னா மறுத்தார்!

களுடைய முதல் சந்திப்பு மிக அன்னியோன்னியமானதாக இருந்தது." வன்முறைகளுக்கும் ரயிலைக் கவிழ்ப்பது போன்ற சதிச் செயல்களுக்கும் ஒட்டு மொத்தமான கண்டனத்தைக் காந்தியிடம் கோரிப் பெற்றார் ஸி.ஆர். அது மட்டுமல்ல. காந்தி கைதான கையோடு வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் எழுதியதாகவும், அக்கடிதத்தில் வன்முறைச் செயல்களை அவர் கண்டித்திருந்ததோடு அவற்றுக்குத் தாம் பொறுப்பு அல்ல என்று குறிப்பிட்டிருந்ததாகவும் அறிந்தார் ஸி. ஆர்.

ஸி. ஆர். நவம்பரில் லின்லித்கோவைச் சந்திப்பதற்கு வெகு நாட்கள் முன்னதாகவே காந்தியின் கடிதம் லின்லித்கோ கைக்குப் போய்ச் சேர்ந்திருந்தது. ஆயினும் வைஸ்ராய் ஸி. ஆரிடம் பேசுகையில், 'செய்தித்தாள்கள் மூலம் விவரம் அறிந்திருந்தும் காந்தி வன்முறைச் சம்பவங்களை எதிர்த்துக் கண்டனம் ஏதும் தெரிவிக்கவில்லை' என்ற தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார். "காந்தியின் கடிதத்தைப் பற்றி லின்லித்கோ தம்மிடம் ஏதும் குறிப்பிடாததற்கு என்ன காரணம்?" என்று நியாயமான கோபத்துடன் கேட்டார் ஸி. ஆர். "நவம்பர் மாதமே இக்கடிதம்பற்றி—மஹாத்மாவின் கண்டனம் பற்றி — எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தால் பல அப்பாவி மக்களைக் கடும் துன்பத்திலிருந்து காப்பாற்றி இருக்கலாம்" என்றார் ஸி. ஆர்.

"மஹாத்மாவும் நானும் இலேசான விஷயங்களைப் பற்றியும் பேசினோம்; கனமான விஷயங்களையும் விவாதித்தோம்" என்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார் ஸி.ஆர். ஃபிரான்ஸிஸ் தாம்ப்ஸனின் 'ஹவுண்ட்ஸ் ஆஃப் ஹெவன்' என்ற கவிதையின் சில பகுதிகளைத் தமக்கு விளக்கிச் சொல்லுமாறு ஸி. ஆரிடம் கேட்டுக் கொண்டார் காந்தி. ஸி. ஆர். அவ்வாறே செய்ய, பிரிட்டிஷ் அரசின் ஒற்றன் ஒருவன் அவ்விருவரும் நாய்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்ததாக வெகு சிரத்தையுடன் மேலிடத்துக்குத் தகவல் தெரிவித்தான்! காந்தியிடம் பேசக் கிடைத்த வாய்ப்பை வீணாக்காமல் ஸி.ஆர். ஜின்னாவின் கோரிக்கைகளைக் குறிப்பிட்டுத் தாம் அதற்கு ஒரு திட்டம் வகுத்துள்ளதாகவும் கூறினார். மஹாத்மா அதை வர்ணிக்கும்படி கேட்க, ஸி. ஆர். விளக்கினார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்கு வாய்ப்பளித்துப் பார்த்துவிட்ட காந்தி, ஸி. ஆரின் திட்டத்துக்கு ஒப்புதல் தெரிவித்தார். ஆனால் ஸி. ஆர். எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமளிக்க விரும்பாமல் தம் திட்டத்தை மஹாத்மாவுக்கு எழுதியே காண்பித்தார். அதைப் படித்துவிட்டுத் தம் ஒப்புதலை மீண்டும் வழங்கினார் காந்தி. அன்று மிகுந்த விவாதத்துக்கும் வசை மொழிகளுக்கும் உள்ளான போதிலும் பின்னால் தீர்க்க தரிசனமானது என்று கருதப்பட்ட ராஜாஜி திட்டத்தின் வெள்ளோட்டம் இவ்வாறுதான் நிகழ்ந்தது. அத்திட்டம் கூறியது:

1. அடியிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு லீக், இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை அங்கீகரிக்கும். காங்கிரஸுடன் ஒத்துழைத்து யுத்தம் நீடிக்கும்வரை ஒரு தற்காலிக அரசு அமைக்க உதவும்.

2. யுத்தத்தின் முடிவில் ஒரு குழு அமைக்கப்படும். அக்குழு, இந்தியாவின் வடமேற்கிலும் வடகிழக்கிலும் முஸ்லீம்கள் பூரணப் பெரும்பான்மையினராக உள்ள தொடர்ச்சியான ஜில்லாக்களை வரையறுத்துத் தரும். இப்படி வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களிடை ஹிந்துஸ்தானிலிருந்து பாகிஸ்தான் பிரிய வேண்டுமா என்று தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்தப்படும். பெரும்பான்மையினர் தனிநாடு உருவாவதை ஆதரித்தால் அந்த முடிவு அமுல்படுத்தப்படும்.

3. பிரிவினை ஏற்படும் பட்சத்தில் பாதுகாப்பு, வர்த்தகம், செய்தித் தொடர்பு மற்றும் பிற அத்தியாவசியத் துறைகளின் நலன் காக்கப் பரஸ்பரம் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படும்.

காந்தியைச் சந்தித்து ஒரு மாதம் கழித்து ஸி. ஆர். ஜின்னாவை பம்பாயில் சந்தித்தார். இருவரும் தொண்ணூறு நிமிடங்கள் பேசினார்கள். ஆனால் ஸி. ஆர். தம் திட்டத்தைப் பற்றியோ மஹாத்மா அதற்கு ஒப்புதல் அளித்தது பற்றியோ ஜின்னாவிடம் தெரிவிக்கவில்லை. சரியான தருணத்திற்காக அவர் காத்திருந்தார். சில நாள் சென்றதும் காந்தியிடமிருந்து சமரசத்துக்கான ஏதேனும் ஒரு தொடக்க முயற்சியைத் தாம் எதிர்பார்ப்பதாக ஜின்னா பத்திரிகை வாயிலாக அறிவித்தார். 'டான்' இதழில் ஜின்னாவின் அறிவிப்பைப் படித்த மஹாத்மா, 'ஒரு கைதியுடன் சந்திப்பு அனுமதிக்கப்படுமெனில் நாம் சந்திக்கலாம்' என்று தெரிவித்து ஜின்னாவுக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தை ஜின்னாவிடம் சேர்ப்பிக்க பிரிட்டிஷ் அரசு மறுத்த போதிலும் அதிலிருந்த செய்தியை மட்டும் அவருக்குத் தெரிவித்தது."காங்கிரஸ்—பிரிட்டிஷ் அரசு சண்டையின் இடையில் சிக்கிக் கொண்டு குழம்பித் தவிக்க நான் தயாராக இல்லை" என்று அறிவித்த ஜின்னா, தாமே ஆரம்பித்து வைத்த சிறு அத்தியாயத்தைச் சீக்கிரமே முற்றுப் பெறச் செய்தார்.

ஆனால் பாகிஸ்தான் பற்றிய தமது கருத்துக்களை ஸி. ஆர். மாற்றிக் கொள்ளவேயில்லை என்பது பிப்ரவரி 1944—ல் தெளிவாயிற்று. "சேர்ந்திருப்பது என்பது துரோகங்களுக்கு அடிகோலவும் கூடும்; பிரிவினையால் அமைதி விளையவும் கூடும்" என்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். "ஒரு பூனையையும் நாயையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி தெருவில் இழுத்துச் சென்றபடியே, "ஆகா! என்ன ஒற்றுமை!" என்று கூறலாம். ஆனால் உண்மையான ஒற்றுமைக்கு வழி, "போக வேண்டுமானால் போ, திரும்பி வர விரும்பினால் வா; இப்போது சேர்ந்திருப்பது போலவே தொடர்ந்து இருக்க விரும்பினால் இரு" என்று கூறுவதில்தான் இருக்கிறது."

தமது பாகிஸ்தான் திட்டத்திற்கு மஹாத்மா

என்ன இண்டியன்ஸ்? சுத்த சோம்பேறிகள்!

ஓர் அமெரிக்கர் சுற்றுலாப் பயணி இந்தியாவைச் சுற்றிப் பார்ப்பதற்காக டில்லி வந்து சேர்ந்தார். உடனே தனக்கு வழிகாட்டியாக ஒரு சர்தார்ஜியை அமர்த்திக் கொண்டார். இருவரும் முதலில் ஒரு டாக்ஸி பிடித்து, ஆக்ரா போனார்கள். ஆக்ராவிலுள்ள செங்கோட்டையின் கட்டட வேலைப்பாட்டையும், கலை நுணுக்கத்தையும் பார்த்து பிரமித்துப் போன அந்த அமெரிக்கர், ''பிரமாதமாக அமைந்துவிட்டது.. இதைக் கட்டி முடிக்க எவ்வளவு காலம் ஆயிற்று?'' என்று சர்தார்ஜியிடம் கேட்டார்.

சர்தார்ஜி, ''இருபது வருடங்கள்'' என்றார். அதற்கு அந்த அமெரிக்கர், ''இந்தியர்களாகிய நீங்கள் சுத்தச் சோம்பேறிகள். இதே போன்ற கட்டடத்தை அமெரிக்கர்கள் ஐந்தே வருடங்களில் கட்டி முடித்திருப்பார்கள்'' என்று சொன்னார். சர்தார்ஜிக்கு எரிச்சலாகத்தான் இருந்தது என்றாலும் பொறுமையாக இருந்தார்.

அடுத்து அவர்கள் பார்த்த இடம் தாஜ்மஹால். அந்த அமெரிக்கர், ''இது போன்ற ஓர் அழகான கலை நுணுக்கத்தோடு கூடிய கட்டடத்தை உலகில் எங்குமே காணமுடியாது'' என்று பாராட்டிவிட்டு, ''இதை எத்தனை வருஷங்களில் கட்டி முடித்தார்கள்?'' என்று கேட்டார்.



சர்தார்ஜி உஷாராகிவிட்டார். உண்மையான காலத்தைச் சொன்னால், இந்த அமெரிக்கர் ஏடாகூடமாக ஏதாவது சொல்வார் என்று கருதி, ''பத்தே வருடங்களில் கட்டி முடித்துவிட்டார்கள்'' என்றார். அமெரிக்கரோ முகத்தைச் சுளித்துவிட்டு, ''இதேவேலையைஎங்கள் அமெரிக்காவில்இரண்டரைவருஷத்தில் முடித்திருப்பார்கள்!'' என்று கூறியதும், சர்தார்ஜிக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. ஆனாலும் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தார்.

அன்று மாலையே இருவரும் அதே டாக்ஸியில் டில்லி திரும்பினார்கள். டில்லியில் உள்ள குதுப்மினார் கோபுரம் அந்த அமெரிக்கரின் கண்ணில் பட்டது.

அமெரிக்கர் குதுப்மினார் பற்றித் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துவிட்டு, வழக்கம் போல, ''அந்தக் கோபுரம் என்ன கட்டடம்? அதைக் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆயின?'' எனக் கேட்டார்.

சர்தார்ஜி அந்த குதுப்மினார் கோபுரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு, ''அடடே! இன்று காலையில்கூட இந்தப் பக்கம்தானே வந்தேன். அப்போது இந்த கோபுரம் இங்கே இல்லையே! ஆக, இன்றுதான் கட்டி முடித்திருப்பார்கள் போலிருக்கிறது. நானே இனிமேல்தான் போய், அது என்ன கோபுரம் என்று விசாரிக்க வேண்டும்!'' என்று பெரிய போடாக ஒரு போடு போட்டார்.

அப்புறம் அமெரிக்கர் ஏன் வாய் திறக்கப் போகிறார்!

சொன்னவர்: குஷ்வந்த் சிங் தகவல்: வெள்ளகால் இரா. கந்தையா

அளித்த ஒப்புதல் ஸி. ஆருக்கு ஒரு மதிப்பு மிக்க துருப்புச் சீட்டாக விளங்கியது. பதி நான்கு மாதங்கள் அதை பிரயோகிக்காமல் தம்மிடமே வைத்திருந்தார் ஸி. ஆர். ஏப்ரல் மாதத்தில் அதனை இறக்கத் தீர்மானித்தார்.

டெல்லியில்ஜின்னாவைச்சந்தித்தஸி.ஆர். அவரை ஆச்சரியப்படுத்த எண்ணி ''மஹாத்மா சம்மதிக்கிறார்'' என்று அறிவித்தார். ''ஒரு தேசிய அரசுக்காக லீகும் காங்கிரஸும் இப்போது இணைந்து போராடினால் காங்கிரஸிடம் பாகிஸ்தானை ஏற்றுக் கொள்ளுமாறு காந்திஜி கூறுவார். இதோ அவர் அங்கீகாரம் பெற்ற திட்டம்.'' ஸி.ஆர். வழங்கிய துண்டுக் காகிதத்தை ஜின்னா படிக்கையில் அவர் முகத்தில் ஆமோதிப்புக் கான அறிகுறிகள் தோன்றக் காத்திருந்தார் ஸி. ஆர். ஆனால் அந்த அறிகுறிகள் தோன்றவே இல்லை. ஸி. ஆர். வகுத்த திட்டத்தின் படி உருவாகக் கூடிய பாகிஸ்தானில் முஸ்லீம் பெரும்பான்மையினரே எல்லா ஜில்லாக்களிலும் வசித்த வடமேற்கு எல்லைப் பிரதேசமும், சிந்தும், பலுசிஸ்தானும் அடங்கும். ஆனால் லீக் விரும்பியதுபோல் பஞ்சாபும் வங்காளமும் முழுமையாக இடம் பெறாது என்பதும், அப் பிராந்தியங்களில் முஸ்லீம்கள் தொடர்ச்சியாகவும் பெரும்பான்மையினராகவும் வாழும் ஜில்லாக்கள் மட்டுமே பாகிஸ்தானில் சேரும் என்பதும் உடனடியாக ஜின்னாவுக்குப் புரிந்து போயிற்று. வாக்கெடுப்பு, மற்றும் பிரிவினை தொடர்பான ஒப்பந்தம் ஆகிய ஷரத்துக்களையும் அவர் கவனித்தார்.

அப்பட்டமாக, ''உங்கள் திட்டம் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை'' என்றார் ஜின்னா. பின்னால் ''உங்கள் சந்திப்பு எப்படி இருந்தது?'' என்று ஸி. ஆரை. ஜி.டி. பிர்லா கேட்டபோது, ''ஜின்னாவுக்கு ரொம்ப வயதாகிவிட்டது'' என்றார் ஸி. ஆர்.

மே மாதத்தில் காந்தியை இன்னமும் விடுதலை செய்யாமல் தொடர்ந்து சிறை வைத்திருப்பதைக் கண்டித்து பிரிட்டிஷ் அரசைத் தாக்கினார் ஸி. ஆர். மலேரியாவாலும் வயிற்றுப் போக்காலும் பாதிக்கப்பட்டு காந்தியின் உடல்நிலை மிகவும் மோசமாகியிருப்பதாகச் செய்தி வெளியாகியிருந்தது. மே ஆறும் தேதி ஸி. ஆரின் கண்டனம் செய்தித் தாள்களில் வெளியான மை காய்வதற்கு முன்பாக, ஆகா கான் அரண்மனைக் கதவுகள் திறக்கப்பட்டு, மகாத்மா விடுதலை செய்யப்பட்டார். கிழவரின் உடல்நிலை உண்மையிலேயே மிகவும் மோசமாக இருப்பதாக பிரிட்டிஷ் அரசிடம் அதன் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தமிழாக்கம்: **சீதாரவி**

ராஜாஜி வாழ்க்கை வரலாறு இரண்டாம் பாகம், பகுதி II முற்றிற்று. பகுதி III கல்கி ஆகஸ்டு ஆண்டு மலரில் ஆரம்பமாகும்.

கண்ணீர்ப் பறவைகள்

பாக்கோ சுற்றுமுற்றும் தேடினான். 'ட்ர்ரிக்' என்று இன்னொரு முறை குரல் கொடுத்தான். அவனுடைய செல்ல 'ட்ர்ரிக்' வரவில்லை. பாக்கோவிற்குக் கவலையாய் இருந்தது.

எங்கே போயிருக்கும் அவனுடைய 'ட்ர்ரிக்?

ஓர் அடர்த்தியான மரம் அவன் பார்வையில் இடற அதன் அருகே ஓடினான். மரத்தின் அடியில் அவனுடைய 'ட்ர்ரிக்' சோர்ந்து போய் அமர்ந்திருந்தது.

'ட்ர்ரிக்' 'ட்ர்ரிக்'

அவனுடைய ட்ர்ரிக் அவனை ஏறிட்டுப் பார்க்கக் கூட முடியாமல் தொங்கவிட்ட தலையுடன் அமர்ந்திருந்தது. பாக்கோ அதனை உள்ளங்கையில் ஏந்தினான். அதன் சூடான இறகுகளை வருடிக் கொடுத்தான். அதன் சின்னத் தலையை ஆசையாய்த் தொட்டான்.

சந்தோஷமாய் மறுமொழி கூறும் 'ட்ர்ரிக்' பதில் எதுவும் சொல்லாமல் இருக்கவே கவலைப்பட்டான்.

சற்று தூரத்தில் வீட்டிலிருந்து அவனது தங்கை ரெகுலா வெளிப்பட்டாள். பாக்கோ அவள் அருகில் ஓடினான்.

''ரெகுலா.... ட்ர்ரிக் பேச மாட்டேன் என்கிறது. அதற்கு உடம்பு சரியில்லை. நான் ஏதாவது மந்திரவாதியைச் சென்று பார்க்கட்டுமா?''

ரெகுலாவிற்கு எரிச்சலாக இருந்தது. குடும்பமே பசி பசி என்று அலைந்து கொண்டிருக்கும்போது, இந்த அண்ணனுக்கு அவனுடைய ஆந்தைதான் பெரிதாகிப் போய்விட்டது.

''போ அண்ணா.... உனக்கு வேறு வேலை இல்லை. ஆந்தைக்கெல்லாம் யாரும் வைத்தியம் பார்க்கமாட்டார்கள். மந்திரமும் போட மாட்டார்கள். அலேரியஸ், நான், நீனா, நீ, நிவியஸ், குயிர்ஸ் எல்லோருமாகச் சேர்ந்து அடுத்த கிராமத்துப் பெரிய பண்ணை வீட்டில் வேலைக்கு அமரப் போகிறோம். நீ அங்கே வந்து மிகவும் பணிவாக நடந்து கொள்ள வேண்டும். யாருக்கும் தொந்தரவு தரக்கூடாது.... சரியா?''

''உன் கணவன் அலேரியஸ் நம் எல்லோரையும் பணக்காரர்களிடம் அடகு வைக்கப் போகிறானா?''

''உனக்குப் பசிக்கவில்லை பாக்கோ?''

''நிறைய..... நிறைய......''

''அப்படியானால் இப்படியெல்லாம் கேட்கக்கூடாது.''

''சரி..... நான் வருகிறேன். என் 'ட்ர்ரிக்' தான் பாவம். பேசவே மாட்டேன் என்கிறது'' என்றான் பாக்கோ. துக்கமான முகத்துடன் அந்த இடத்தைவிட்டு அகன்றான், ட்ர்ரிக்கை வருடிக் கொண்டே.

அவர்கள் எல்லோரும் அடுத்த கிராமத்திற்குப் புறப்படுவதற்குச் சிறிது முன்னால் பாக்கோவின் 'ட்ர்ரிக்' செத்துப் போனது. பாக்கோ விம்மி விம்மி அழுதான். அந்த மரத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறிய சவக்குழி தோண்டினான். ட்ர்ரிக்கை அதில் அடக்கம் செய்தான். மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தான். பிறகு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

அந்தக் குடும்பம் அடுத்த ஊரை அடைந்தது.

பண்ணை முதலாளி நல்ல உயரமாய், மழைக் கால ஷூவெல்லாம் அணிந்து, படியப் படியத் தலை சீவி, ஏறக்குறைய ஒரு ஹீரோ போல் இருந்தார்.

''வா.... வா.... அலேரியஸ்.... இதுதான் உன் குடும்பமா..! இது யார்?''

''இது பாக்கோ. என் மனைவியின் மூத்த சகோதரன். நிறைய வயதாகிவிட்டாலும் கொஞ்சம் வெகுளி. இது என் மனைவி ரெகுலா. இது என் சின்னப் பெண் நீனா. இவள் என் பெரிய மகள் குயிர்ஸ். என் மகன் நிவியஸ் கூடிய விரைவில் இங்கே வரப் போகிறான்....'' தன் குடும்பத்தைப் பெருமையுடன் அறிமுகம் செய்துவைத்தான் அலேரியஸ். மூக்குப் புடைத்து, கோட் அணிந்து, சின்னத் தொப்பி அணிந்து பார்க்க வினோதமாய் இருந்தாலும், பண்ணை முதலாளியிடம் பேசுகையில் மரியாதைக்காக

திரைவிழாப் படக்கதை: 10



இந்த இதழுடன் திரைப்படக் கதைகளுக்கு வந்தனம் சொல்லி வழியனுப்ப உத்தேசம். காரணம், அடுத்த இதழிலிருந்து வேறு சிறப்பு அம்சங்கள் கல்கியில் இடம் பெற இருக்கின்றன என்பது ஒன்று.

இரண்டாவது, நாங்கள் நிறைய அறுக்கிறோம் என்று நீங்கள் நினைக்கத் தொடங்கக் கூடாது என்பது.

கடைசி நாளன்று மறைந்த ஹிந்தி நடிகர் சஞ்சீவ் குமாருக்கு அஞ்சலியாக அவர் நடித்த 'கோஷிஷ்' படம் திரையிடப்பட்டது.

காட்சி முடிந்து வெளியே வருகையில் பப்பரப் பப்பரபீய் என்று பாண்ட் வாசித்தார்கள். சந்தோஷமாய் வழியனுப்பினார்கள்.

விழா முடிந்துவிட்டது என்பதில் விழாவிற்காக பஸ் ஓட்டிய டிரைவர்களுக்குத்தான் அதி சந்தோஷம்! "காலையில ஆறு மணிக்கு வரேன் ஸாப், ராத்திரி ரெண்டு மணிக்குத்தான் வீட்டுக்குப் போறேன்" என்ற அவர்கள் மிக சந்தோஷமாய்க் கடைசி ட்ரிப் அடித்தார்கள்.

விழா முடிந்துவிட்டதே என்று துக்கப்பட்ட பிரதிநிதிகள் பஸ்ஸுக்காகவும், ரயிலுக்காகவும், விமானத்திற்காகவும் கவலைப்படத் தொடங்கினார்கள். ஸீட் கிடைக்குமா?

இந்த விழாவில் திரையிடப்பட்ட இன்னும் சில நல்ல படங்கள் : The Love of Ulysses: (புகைப்படம்) STICO : My First Wife ஆகியன.

இவை தவிர வன்முறைப்படங்கள், போர் சம்பந்தப்பட்ட படங்கள், காதலைச் சித்திரித்த படங்கள் (Nothing But Love) என்று பலவும், பெண்களுக்காகப் பெண்களால் எடுக்கப்பட்ட படங்கள் சிலவும் (BRUTAL) பவனி வந்தன. அவற்றில் நிறையப் படங்கள் மறக்க முடியாதவை. ஆனால் ஸாரி... இங்கே எழுத முடியவில்லை. இதற்காக ஒருமாதிரி மனசைச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம். என்றாலும் "What Is The Time Mr. Clock?" என்று ஒரு ஹங்கேரியப் படம். அந்தக் கதையை எழுதாவிட்டால் எங்களுக்கு விமோசனமே இல்லை என்று நினைத்தோம். கதை மிகப் பெரிது. கல்கியிலோ இடம் அதற்கு மிகக் குறைவு என்ற காரணத்தினால் — கல்கி விடுமுறை மலரில் அதைக் குறுநாவலாக எழுதியிருக்கிறோம். அவசியம் படியுங்கள். அது ஒரு அற்புதமான படம்.

ஸோ —

சந்தர்ப்பங்கள் சரியாக இருந்து, எங்களுக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அடுத்த வருடமும் திரைப்பட விழாவைப் பற்றி எழுதுகிறோம்.

அதுவரை, இத்தனை நாள் பொறுமையாகப் படித்தவர்களுக்கும், எங்களை மனமாரத் திட்டியவர்களுக்கும் வாழ்த்தியவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறோம். குட்பை!

— ஜெயமன் மதன்

அவன் தொப்பியை அகற்றிக் கையில் ஏந்திய போது வியப்பாகத் தெரிந்தது. கூடவே அவன் முன் வழுக்கையில் வியர்வைத் துளிகள் பளபளத்தன.

"உன் குடும்பத்திற்காக அந்தக் குடிசையை ஒழிக்கச் சொல்லியிருக்கிறேன் அஸேரியஸ். அதில் போய் நீங்கள் எல்லோரும் இருந்து கொள்ளுங்கள். ஆனால் உன் வெகுளி மைத்துனனை அத்து மீறி எதிலும் மூக்கை நுழைக்க வேண்டாம் என்று சொல்" என்றார் பெரிய பண்ணை.

பாக்கோ தன் இடுக்கு விழுந்த காவியேறிய பற்களைக் காட்டி 'ஈ' என்று இளித்தான்.

பாக்கோ எங்கிருந்தோ ஒரு குயிலைச் சம்பாதித்துவிட்டான். பழைய 'ட்ரிக்'கை மறந்து இந்த 'குவோய்'வுடன் மிகச் சரளமாகப் பழக ஆரம்பித்துவிட்டான். அவன் வேலை மிகச் சுலபம். எழ வேண்டியது. குவோய்யுடன் சுற்றுப்புறத்தில் உலவ வேண்டியது. அப்புறம் அவனுக்கு மிகவும் பிடித்த நீனாவை இருகைகளிலும் ஏந்திக் கொஞ்ச வேண்டியது.

ரெகுலா எப்போதாவது சின்னச் சின்ன வேலைகளுக்கு அவனை ஏவுவாள். முகத்தைச் சுளித்துக் கொண்டு அந்த 'வேலையைச் செய்துவிடுவான். மற்றபடி அவன் உலகில் இரண்டே ஜீவன்கள். ஒன்று நீனா. இன்னொன்று அந்தக் குயில் குவோய்.

அஸேரியஸ் பெரிய பண்ணையுடன் வேட்டைக்குப் போவான். வேட்டை என்றால் பறவை வேட்டை. அது ஒரு தனி அனுபவம்.



வசந்த காலத் துவக்கத்தில் நீல வானில் வெள்ளை நாரைகள் கூட்டம் கூட்டமாகச் சந்தோஷமாகப் பறக்கும். அவற்றின் சந்தோஷங்களைச் சிதற அடித்து, அந்த வெள்ளைப் பறவைகளைச் சிவப்பாக்கும் அனுபவம்.

பெரிய பண்ணைக்குப் பறவை வேட்டை என்றால் உயிர். கையில் ஒன்றுக்கு இரண்டாகத் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு ஜீப்பில் அடர்ந்த மரங்களுக்கு இடையில் போவார். ஜீப்பின் பின்னால் அஸேரியஸ். கையில் நல்ல வலுவான நீண்ட கயிறு. இன்னொரு கையில் 'கண்ணிப்' பறவை.

ஒவ்வொரு நாளும் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்து அதன் உச்சிக்குப் போவான் அஸேரியஸ். ஓர் உருண்ட கிளையில் கயிற்றைப் போட்டுக் கட்டிவிட்டு அதன் இன்னொரு முனையைக் கண்ணிப் பறவையின் காலில்கட்டிவிட அந்தப்பறவை ஜிவ்வென்று மரத்திற்கு மேல் எழும்பி, அந்தரத்தில் ஆகாயத்தில், ஒரே இடத்தில் பட பட பட பட பட பட படபட படபட!

அன்றைக்கும் அப்படித்தான் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அஸேரியஸ் மரத்தின் மேல் விடுவிடென்று ஏறினான். கிளையில் கயிற்றைச் சுருட்டிக் கட்டினான். பறவையின் காலில் கயிற்றைக் கட்டினான்.

ஏறக்குறைய அதே நேரத்தில் பாக்கோ, நீனாவை — தங்கையின் கடைக் குட்டியை— தன்னுடைய செல்வத்தைக் கையில் ஏந்திக் கொண்டிருந்தான். அந்த ஐந்து வயதுக் குழந்தையின் உடல் கொதித்துக்கொண்டிருந்தது. மந்திரவாதியிடம் கூட்டிப் போகலாம் என்று பார்த்தாலோ, புதிய ஊரில் மந்திரவாதி எங்கே இருக்கிறான் என்றே தெரியவில்லை. ரெகுலாவோ பண்ணை வீட்டில் பெரிய மகள் குயிர்ஸ்ஸாடன் வேலையில் ஆழ்ந்திருந்தாள்.

பாக்கோ குழந்தையைக் கையில் ஏந்தினான். குடிசையை விட்டு வெளியே வந்தான்.

அஸேரியஸ் பறவையைப் பறக்க விட்டான். அந்தக் கயிற்றைப் பற்றிச் சுண்டி விட பறவை படபடக்கத் தொடங்கியது.

மேலே ஆகாயத்தில் ஒரு வெள்ளை நாரைக் கூட்டம். அந்த நாரைகள் அந்தரத்தில் படபடத்த பறவையைப் பார்த்து சட்டென்று திசை மாற்றிக் கொண்டு இதன் அருகில் வர.....

கீழே இருந்த பெரிய பண்ணை சுட்டார்.

டுமீல்.... ஒன்று

டுமீல்.... இரண்டு

டுமீல்.... மூன்று.

அஸேரியஸ் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தான்.

பிடி தவறிச் சட்டென்று மரத்து உச்சியிலிருந்து கீழே விழுந்தான்.

பாக்கோவின் கைகளில் இருந்த நீனா

சட்டென்று தலையைத் தொங்கவிட்டுவிட்டாள். பாக்கோவிற்கு நீனாவின் இழப்புப் புரிந்து போக, பாக்கோ 'ஓ'வென்று அழத் தொடங்கினான்.

அஸேரியஸின் கால் எலும்பு முறிந்து போக, அவன் வலியால் துடிக்க ஆரம்பித்தான்.

பெரிய பண்ணை பொறுமையின்றிக் கத்தத் தொடங்கினார்.

''அஸேரியஸ் கமான்.... சீக்கிரம் எழுந்திரு. பறவைகள் நிறைய வரத் தொடங்கி விட்டன!''

அஸேரியஸ் ஒருமுறை எழுந்து மடங்கி விழுந்தான். ''முடியவில்லை எஜமான்'' என்றான் வலி மிகுந்த குரலில்.

அஸேரியஸின் குடும்பம் இரண்டு பெரிய தாக்குதல்களைச் சந்தித்து இருந்தது. நீனாவின் மரணம். அஸேரியஸின் கால்முறிவு.

பாக்கோ தன் செல்லக் குயிலைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே தேம்பினான்.

அஸேரியஸ் காலில் பெரிய கட்டுடன், மனத்தில் பெரிய பாரத்துடன் படுத்திருக்க, பெரிய பண்ணை குடிசை வாசலுக்கு வந்து கத்த ஆரம்பித்தார்:

''அஸேரியஸ் நாளைக்கு என்னுடன் வர முடியுமா, முடியாதா?''

''இந்தக் காலை வைத்துக்கொண்டு பறவை வேட்டைக்கு என்னால் எப்படி வர முடியும்?'' என்று பரிதாபமாகக் கேட்டான் அஸேரியஸ்.

''அப்படியானால் உனக்குப் பதில் வேறு யாரையாவது ஏற்பாடு செய்.''

''பாக்கோவை அனுப்புகிறேனே!''

''அந்த வெகுளியையா?''

''வேறு வழியில்லை எஜமான்! என் மகனும் இன்னும் வரவில்லையே. என்ன செய்வேன்?''

மறுநாள் பாக்கோ ஜீப்பின் பின்னால் ஏறிக் கொண்டான். தோளில் அவன் குயில்—கண்ணிப் பறவையாக. கையில் கயிறு.

பெரிய பண்ணை ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தார். ''ஏறு'' என்றார்.

பாக்கோ மரத்தில் ஏறி, கயிற்றைக் கிளையில் இறுக்கினான். இன்னொரு முனையை தன்னுடைய குயிலின் காலில் கட்டினான்.

''குவோய்!''

அந்தக் குயில் மேல் எழுந்து அந்தரத்தில் பாக்கோவின் கைவிரல் அசைவுகளுக்கு ஏற்ப படபடக்கத் தொடங்கியது.

பெரிய பண்ணைக்கு அன்றைக்கு அதிர்ஷ்டமில்லை. ஒரு கொக்கு கூடச் சிக்கவில்லை. கடைசி வரை காத்திருந்து, காத்திருந்து சலித்துப் போனார்.

''கீழே இறங்கு முட்டாளே'' என்றார்.

பாக்கோ உடன் தன் காவியேறிய இடுக்குப் பற்களைக் காண்பித்தான். மரக் கயிற்றை அவிழ்த்துவிட்டு இறங்கினான். குயில் அவன் தோளில் தொற்றியது.

அவர்கள் மௌனமாக நடக்கத் தொடங்கினார்கள்.

''உன் குயில் நீ சொன்னால் பறக்குமா?'' என்று கேட்டார் பெரிய பண்ணை.

பாக்கோவிற்கு படு குஷி. எஜமானனிடம் தன்னுடைய திறமையைக் காட்ட ஒரு வாய்ப்பு.

''குவோய்'' என்றான்.

'குபுக்' என்று குயில் அவன் தோளில் இருந்து மேலேறிப் பறந்தது.

பெரிய பண்ணை, பாக்கோ கொஞ்சமும் எதிர்பார்க்காத நேரத்தில், துப்பாக்கியால் குறி வைத்தார்.

'டுமீல்!'

பாக்கோவின் கருப்புக் குயில் சட்டென்று சிவந்து போனது. கருண்டு, கருண்டு தரையைப் பார்த்து இறங்கியது.

பாக்கோ திக்பிரமையடைந்து நின்றுவிட்டான்.

பெரிய பண்ணைக்கே கொஞ்சம் தர்ம சங்கடமாகத்தான் இருந்தது. பாக்கோவைச்

வருடம் முழுவதும்...



எங்கள் நாட்டில்
வருடத்திற்கு ஒரு நாள்
'குழந்தைகள் தினம்'
வருடத்திற்கு ஒரு நாள்
'ஆசிரியர்கள் தினம்'
வருடத்திற்கு ஒரு நாள்
'தொழிலாளர்கள் தினம்'
ஆனால் வருடம் முழுவதும்
வேலையற்றோர் தினம்!!!

— இராம. வெங்கடாசலம்.



சமாதானப்படுத்தத் தொடங்கினார்:

"பாக்கோ..... எனக்கு இன்று வேட்டையாட பறவை கிடைக்காத ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை. அதனால்தான். அதனால் தான்.... ஸாரி.... உனக்கு வேறு ஒரு பறவை கிடைக்காமலா போய்விடப் போகிறது?"

பாக்கோ ஒன்றும் சொல்லாமல் அவரைத் தொடர்ந்தான்.

மறுநாள்.

பெரிய பண்ணையும் பாக்கோவும் பறவை வேட்டைக்குப் புறப்பட்டார்கள். ஒரே ஒரு மாற்றம். நேற்றைக்கு அவனுடைய குயில் இருந்தது. இன்றைக்கு இல்லை. வேறொரு கண்ணிப் பறவை இருந்தது.

பெரிய பண்ணை ஒரு மரத்தைத் தேர்ந்தெடுக்க, பாக்கோ அதன் மேல் ஏறினான்.

பெரிய பண்ணை மரத்தின் அடியில் நின்று துப்பாக்கியைச் சோதித்துக் கொண்டிருந்தார்.

மரத்தில் ஏறிய பாக்கோ, கயிற்றின் ஒரு முனையை மரத்தில் கட்டினான். இன்னொரு முனையை வட்டமாக மாற்றி ஒரு சுருக்கு முடியும் போட்டுக் கீழே மெதுவாக இறக்க...

பெரிய பண்ணையின் மேலே வந்து கயிறு மிக மெதுவாகத் தொட, பெரிய பண்ணை நிமிர்ந்து பார்த்தார்.

'சடக்'கென்று சுருக்குக் கயிறு பெரிய பண்ணையின் கழுத்தை இறுக்கியது. பெரிய பண்ணை இனந் தெரியாத முனகல்களை வெளிப்படுத்த, பாக்கோ அதி வேகமாக அந்தக் கயிற்றை மேலே இழுத்தான்.

பெரிய பண்ணையின் நாக்குத் தொங்கி, கண்கள் பிதுங்கிக் கொண்டன.

The Holy Innocents என்கிற ஸ்பெயின் தேசத்துப் படத்தில் ஒரு ஸ்பெயின் கிராமம், அதன் பெரிய பண்ணை, அந்தப் பண்ணையின் கீழ் வேலை செய்யும் கொத்தடிமைக் குடும்பம் என்று தொடங்கி, 1960 களில் ஸ்பெயின் தேச கிராமங்கள் எப்படி வறுமையில் அல்லாடின என்று காட்டப் புறப்பட்டாலும், கதை என்னவோ திசை மாறி பாக்கோ, அவனுடைய குயில் என்று ஒற்றை மனிதனைச் சுற்றி வரத் தொடங்கி விட்டது. பாக்கோ பாத்திரத்தை ஏற்ற ஆல்ஃப்ரடோ லண்டா, 'பாகப்பிரிவினை' சிவாஜி கணேசனையும், 'பதினாறு வயதினிலே' கமலஹாசனையும் நிறைய நினைவுபடுத்தினார்.

அந்த நீலவானம், அந்த வெள்ளை நாரைகள், மரங்கள், ஜீப் ஓடிய மண்தடம் ஆகியவை ரசிக்கக் கூடியவை. அந்தச் சிறுமி நீனாவின் மரணத்தை மனத்தைத் தொடும்படிச் செய்திருந்தால் படம் இன்னும் ஒருபடி மேலே போயிருக்கும்.

—ஜெயமன் மதன்

உலக புகழ்பெற்ற சித்த வைத்திய பல்கலைக் கழகம்

பிரபல பழனி லயன் டாக்டர் **S.காளிமுத்து** R.M.P. (IND) V.V.C., A.M.I.H. R.A.M.P., R.H.M.P. அவர்களின்



Dr.S.K

தங்க பஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்

சிறப்பானது கை, கால் அதிக தளர்ச்சி, வெட்கம், பயம், நந்தக்குறைவு, கெட்ட கனவுகள் நீங்கி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 60 வேளை விலை ரூ. 120. 90 வேளை ரூ.180. 120 வேளை ரூ.240. வி.பி.பி.யில் பெற எழுதுங்கள். ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது. சித்தவைத்திய சிகிச்சையில் பழனியே முதல் இடம் பெற்றது! பழனியில் பிரதி மாதம் 5 முதல் 8, 13 முதல் 15, 21 முதல் 31 நேரில் சந்தித்து ஆலோசனையும் சிகிச்சையும் பெறலாம்.

சென்னையில் நியூவுட்லண்சில் 1,2,9, to 11,16 to 19 தேதியிலும் ஆலோசனையுடன் நேரில் பெறலாம். எமது கேம்புகளிலும் நேரில் பெறலாம். நற்சாட்சிகள் ஏராளமாக பெற்றது.


லயன் Dr. S.காளிமுத்து R.M.P. (IND) V.V.C,A.M.I.H.

பழனி சித்தர் வைத்திய சாலை (Regd) பழனி-624 601. போன்: 316-316ஏ,630-420 தந்தி : சித்தர்

பத்மநாபன்

அறிமுகம்

பத்மநாபன் : 23 வயது இளைஞன். புத்திசாலி ; போஸ்டல் ஆடிட்டில் உத்தியோகம் பார்த்து ஓய்வுபெற்றவேங்கட்கோபாலனின் இரண்டாவது மகன். முதல் பிள்ளை ரகு என்கிறரகுநாதன். பத்மநாபனுக்கு இஞ்ஜினியர் ஆக ஆசை. பி.யூ.ஸி. முடித்துவிட்டு, தமிழ்நாட்டு இஞ்ஜினீரிங் கல்லூரிகளுக்கு மனுப் போட்டு இடம் கிடைக்கவில்லை. ஆனால் பெங்களூரில் சீட் கிடைத்ததும் அங்கே சேருகிறான்.



அப்பா வேங்கட கோபாலன்



பத்மநாபன்



காட்சி : 1

பத்மநாபனுக்கு ரொம்ப நாளாகவே ஆஸ்த்துமாத் தொல்லை. ஏகப்பட்ட மருந்து, மாத்திரைகள் முழுங்கியும் முழுப் பிரயோஜனமில்லை. 83ல் ஆஸ்த்துமாவுக்காகச் சாப்பிட்ட அளவில்லாத மருந்து, மாத்திரைகள் ஆபத்தில் கொண்டு போய்விட்டுவிட்டன. இரண்டாவது வருஷப் படிப்பை அப்படியே நிறுத்திவிட்டு, மெட்ராஸுக்கு வந்து விடுகிறான். டாக்டர்களிடம் காட்டினதில், ரத்தத்தில் யூரியா அதிகமிருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. மெடிக்கல் டெஸ்ட்டுகள், பத்மநாபனின் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்திருப்பதைத் தெரிவிக்கின்றன. பெரம்பூர் ரயில்வே ஆஸ்பத்திரியில் வாரம் இரண்டு தரம் டயாலிஸிஸ். "இந்த டயாலிஸிஸ் போன்ற வேதனை தரக்கூடிய விஷயம் இந்த உலகத்தில் வேறு ஒன்றுமில்லை. இந்தச் சித்திரவதை இன்னும் எத்தனை நாளைக்கு?" என்று டைரியில் எழுதுகிறான் பத்மநாபன்.

காட்சி : 2

23 வயது இளைஞனை ஆயுள் முழுவதும் டயாலிஸிஸில் வைத்திருப்பது என்பது கொடுமையான காரியம். மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதுதான் ஒரே வழி என்ற முடிவுக்குவருகிறார்கள் டாக்டர்கள். அண்ணனும், அக்காக்களும் தங்கள் சிறுநீரகத்தைத் தருவதாய்ச் சொல்கிறார்கள் தம்பிக்கு. பல்வேறு விதமான டெஸ்டுகள் செய்யப்பட்டு, பொருத்தம் பார்க்கப்படுகிறது. கடைசியில் அண்ணன் ரகுவின் ஒரு கிட்னியை பத்மநாபனுக்குப் பொருத்துவது என்று முடிவு செய்யப்படுகிறது. நாளும் குறித்தாகிவிட்டது.

காட்சி : 3

செப்டம்பர் 84ல் நடந்த கிட்னி டிரான்ஸ்பிளாண்டேஷனுக்குப் பிறகு ஒரு வாரம்வரை தீவிரமான கண்காணிப்பு. ஆனால் பரிதாபம்! புது சிறுநீரகத்தை பத்மநாபனின் உடல் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்துவிடுகிறது. மறுபடி பிரச்னை. குடும்பத்தில் எல்லோரும் மனமுடைந்துவிட்டாலும், பத்மநாபனுக்குத் தைரியம் ஊட்டுகிறார்கள். மறுபடியும் டயாலிஸிஸ் என்றபோது, பத்ம

சாகவில்லை!

நாபனுக்கு வாழ்க்கையில் ஒரு விரக்தியே ஏற்பட்டுவிடுகிறது. இந்தச் சமயத்தில் அவன், தன் டைரியில் எழுதியிருக்கிற வரிகள் கல் நெஞ்சத்தையும் கரைக்கிற மாதிரி உருக்க மானவை.

காட்சி: 4

மறுபடியும் டாக்டர்களின் ஆலோசனை. இன்னொரு தடவை மாற்றுச் சிறுநீரக ஆபரேஷன் செய்வது என முடிவு எடுக்கிறார்கள். மறுபடி மாட்சிங். அப்பா வேங்கட கோபாலனின் ஒரு சிறுநீரகத்தை மகனுக்குப் பொருத்துவது என முடிவு எடுக்கிறார்கள். பத்மநாபன் 'ஓ.கே.' சொல்கிறான். எப்படியாவது இந்த டயாலிஸிஸ் கொடுமையிலிருந்து மீண்டால் போதும் என்கிற எண்ணம் அவனுக்கு. என்ன சும்மாவா? நூறு தடவைக்கும் மேலே அவனுக்கு டயாலிஸிஸ் செய்திருக்கிறார்கள். (ஒவ்வொரு தடவை டயாலிஸிஸுக்கும் கட்டணம் ரூபாய் ஐநூறு.) ஆயிரக் கணக்கில் மாத்திரைகளுக்குத் தனியாய்ச் செலவு.

காட்சி: 5

நவம்பர் 84ல் இரண்டாவது தடவையாக கிட்னி டிரான்ஸ்பிளாண்டேஷன். இப்போது அப்பாவின் கிட்னி. ஆப்ஸர்வேஷன் பீரியட் முடியும் போது, "ஆபரேஷன் சக்ஸஸ்" என்று ஆனந்தத்துடன் கூறுகிறார் டாக்டர் மணி. பத்மநாபனின் குடும்பத்தார் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்!

காட்சி: 6

பத்மநாபனுக்குப் புதுத் தெம்பு பிறக்கிறது. அடுத்தவர் தானத்தால் மறுவாழ்வு பெற்ற அவனது மனம் துறுதுறுக்கிறது. தானும் பிறருக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற அவா உந்த, நேரே கண் வங்கிக்குப் போகிறான். தன் கண்களைத் தனது இறப்புக்குப் பின் தானமாய்த் தர உறுதி மொழி தந்து, அதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து தருகிறான். தன் நண்பர்களுக்கும் ரத்த தானம், கண் தானம் இவற்றைப் பற்றிச் சொல்லி அவர்களையும் தானம் செய்யச் சொல்கிறான். ஆண்டவனுக்கும், ஆபரேஷனை வெற்றிகரமாய்ச் செய்த டாக்டருக்கும் டைரியின் பல பக்கங்களில் நன்றி சொல்கிறான். டாக்டருக்கு, "எப்படி நன்றி சொல்வது என்றே புரியவில்லை" என்று கடிதம் போடுகிறான். இவன் தன் அனுபவங்களை ஆசிரியருக்குக் கடிதமாய் எழுத, அது எக்ஸ்பிரஸில் வெளி வருகிறது. சந்தோஷமாய் இருக்கிறான்.

கிளைமாக்ஸ்

அக்டோபர் 9, 1985 திடீரென்று ஜுரம் வருகிறது. அப்போலோவில் 'இன்டென்ஸிவ் கேர் யூனிட்'டில் அட்மிட் ஆகிறான். 'நத்திங் டு ஒர்ரி' என்கிறார் டாக்டர். அப்போதும் பத்மநாபனிடம் கலகலப்புக் குறையவில்லை. புத்தகம் படிக்கிறான்; பேப்பர் பார்க்கிறான். ரேடியோ கேட்கிறான்; நர்ஸ்களிடமும், டாக்டர்களிடமும் ஜோக் அடிக்கிறான். இரவு ஒன்பது மணிக்கு நெஞ்சு வலி என்கிறான். டாக்டர் மருந்து கொடுத்துத் தூங்க வைக்கிறார். இரவு ஒன்றரை மணிவாக்கில் தண்ணீர் கேட்கிறான். அப்பா வேங்கட கோபாலன் தண்ணீர் கொடுக்கிறார். தண்ணீரைக் குடித்து முடித்து டம்ளரைத் தருகிறான். அப்பாவையே பார்த்துக் கொண்டிருக்கும்போது பத்மநாபனின் உடல் திடீரென ஷாக் அடித்தாற்போல தூக்கிப் போடுகிறது. எல்லாம் ஓவர்.

டாக்டர்கள் விரைகிறார்கள். செயற்கைச் சுவாசம் தர முயற்சிகள் செய்து பயனில்லை. அப்பாவுக்கு மகனின் கண் தானம் பற்றி ஞாபகம் வருகிறது. உடனே டாக்டர்களிடம் சொல்கிறார். டாக்டர்கள் துரிதமாய்ச் செயல்பட்டு, கண்களிலிருந்து 'பாவை'யை ஆபரேஷன் செய்து எடுக்கிறார்கள்.

கட்

இடம்: கண் மருத்துவமனை.

இரண்டு கண் பார்வை இல்லாதவர்கள் அழைத்து வரப்படுகிறார்கள். ஆபரேஷன் நடக்கிறது. ஒருவன் 18 வயதுப் பையன். இன்னொருத்தி ஒன்பது வயதுப் பெண். வெளிச்சத்தைப் பார்க்கிறார்கள். அவர்களின் இருண்ட வாழ்க்கை முடிகிறது.

முடிவு:


பத்மநாபன் இன்னும் சாகவில்லை. இந்த இரண்டு பேர் விழிகள் மூலம் இந்த உலகத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான்.

உண்மைக் கதை: எஸ். சந்திரமௌலி.

புகைப்படங்கள்: யோகா.

அனுராதா ரமணன் எழுதும்

நெருப்பாக நீ



சமூகத் தொடர்

ஆரம்பம்

நீங்கள் கேட்டவை

—தராசு



* கூற்று சரியா?



* அபூர்வ சேர்க்கை



* நற்பெயர் இழப்பு



* என்ன அர்த்தம்?

* டி.எல். ரெட்டி, வேலிடுபட்டி.

? தங்கள் மனம் கண்ணீர் வடித்த ஒரு சூழ்நிலை பற்றி....?

! அதற்கென்ன குறை. தினம் நாளிதழைத் திறந்தாலே மனம் அழுகிற செய்திகள்தானே. (உம்) 83 — 84 ஒரே ஆண்டில் தமிழக அரசின் பஸ்கள் வாங்கிய உயிர்ப் பலி 1,238!

* கே. பிரதாப் சிங், அரகண்டநல்லூர்.

? பொது மக்களின் பிரச்னைகளையும், ஆளும் கட்சியின் பொறுப்பின்மையையும், பத்திரிகைகளில் அம்பலப்படுத்துவதால் மட்டுமே தக்க பயன் கிடைத்துவிடும் என்று நம்புகிறீர்களா?

! பயன் விளைய வேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பு. சம்பந்தப்பட்டவர்கள் ஓரளவு தார்மீக பயத்துடன் இயங்க உதவக் கூடும். சில மரத்துப் போன ஜன்மங்களும் உண்டு. அவர்களைத் திருத்துவதென்பதைவிடத் திரும்பி வரவிடாமல் செய்வதே ஜனநாயகம்.

* ஜி. பாலகிருஷ்ணன், விசலூர்.

? மத்திய அமைச்சர் மக்குவானு டெலிஃபோன் விஷயத்தில் திடீரென்று தடம் புரண்டுவிட்டாரே உண்மை எதுவோ?

! எம். ஜி. ஆர். விஷயத்தில் அவரது குற்றச்சாட்டுக்கு இங்கே அளிக்கப்பட்ட பதில் குற்றச்சாட்டைவிட மோசமான நிலைக்கு நமது முதல்வரைத் தாழ்த்தியது. என். டி. ஆர். விஷயத்திலோ, ஆந்திர முதல்வர் காலை மூன்றரை மணிக்கே எழுந்து அலுவல்களைக் கவனிக்கும் சுறுசுறுப்பாளர் என்பதால் மக்குவானுவின் குற்றச்சாட்டு நம்பும்படியானதாக இல்லை. வியப்பு என்னவென்றால் இப்படி என். டி. ஆருக்கும் எம். ஜி. ஆருக்கும், ஆந்திராவுக்கும் தமிழ்நாட்டுக்கும் வித்தியாசம் தெரியாத ஒருவரை ராஜீவ் மத்திய மந்திரியாகப் பதவி அளித்து வைத்திருப்பதுதான்!

* எம். கல்யாணசுந்தரம், திருநரையூர்.

? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து, நகரசபைத் தலைவர்களிடம் பழைய கணக்குப் புத்தகங்களைத் தர அதிகாரிகள் மறுப்பதேன்?

! அந்த அளவுக்குக் கணக்கு 'சுத்தம்' என்பதுதான் காரணம், வேறென்ன?

* வி. ரமேஷ், பெங்களூர்.

? எவ்வளவு வேகமாக ராஜீவ் நற்பெயரைப் பெற்றாரோ, அவ்வளவு வேகமாக அதனை இழந்தும் வருகிறார் என்று 'நியூஸ் வீக்' பத்திரிகை கூறுகிறதே?

! நியூஸ் வீக்கின் கருத்தை மறுக்கக் காரணங்கள் கிடைக்கவில்லை. என்றாலும் இழந்து விட்டார் என்று கூறாமல் இழந்து வருகிறார் என்றுதான் கூறியுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். நற்பெயர் அடியோடு சரிந்து விழுந்து விடுவதற்கு முன், தடுத்து நிறுத்தி, மீண்டும் உயர்வதற்கான முயற்சிகளை ராஜீவ் மேற்கொள்வது சாத்தியமே. இதற்கு ஒரே வழி யார் சொல்கிறார்கள் என்று பாராமல், என்ன சொல்கிறார்கள் என்று கவனித்து நன்கு யோசித்துச் செயல்படுவதுதான். யோசிக்க அவர் அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

* பாலகிருஷ்ணன், மதுரை

? சினிமாவுக்குச் செல்லும்போது நீர் முன்னால் நடந்து போவீரா? அல்லது மனைவியை முன்னால் நடக்கவிட்டு நீர் பின்னால் செல்வீரா?

! கூட்டமான இடங்களில் வழி ஏற்படுத்திக் கொண்டு முன்னே செல்ல வேண்டும். மனைவி நம்மைத் தொடர்ந்து வர முடியாமல் தடங்கல் ஏற்படுகிறதா என்று திரும்பிப் பார்த்துக் கொண்டும் செல்ல வேண்டும். மற்றபடி அருகருகே இணையாகச் செல்வதுதான் கண்ணியமானது.

* ஜே. பாலச்சந்திரன், நீடாமங்கலம்

? "எங்களை மதிக்காததால்தான் அ.தி.மு.க. வீழ்ந்தது" என்று கூறும் குமரி அனந்தனின் கூற்று சரியா?

! உண்மை! உண்மை! இவருடைய கட்சியோடு திருமதி அகிலேஜ கட்சி இணக்கமாக இருந்ததால்தானே பிலிப்பைன்ஸில் பதவிக்கு



* தடம் புரண்டார்!



* தங்க வீரவாள்

எம்.ஜி.ஆருக்குத் தங்க வீரவாள் கொடுத்தது எதற்கு?

வர முடிந்தது. அதைப் பார்த்தாவது அ.தி.மு.க. பாடம் கற்கட்டும்!

* திருமலை கோவிந்தன், மதுரை

? நடந்து முடிந்த ஊராட்சி, பஞ்சாயத்து தேர்தல் அரசியல் ரீதியாக நடைபெறவே வில்லை என்று கூறும் அமைச்சர் திருநாவுக்கரசு, முதல்வர் பிரசாரத்துக்கு வந்திருந்தால் மக்கள் அரசியல் ரீதியாக வாக்களித்திருப்பார்கள் என்று கூறுகிறாரே, அதற்கு என்ன அர்த்தம்?

! அர்த்தமாவது அர்த்தம், அபத்தம்தான்! சென்ற பொதுத் தேர்தலின்போது அ.தி.மு.க. பெற்ற வெற்றி அரசியல் ரீதியானது அல்லவென்கிறாரா? அப்படியானால் பதவியில் ஏன் இருக்கிறார்கள்?

* ஜி. ஆர். கிருஷ்ணன், தியாகதுர்கம்

? அண்மையில் நெல்லையில் எம்.ஜி. ஆருக்குத் தங்க வீரவாள் கொடுத்துள்ளார்களே, எதற்கு?

! உட்கட்சி சண்டையைச் சமாளிப்பதற்காக இருக்கலாம்.

* ரஜினி குமார், சென்னை—11 *

? தமிழகத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு செல்வாக்கு இல்லையே, ஏன்?

! செல்வாக்கு இல்லை என்று கூறிவிட முடியாது. தொழிற்சங்க ரீதியில் நிறைய செல்வாக்குப் பெற்றுள்ளார்கள். தேர்தலில் மக்களிடம் வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வர முடியாமல் இருப்பதற்குக் காரணம், காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. ஆகியவை எல்லாமே அவர்களது சமதர்மக் கொள்கையைச் சுவீகரித்துப் பின்பற்றுவது போல் காட்டிக் கொள்வதுதான். எல்லாருமே சமதர்மக் கொள்கை பேசும்போது அதற்கென்றே உருவான கட்சியின் பொலிவு குன்றிப் போகிறது. ஒரு பக்கம் சுதந்திரப் பொருளாதாரம்; மறுபக்கம் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம் என்ற இரண்டு கொள்கைகள் மட்டுமே இருந்தால் உண்மையான செல்வாக்கு யாருக்கு என்று எடை போட முடியும். இப்போதோ ஒரே குழப்பம் தான்!

* ஜமாலுதீன், இளையாங்குடி

? மதச் சார்பற்ற நாடு, ஆட்சி என்று கூறிக் கொண்டு தமிழக அரசு கோயில் கோபுரத்தை அரசுச் சின்னமாக்க வேண்டிய அவசியம் என்ன?

! ஆந்திரா தனியாகப் பிரிவதற்கு முன்பாகவே உருவாகிவிட்ட சின்னம் அது. தென்னகம் என்றதுமே கோயில் கோபுரம்தான் நினைவுக்கு வரும். அந்த அளவில் சென்னை மாகாணத்தைப் பளிச்சென்று நினைவுபடுத்தும். மதச் சார்புடன் சிந்தித்து உருவானதாகக் கருதுவதற்கில்லை. நமது தொன்மையான கலைகள், பண்பாட்டின் பிரதிபலிப்பாக உருவானதுதான்.

* ஆனந், ஆங்கரை

? உமதுசிந்தையைச்சிதறஅடித்தசமீபத்திய நிகழ்ச்சி ஒன்றைக் கூறவும்?

! இ. காங்கிரஸ் எம்.பி. வைஜயந்திமாலா தமது கட்சியானது வேலை வாய்ப்புப் பதிவகங்களை ஆங்காங்கே தொடங்க வேண்டும் என்று தெரிவித்த யோசனை உண்மையிலேயே என் மூளையை ஒரு கலக்குக் கலக்கித் தான் விட்டது. வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கும் கொள்கைகளை இ. காங்கிரஸ் அரசுகள் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறாமல், வேலையில்லாதோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள இ. காங்கிரஸ் கட்சி பல நிறுவனங்களைத் தொடங்க வேண்டும் என்று கூறினார் பாருங்கள்! அடடா! என்ன சாமர்த்தியம்! என்ன தீர்க்கதரிசனம்! அசத்தி விட்டார் போங்கள்!

---

* ரூ 10 பரிசு பெறுபவர்:

ரஜினி குமார்,
9, எஸ்.எஸ்.வி. கோவில் தெரு,
சென்னை—600 011.



நத்தைகூட 'சைடு' வாங்கும்!

வட்டமேஜை

* இந்தக் காலத்திலும் இப்படி ஒரு பெண்ணா? 'வருளம்' என்ற இதுவரை நாம் கேள்விப்பட்டிராத அந்தப் பெயரைப் போலவே, 'சினிமா சான்ஸா? நோ தாங்க்ஸ்' எனக் கூறும் பெண்ணும் வித்தியாச மானவர்தான்!

திருச்சி—20. ஆர். அப்துல் சலாம்.

* 'அகல ரயில் பாதை கொண்டு வாருங்கள். அப்புறம் பாருங்கள், மதுரை மாவட்டத்திலே, என அம்மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான காரணங் களையும் நடவடிக்கைகளையும் தனக்கு இருக்கும் ஆழ்ந்த அனுபவத்தின் துணையுடன் மிக அழகாகக் குறிப்பிட் டிருந்தார், நெடுமாறன். இவரது இக்குரல் மத்திய மாநில அரசுகளின் காதுகளில் விழுமா?

கரூர். இரா. வளையாபதி.

* பிரச்னைகளைச் சுட்டிக்காட்டியது மட்டுமில்லாமல், அதற்கு நிவாரணம் அளிப்பதுபோல் நெடுமாறன் கருத்தையும் பிரசுரித்து உங்கள் மேல் நாங்கள் கொண் டுள்ள கருத்தை உயர்த்திவிட்டீர்கள் சார்!

கொடைக்கானல். வி. பாலன்.

* 23.3.86 இதழில் 'அகல ரயில்பாதை தாமதம்' பற்றிய நெடுமாறனது பேட்டியைப் படித்தேன். ரயில் வேக்குத் தேவையான நிலம் கையகப்படுத்தி ஒப்பு விக்கக் கூடிய, மாநில அரசைச் சார்ந்த வருவாய்த் துறை அலுவலகங்களின் அலகுகள், திண்டுக்கல்லிலே மூன்றும் மதுரையில் இரண்டும் உள்ளன. இந்த நிலையில் அகல ரயில் பாதைத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட 3.80கோடியில்நிர்வாகசெலவுக்கென்று 2.50 கோடி (அதிலும் திண்டுக்கல்லில் 2 அலகு; மதுரையில் 1' அலகுகளைச் சார்ந்த ஊழியர்கள் (என் நண்பர் உள்பட) பிப்ரவரி 86 க்கான சம்பளம் சாங்ஷன் ஆகாமல் திண்டாடி நகை லோன் கேட்கிறார்கள்.) போக, கட்டுமானப் பணிக்கு எந்த ரூபாயைப் பயன் படுத்துவதாம்! இந்தத் திட்டத்திற்கு 'இந்த அளவு' நிதி ஒதுக்கினால் பாஸஞ்சர் என்ன, நத்தைகூட இத் திட்டத்தை 'சைடு' வாங்க வேண்டிய அவல நிலைதான் ஏற்படும்.

மதுரை—14. போடி ரவிராஜ்.

* அந்த அர்த்த ராத்திரி மசோதா ஒரு பகுதியினரின் ஓட்டுக்களை எப்போதும் கைவசம் கொள்ள ராஜீவ் செய்த ஏற்பாடு. அதனால்தான் அவர் அந்தப் பழமை வாதிகள் முன்னால் மண்டியிடுகிறார். மசோதா அர்த்த ராத்திரியில் கொண்டு வரப்பட்டாலும் தலையங்கம் விழிப்புடனே இருந்தது.

சென்னை—18. கிங்லி.

* 'எந்தச் சட்டத்தின்படி வாழ விரும்புகிறோம், தீர்ப்புகளைப் பெற விரும்புகிறோம் என்று தீர்மானிக் கும் பொறுப்பை அவரவர் கருத்துக்கு விட்டுவிடுவது நல்லது'' என்ற வரிகளின் மூலம் பாரத பிரதமருக்கும், அவரது அரசுக்கும் சிறுபான்மையோர் குறித்துச் சட்டங்களை இயற்றுவதற்கு ஒரு தெளிவான கருத்தைச் சுட்டிக்காட்டியதை வரவேற்கிறேன்.

பெங்களூர். பொன்னுட்ஷாதாசன்.

* முஸ்லிம்கள் எல்லாச் சட்டங்களையும் தனியாகக் கேட்கவில்லை. எங்கள் மதத்தில் குறுக்கிட வேண்டாம் என்பதே எங்கள் வேண்டுகோள். முஸ்லிம் பெண்கள் மீது எங்களுக்கு அக்கறை இருக்காதா? இந்தியாவில் எந்த மசோதா எதிர்ப்பு இல்லாமல் தாக்கல் ஆகி இருக்கிறது? ஏற்கெனவே வெந்து நொந்து போன உள்ளங்களுக்கு உங்கள் தலையங்கம் மருந்தாக இல்லா மல், சட்டியாக மாறிக் குத்திக் கொண்டிருக்கிறது.

திருச்சி—8. ஏ.கே.ஜே. அக்பர்.

* 'ரிடையர் ஆனதும்' என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்த என் போன்றோர்க்கு வாசகர்களின் ஐடியாக்கள் தெம்பு தரும் டானிக்காக அமைந்தன.

திருச்சி—2. நாக. நடராஜன்.

* ஜெயமன்மதன் சார்! வாரத்துக்குப் பத்துப் படம் பார்த்துட்டு விமர்சனம் எழுதறீங்களே. இது உங்களுக்கே நல்லாயிருக்கா? உங்க கண் கெட்டுடும்; எங்க நேரம், கல்கியில் இரண்டு எக்ஸ்ட்ரா பக்கம் எல்லாம் கெட்டுப் போயிடும். கொஞ்சம் குறைக்கக் கிட்டாத் தேவலாம்.

கொப்பம்பட்டி. செ. அன்பு மதியழகன்.

* பத்துப் படங்களுக்கு ஒரு சேர விமர்சனம் எழுதி னாலும், ஒவ்வொரு படத்திற்கும் ஒவ்வொரு பாணியில் எழுதியிருந்தது ஒண்டர்ஃபுல்.

சாலிகிராமம். பி. சத்தியநாராயணமூர்த்தி.

* வாயில்லா ஜீவனிடம் ஒரு சிறுவன் கொண்டிருந்த பற்றை மட்டுமல்ல, அதிகார வர்க்கம்தான் சாதாரண மக்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்பதையும் அழகாக எடுத்துக் காட்டியது 'ராஜா உன் நாயைப் பிடிச்சிட்டுப் போறாங்க!' சிறுகதை! முடிவு மனத்தை மிகவும் நெகிழ வைத்தது!

சாலிகிராமம். எஸ். சம்பத்குமார்.

* பின் பக்க அட்டைப் படம் இந்தக் கோடை காலத் திற்கு குளுகுளுவென்று கண்ணைக் கவர்ந்ததுடன், ஓர் அழகிய ஹைக்கூ கவிதை போல கருத்தையும் கவர்ந்தது!

திருநெல்வேலி—7. எஸ். கணேசன்.

* முட்டைக்குள் ஓவியமா....? ஆச்சரியம்! ஆச்சரியம்! ஆச்சரியம்! ஓவியர் சண்முகத்துக்கு என் பாராட்டுக் கள்!

பள்ளிபாளையம். கே. ரமேஷ்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



பாரதத்தில்......

புடைவைக் கட்டு
பாரம்பரியம் பேசும்

அலங்காரங்கள்
அந்நியம் காட்டும்

மொழிகள் மாறும்
மோதல்கள் நிகழும்

பிராந்திய வெறி
பீறிட்டு எழும்

ஆயினும்......

காசிக் கண்கள்
ராமேசுவரம் காணும்

தமிழகக் கலைகளைத்
தலைநகர் ஏற்கும்

மனங்கள் ஒன்றும்
மதம் உதவும்

இந்திய உணர்வு
இருந்தே தீரும்

வண்ணப்படம்: யோகா

REGISTERED No.
Registered as a Newspaper in Sri Lanka

